# கட்டுரை மலர்

## தரம் 9

இலக்கிய வித்தகர்
கவிஞர் த. துரைசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை மலர்

## தரம் 9

**இந்நூலில் .....!**

- 32 கட்டுரைகள்
- கடிதங்கள்
- அழைப்பிதழ்கள்
- அறிக்கைகள்
- பழமொழிகள்
- உவமைகள்
- உவமைச் சொற்றொடர்கள்

அனைத்தும் அடங்கியுள்ளன.

- மாணவர்களின் எழுத்தாற்றலையும் மொழித்திறனையும் விருத்தி செய்யும் நோக்குடன் உருவாக்கப் பெற்றது.
- சிறப்புச் சித்திக்குச் சிறந்த துணை.

ஆக்கம்:
இலக்கிய வித்தகர்,
கவிஞர் த. துரைசிங்கம் B.A (HONS), Dip-in-Ed., S.L.E.A.S.
கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

வெளியீடு:
உமா பதிப்பகம்,
521/1 B காலி வீதி, கொழும்பு - 06.

விலை : 130/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரக் குறிப்பு


நூல் : கட்டுரை மலர்.

ஆசிரியர் : கவிஞர் த. துரைசிங்கம்.



© பதிப்புரிமை : நூலாசிரியருக்கு.



முதற்பதிப்பு : நவம்பர், 2003.

வெளியீடு : உமா பதிப்பகம்,
521/1 B காலி வீதி,
கொழும்பு - 06.

அச்சுப் பதிப்பு : பேர்பெக்ட் பிறின்ரேஸ்,
130, டயஸ் பிளேஸ்,
கொழும்பு - 12.

விற்பனையாளர் : லங்கா புத்தகசாலை,
F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12.
T.P.: 2341942



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கட்டுரை எழுதுவதென்பது ஒரு கலை. மாணவர், தம் மொழியறிவின் துணைக் கொண்டே கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். உள்ளத்து உணர்வுகளை ஒரு கட்டுக் கோப்புடன் முறைப்படி ஒழுங்குபடுத்தி அமைத்தலே கட்டுரையாகும். மாணவர் தம் மொழியறிவின் செழுமையை மதிப்பீடு செய்யும் ஒரு கருவியாகக் கட்டுரையினைக் கல்வியாளர்கள் கருதுகின்றனர்.

கட்டுரை எழுதும் பயிற்சியை ஒருவர் ஏற்படுத்திக் கொண்டால் எதையும் ஒழுங்குபடுத்திச் சிந்திக்கின்ற பழக்கம் தானாகவே வந்துவிடும். இளமைப் பருவத்திலிருந்தே கட்டுரை எழுதும் பயிற்சியை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நல்ல கட்டுரைகளை எழுதும் ஆற்றலை மாணவர்களிடையே வளர்த்தல் ஆசிரியர் தம் பெருங் கடனாகும். அப்பெரும் பணியை இலகுவாக்குவதற்கும் மாணவர்களிடையே கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்தற்கும் மாதிரிக் கட்டுரைகள் பெருந் துணைபுரிகின்றன. கட்டுரை மலர் என்னும் இந்நூல் 32 மாதிரிக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. ஒன்பதாந் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்தரும் வெவ்வேறு விடயங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

அறிக்கைகள், அழைப்பிதழ்கள், கடிதங்கள், செய்திகள் போன்றவற்றை எழுதும் முறைகளை அறிந்து கொள்ளவும் துணை புரியும் வகையில் மாதிரிகள் தரப்பட்டுள்ளன.

மாணவர் தம் மொழி வளம் பெருகப் பயன்தரும் வகையில், உவமைகள், பழமொழிகள், உவமைச் சொற்றொடர்கள் என்பனவும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

முன்னாள் கல்விப் பணிப்பாளரும் மாணவர் உலகின் நன்மதிப்பைப் பெற்றவருமான கவிஞர் த. துரைசிங்கம் இந்நூலை ஆக்கியுள்ளார். அன்னாருக்கு எம் நன்றி.

ஆசிரியப் பெருந்தகைகளும் மாணவர்களும் இந்நூலை உவந்தேற்றுப் பயன்கொள்வரென எதிர்பார்க்கிறோம். நன்றி.

- பதிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.......


கட்டுரை எழுதுவது எப்படி? ---------- 1
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ---------- 8
நான் விரும்பும் தொழில் --------- 10
முயற்சி திருவினையாக்கும் --------- 12
பழமொழிகள் --------- 14
சுற்றாடல் பேணிச் சுகம் பெறுவோம் --------- 16
நான் விரும்பும் நூல் --------- 19
வாய்மையே வெல்லும் --------- 22
கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி --------- 24
சூழல் பாதுகாப்பு --------- 26
வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது --------- 29
நான் விரும்பும் விஞ்ஞானி --------- 32
செய்யும் தொழிலே தெய்வம் --------- 36
நான் பார்த்த தேர்த் திருவிழாக்காட்சி --------- 40
அறிவியல் அறிஞர் லூயிஸ் பாஸ்டர் --------- 43
ஒழுக்கம் விழுப்பம் தரும் --------- 45
தேசிய வீரர் சேர்.பொன்.இராமநாதன் --------- 47
நான் விரும்பும் கவிஞர் --------- 49
அகத்தின் அழகு முகத்தில் தெரியும் --------- 54
நான் கல்வியமைச்சர் ஆனால்... --------- 56
ஈழத்து அறிஞர் ஒருவர் (அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ்) --------- 59
செய்தித்தாளின் பயன்கள் --------- 62
பழந்துணி (சுயசரிதை) --------- 65
'பாட்டுப் பூங்கா': சிறுவர் இலக்கியத்திற்கு ஒரு புதுவரவு --------- 68
தகவல் பரிமாற்றம் --------- 71
சிறுதுளி பெரு வெள்ளம் --------- 74
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் --------- 76
பெற்றோரைப் பேணுவோம் --------- 78
பொன் செய்யும் மருந்து --------- 81
சேவையின் சின்னம் அன்னை தெரேசா --------- 83
என் கதை கேளீர்! --------- 87
நயம் மிகு நாட்டார் பாடல்கள் --------- 89
கடிதம் எழுதுவோம். --------- 93
அழைப்பிதழ் எழுதுதல் --------- 98
அறிக்கைகள் ------- 102
பழமொழிகள், உவமைகள் 106 - 118



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# கட்டுரை எழுதுவது எப்படி?

குறிப்புக்கள்:

1. முன்னுரை - கட்டுரை என்பது என்ன?
2. கட்டுரையில் இடம்பெறும் அம்சங்கள்.
3. கட்டுரை வகைகள்.
4. கட்டுரை எழுதும் போது கவனிக்க வேண்டியவை.
5. கட்டுரை எழுதும் போது தவிர்க்க வேண்டியவை.
6. முடிவுரை.

கட்டுரை என்பது உறுதியாகச் சொல்லுதல், தெளிவாகக் கூறுதல் என்று பொருள்படும். ஒரு பொருள் பற்றி எழுதுவோரின் மனத்திலே எண்ணிய எண்ணங்களை ஒரு கட்டுக் கோப்புடன் ஒழுங்குபட அமைத்த உரைப்பகுதியே கட்டுரை எனப்படும். எழுதுபவர் தாம் எழுதப் போகும் பொருள் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். சிந்தித்தவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். ஒன்றைப் பொதுப்படச் சிந்தியாது பல்வேறு நிலைகளில் வைத்துச் சிந்திப்பது சிறந்ததாகும். இவ்விதம் சிந்தித்து நன் முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டுரையானது ஒழுங்கு, தெளிவு, விளக்கம் முதலிய பண்புகள் கொண்டதாக மிளிரும்.

கட்டுரை எழுதும் போது பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. பந்திகள், வரிகள் தொடக்கத்திலில்லாமல் சிறிது வலந்தள்ளித் தொடங்க வேண்டும்.
2. ஒரு பந்தியில் கூறிய கருத்தைப் பிறிதோர் பந்தியில் மீள விவரித்தல் கூடாது.
3. பந்திகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தாக அமைதல் வேண்டும். கட்டுரைப் பொருளை இலகுவில் விளக்கும் வகையில் அவை தொடர்புபடுத்தப் படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாணவர்கள் எழுதும் கட்டுரைகளில் பின்வரும் அம்சங்கள் முக்கிய இடம் பெற வேண்டுமெனக் கருதப்படுகிறது. அவையாவன:

 i) ஒருமைப்பாடு
 ii) ஒழுங்கு
 iii) சுருங்கக் கூறி விளங்க வைத்தல்
 iv) தனித்தன்மை.

ஒருமைப்பாடு:

எக்கட்டுரையானாலும் அதில் ஒருமைப்பாடு இருத்தல் அவசியமாகும். அதாவது சொல்ல வந்த விடயத்தைக் குறிப்பிட்ட நோக்குடன் கூறுவதாக அது அமைய வேண்டும். எடுத்துக் கொண்ட விடயத்தைப் பற்றி எழுதுபவர் மனதில் முதலில் ஒரு தெளிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் விடய வரம்பைத் தாண்டி வெளியில் செல்லக் கூடாது. அதாவது தாம் சொல்ல வந்த விடயத்திற்குச் சம்பந்தமில்லாத வேறு தகவல்களைக் கொடுத்தல் கூடாது. அதேவேளை சொல்ல வந்த விடயத்திற்குப் பொருத்தமான தகவல்களைப் பல்வேறு கோணங்களில் இருந்து எடுத்துரைத்தல் தவறாகாது.

ஒழுங்கு:

எழுதுபவர் தமது எண்ணங்களை வெளியிடுவதில் ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும். தமது கருத்துக்களைக் குறிப்பிட்ட ஒரு முடிவை நோக்கி அழைத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும். மனதில் தோன்றுபவை அனைத்தையும் எழுதிவிடலாகாது. விடயத்தில் ஒருமைப்பாடு இருப்பதோடு விடயத்திற்கு மேலும் வலுவூட்டும் வகையில் விளக்கமளிப்பதிலும் ஒருமைப்பாடு இருத்தல் அவசியமாகும். எனவே கட்டுரையினை எழுதுமுன் எண்ணங்களை ஒழுங்குபடுத்தி நன்கு சிந்தித்துச் சட்டகம் ஒன்றை வகுத்துக் கொண்டு எழுத முற்பட வேண்டும்.

சுருங்கக் கூறி விளக்குதல்:

பாடசாலை மாணவர்கள் எழுதும் கட்டுரைகள் வகுப்புக்களுக்கு ஏற்ப விரிவடைந்து செல்லும். மிக நீளமான கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுவதில்லை. முந்நூறு சொற்கள் முதல் ஐந்நூறு சொற்கள் வரை அவை அமையலாம். கூடுமானவரை சுருங்கக் கூறி விளங்க வைக்கும் முறையில் அவை அமைதல் வேண்டும். எடுத்த விடயத்தைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதுதலே சிறப்புடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழிநடை:**

கட்டுரையில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் பண்புடையனவாக அமைதல் வேண்டும். சீரான மொழிநடையில் இலக்கிய அழகுடன் எழுதப்படும் கட்டுரைகள் சிறந்தனவாகும். பேச்சு வழக்குச் சொற்களை (கொச்சையான வார்த்தைகளை) அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். வாக்கியங்கள் எளிமையாகவும், இயற்கை யானதாயும் இருத்தல் வேண்டும். எண்ணங்கள் தெளிவாக இருப்பின் மொழிநடையும் சிறப்பாக அமையும். கட்டுரையின் மொழிநடையே எழுது பவரின் ஆற்றலைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதை மறத்தல் கூடாது.

**தனித்தன்மை:**

கட்டுரை எழுதுவோர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் தனித் தன்மை உண்டு. கட்டுரையை வாசிக்கும் போது அத்தனித்தன்மை நன்கு பிரகாசிக்கும். எழுதுகின்றவர் தன்னுடைய எண்ணக் கருத்துக்களை வெளியிடும்போது இந்தத் தனித்தன்மை தானாகவே வெளிப்படும்.

மேற்கூறிய ஐந்து அம்சங்களும் நல்ல முறையில் இடம்பெறும்போது கட்டுரை சிறப்பானதாக அமையும். பொருத்தமான தலைப்பு, சொல்லும் முறையில் ஒழுங்கு, விடயத்தெளிவு, மொழிநடை ஆகியன அனைத்தும் அடங்கியதாகக் கட்டுரை ஒன்று அமைந்திருப்பின் அதனை முழுமையுற்ற கட்டுரை வடிவமாக ஏற்றுக் கொள்வர்.

**கட்டுரை வகைகள்:**

மாணவர் எழுதத்தக்க கட்டுரைகளைப் பொதுவாக ஐந்து வகையாக வகைப்படுத்துவர். அவையாவன:

i) வரலாறுகளை (சம்பவங்களை)க் கூறும் கட்டுரைகள்.
ii) வருணனைக் கட்டுரைகள்.
iii) சிந்தனைக் கட்டுரைகள்.
iv) விளக்கக் கட்டுரைகள்.
v) கற்பனைக் கட்டுரைகள்:

உயர்தர வகுப்புக்களில் இவை மேலும் விரிவடையும். அவற்றைப் பின்வரும் வகைகளில் அடக்கலாம்.

**1) தற்சார்புக் கட்டுரைகள்:**

மாணவர்களின் சுய விருப்பு, வெறுப்பு, அனுபவங்கள், அபிப்பிராயங்கள், நினைவுகள் போன்றவற்றைச் சுவைபட விளக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இவை அமையும். உதாரணம்: எனக்குச் சிறகிருந்தால், நான் ஒரு எழுத்தாளனானால்.

2) வரலாற்றுக் கட்டுரைகள்:

ஒன்றின் வரலாற்றை ஒழுங்குறக் கூறும் வகையில் எழுதப்படுவன. (பெரியார் வரலாறு, சுயசரிதை போன்றன)

3) வருணனைக் கட்டுரைகள்:

ஒரு காட்சியை அல்லது நிகழ்ச்சியை வருணித்துக் கூறுவது வருணனைக் கட்டுரையாகும். (கடற்கரையில் ஒரு மாலைப்பொழுது, நான் கண்ட வெள்ளப்பெருக்கு, நான் பார்த்த திரைப்படம், தேர்த்திருவிழா போன்றவை) வருணனைக்கட்டுரை எழுதும்போது நேரே பார்ப்பதாகப் பாவனை செய்தல் சிந்தனையை எளிதாக்கும்.

4) விளக்கக் கட்டுரைகள்:

ஒரு பொருளைப் பல்லாற்றானும் விளக்கமாக எடுத்துக் கூறி வாசிப்போரைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைவது. (சூழல் மாசடைதலைத் தடுப்போம். விஞ்ஞானத்தின் விந்தைகள், கணனிக் கல்வியின் அவசியம், வானொலி, ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், உழவுத்தொழில், ஐ.நா.தாபனம் போன்ற விடயங்கள்)

5) கற்பனைக் கட்டுரைகள்:

இல்லாத ஒரு விடயத்தை இருப்பதாகப் பாவனை செய்து இலக்கிய நயம்பட எழுதுவது. (மனித சஞ்சாரமற்ற தீவில் ஒரு நாள், நான் கல்வியமைச்சரானால் இத்தகைய விடயங்கள்)

6) விமர்சனக் கட்டுரைகள்:

புத்தகம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சி போன்றவற்றைச் சீர்தூக்கித் திறனாய்வு செய்யும் (குறை, நிறைகளை விமர்சிக்கும்) வகையில் எழுதப்படுவன. (அண்மையில் பார்த்த திரைப்படம், இன்றைய புதுக்கவிதைகள், நான் படித்து மகிழ்ந்த நூல் போன்றன)

7) நகைச்சுவைக் கட்டுரைகள்:

பல்வேறு வாழ்க்கை முறைகளைப் பின்னணியாகக் கொண்டு நகைச்சுவையோடு எழுதப்படுவன. (ஞாபகமறதியுள்ள ஒருவரின் வேடிக்கைச் செயல்கள், நான் வழியிற் கண்ட அதிசய மனிதர் போன்றவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8) சிந்தனைக் கட்டுரைகள்:**

இஃது ஒரு பொருளைப் பற்றி நாம் சிந்தித்து முடிவு செய்வதைப் பற்றிக் கூறுவது. (ஒழுக்கம், பண்பாடு, நீதி, சமயம், அரசியல், தத்துவ ஆராய்ச்சி சம்பந்தமான விடயங்கள் போன்றவை)

**கட்டுரையின் முக்கிய பிரிவுகள்:**

1) முன்னுரை (ஆரம்பம்) 2) பொருளுரை 3) முடிவுரை

முன்னுரையும், முடிவுரையும் ஒவ்வொரு பந்திக்குள் அமைய வேண்டும். பொருளுரைப்பகுதி கருத்துக்களைப் பல வழிகளில் விளக்கிக் கூறுவதால் பல பந்திகளைக் கொண்டு விளங்கும்.

**முன்னுரை:**

கட்டுரைத் தலைப்பினை விளக்கும் வகையிலும் கட்டுரையின் கருத்தினை வகுத்துக் கூறும் வகையிலும் முன்னுரை அமைய வேண்டும். முன்னுரை உடலுக்குத் தலை போலச் சிறப்பாக அமைந்தாற்றான் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்களை அறிய ஆவல் ஏற்படும். கட்டுரை முழுவதையும் படிக்கத் தூண்டும் முறையில் முன்னுரை அமைய வேண்டும்.

**பொருளுரை:**

கட்டுரைத் தலைப்பிற்கேற்பப் பொருள்களையும் அதில் அடங்கியுள்ள கருத்துக்களையும் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி பொருளுரை எனப் படும். பொருளுரைப் பகுதியில் பல பந்திகள் அமையும். ஒவ்வொரு பந்தியிலும் ஒரு மையக்கருத்தும் அக்கருத்தை விளக்குகின்ற செய்திகளும் அமையும். ஆகையால், பொருளுரைப் பகுதியைப் பல பந்திகளாகப் பிரித்து, கருத்துக்க ளுக்கேற்பத் துணைத் தலைப்புக்களையும் கொடுத்து எழுதுதல் வேண்டும்.

**முடிவுரை:**

கட்டுரையின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதாகவும் கட்டுரை யின் முதன்மையான பயனை எடுத்துக் கூறுவதாகவும் இறுதிப் பகுதியில் அமைவது முடிவுரையாகும். முடிவுரையும் சிறப்பாக அமைதல் வேண்டும்.

**கட்டுரை எழுதுவோர் கருத்தில் கொள்ள வேண்டியன:**

1. கட்டுரைக்கான தகவல்களைப் பல நூல்களைப் படிப்பதன் மூலமும் கல்வி அறிவாளர்களிடம் கேட்பதன் மூலமும் திரட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதல் வேண்டும்.

2. போதுமான தகவல்களைத் திரட்டிய பின்னர் அவற்றை நன்கு அவதானித்துக் கட்டுரைக்குத் தேவையானவை எவை என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுத்தபின் எந்த ஒழுங்கில் அவற்றைக் கட்டுரையில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அவ்விதம் தீர்மானித்தபின் தகவல்களை ஒழுங்குமுறையில் கட்டுரையின் தன்மைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளவும்.
3. முன்னுரையை நன்றாக அமைத்துக் கொண்டு, பொருளுரையில் கூறப்போகும் கருத்துக்களை எதை முதலில் தொடங்குவது எதை இறுதியில் முடிப்பது என வரிசைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
4. பொருளுரைப் பகுதியில் கருத்துக்களைச் சிறுசிறு பந்திகளாகப் பிரித்தும் வேண்டுமெனில் துணைத் தலைப்புக்கள் அமைத்தும் எழுதுதல் வேண்டும்.
5. ஒவ்வொரு பந்தியிலும் முதல் வரியில் சிறிது இடம் விட்டு பந்தியின் தொடக்கம் அமையுமாறு எழுதுதல் வேண்டும்.
6. வரியின் தொடக்கத்தில் ஒற்றெழுத்தோ, தனி எழுத்தோ வருதல் கூடா. கை எழுத்து அழகாக இருத்தல் வேண்டும்.
7. கட்டுரையின் பொருளுக்கேற்ப மேற்கோள்கள், பழமொழிகள், உவமைத்தொடர்கள், சான்றோரின் பொன்மொழிகள் ஆகியவற்றைக் கட்டுரையில் அமைத்துக் கட்டுரையைச் சுவையாகவும் அழகாகவும் மாற்றுதல் வேண்டும்.
8. கட்டுரையினை எழுதும் போது சொற்களை அதிகமாகப் பெருக்காமல் சுருக்கமாகக் கூறி விளக்குதல் வேண்டும்.
9. விடயங்களைத் தெளிவாக, வாசிப்போர் மனதில் பதியும் வகையில் எழுதுதல் வேண்டும்.
10. வாசிப்போருக்குப் பயன் தரும் வகையிலும் மேலும் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும்வகையிலும் கட்டுரை அமைதல் வேண்டும்.
11. கட்டுரையில் எழுத்துப்பிழை, சந்திப்பிழை, இலக்கணப்பிழை இல்லாமல் எழுதுதல் வேண்டும்.
12. மொழிநடை எளிதாகவும் எல்லோர்க்கும் விளங்கும் வகையிலும் எழுதுதல் வேண்டும்.
13. ஒரு சொல்லுக்கும் அடுத்த சொல்லுக்கும் இடையில் போதுமான இடம் விட்டு எழுதுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கட்டுரை எழுதி முடித்தபின் பிழைகள் இல்லாமல் இருக்கிறதா? என்று கவனிக்க வேண்டும். இருப்பின் உடன் நீக்குதல் வேண்டும்.

மேற்கூறிய விதிகளை மனதிற் கொண்டு கட்டுரை எழுதப்படின் அது மிகச் சிறப்பானதாக அமையும்.

தவிர்க்க வேண்டியவை:

1. மிகைபடக் கூறுதல்: ஒரு விளக்கத்தைக் கூறச் சுற்றி வளைத்து எழுதுதல்.
2. கூறியதுகூறல்: முன் சொன்ன விடயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல்.
3. முன்னுக்குப் பின் முரணாகக் கூறுதல்.
4. பொருள் தெளிவில்லாமல் எழுதுதல்.
5. பயனற்ற சொற்களைப் பயன்படுத்துதல்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் பின்வருவன நன்கு புலனாகும்.

1. எந்த விடயத்தைப் பற்றிக் கட்டுரை எழுதப்படுகிறதோ அந்த விடயத்தை மனதிற்குள்ளாகவே தெளிவுபடுத்தி வரையறை செய்தல்.
2. கட்டுரைத் தலைப்புக்கேற்ற எண்ணங்களை, கருத்துக்களை ஒரு தாளில் வரிசைப்படுத்திக் குறித்துக் கொள்ளல்.
3. விடய விவரங்களை ஒருங்கிணைத்துப் பல்வேறு தலைப்புக்களில் பிரித்துக் கொள்ளல்.
4. இந்த உபதலைப்புக்களைக் கட்டுரை வடிவத்திற்கான சட்டகமாக அமைத்துக் கொள்ளல்.
5. பந்திகளாகப் பிரித்துக் கட்டுரையினை எழுதுதல்.
6. முன்னுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரையினை அமைத்தல்.
7. சொற்கள் எளிமை, இனிமை, செறிவு, தெளிவுமிக்கனவாக அமைதல்.
8. மொழிநடை படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எல்லோர்க்கும் விளங்கும் வகையில் இருத்தல்.

இவ்வகையில் எழுதப்படும் கட்டுரைகள் பூரணத்துவம் வாய்ந்தனவாக, மற்றவர்களின் பாராட்டைப் பெறத் தக்கனவாக இருக்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தனைக் கட்டுரை*

# 2

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை
2. ஒன்றுபடுதலின் அவசியம்
3. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
4. பிரிவில் துன்பம் பிறக்கும்
5. ஒற்றுமையை வலியுறுத்திய உயர்ந்தோர்கள்
6. முடிவுரை

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு'- என்றார் மகாகவி பாரதியார். மனித குலத்தின் மாண்புக்கு, வெற்றிக்கு, எழுச்சிக்கு உரிய மார்க்கம் ஒன்றுபடுதலே. ஒன்றுபட்ட உழைப்பின் மூலமே எச்செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். வெற்றியின் பின்னணியில் விடாமுயற்சியோடு ஒற்றுமையும் உள்ளடங்கியுள்ளது. இந்த உண்மையை நாம் நன்குணர்தல் வேண்டும்.

இந்த உலகில் இன்றைய சூழ்நிலையில் யாரும் தனித்து வாழ முடியாது. சமூகத்தோடு ஒன்றுபட்டே வாழ முடியும். சமூகம் என்றால் கூட்டமைப்பு என்றே பொருள்படும். சமூகவாழ்வே மனிதனுக்கு உயர்ச்சி தரும். 'தனிமரம் தோப்பாகாது' என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு கை தட்டி ஓசை எழாது; இரு கையும் சேர்ந்தாற்றான் ஓசை எழும். அதுபோல மனிதர்கள் இணைந்தாற்றான் செயல் சிறக்கும். குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒற்றுமை அவசியம். 'யான் மட்டும் தனியாக வாழ்வேன்' என்பது இயலாத காரியம். தனித்திருக்கும்போது வரும் தாக்குதல்கள் வாழ்வைத் தகர்த்து விடும். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது பழமொழி. ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதனையும் சாதித்துக் கொள்ளலாம் என்பதை மனதிற் கொண்டு நாம் செயற்பட வேண்டும். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பர். கூடி வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும். ஒற்றுமை வளரும். சிற்றெறும்புகள் பல ஒன்று சேர்ந்து தமது உணவுப் பொருள்களை நகர்த்திச் செல்வதைப் பார்த்திருக்கிறோம். தேனீக்கள் பல சேர்ந்து தமக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டை அமைத்துக் கொள்கின்றன. சிறுகச் சிறுகத் தேனைச் சேர்க்கின்றன. இவை எல்லாம் கூடிவாழ்ந்தால் ஏற்படும் நன்மையினையே நமக்கு உணர்த்து கின்றன. கூட்டுப்பண்ணை, கூட்டுத்தொழில், கூட்டுக்குடும்பம் என்பன எல்லாம் கூட்டுறவின் அவசியத்தையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.கூடித் தொழில் செய்யும்போது காலம் மிச்சமாகிறது. காரியம் எளிதில் கைகூடுகிறது. விரல்கள் இணையும்போதுதான் கை செயலாற்றும் கருவியாகிறது. அதுபோல மனிதர்கள் இணைந்தால் செயல் உருவாகிறது.

இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சி பல துறைகளிலும் மாற்றங்களைக் கொணர்ந்துள்ளது. கட்டடங்கள், அணைகள், ஆலைகள் எல்லாம் வியத்தகு முறையில் உருவாகியுள்ளன. இவை எதுவும் தனி மனித முயற்சியினால் உருவானவையல்ல. மனிதர்களின் ஒன்றுபட்ட உழைப்பின் மூலமே உருவானவை.

உலகில் ஏற்பட்ட பெரும் புரட்சிகளை எண்ணிப்பாருங்கள். இப்புரட்சிகள் எல்லாம் தனி மனிதனால் ஏற்பட்டவையல்ல. மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியின் மூலம் - ஒற்றுமையின் மூலமே ஏற்பட்டவை எனலாம். பிரிவு என்பது துன்பம் தரும். தனி மனித வாழ்வில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். கூடி வாழ வேண்டிய இருவர் பிரிந்தால் இருவருக்குமே துன்பம் பிறக்கும். பிரிவதால் இருவர் பலமும் குன்றும். முன்னேற்றம் தடைப்படும். ஒன்றுபட்டு வாழ்வதன் மூலமே வாழ்வு சிறக்கும். குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒற்றுமை உறுதியாக நிலைபெற வேண்டும். இதன்மூலமே மனித வாழ்வின் இலட்சியங்களை நிறைவேற்ற முடியும். ஒரு இனம் தமக்குள் மாறுபட்டுப் பிரிந்து நிற்குமாயின் அந்த இனம் ஒருபோதுமே உயர்வடைய முடியாது. உலக வரலாற்றில் இதற்கான சான்றுகள் பலவற்றை நாம் காணலாம்.

உலகம் போற்றும் உத்தமர்கள், பெரியோர்கள் யாவரும் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர். 'கார்ல்மார்க்ஸ்' 'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்' என அழைப்பு விடுத்தார். 'சமாதானமே எங்களுக்கு வேண்டும்' என்று மக்கள் இன்று குரல் எழுப்புகிறார்கள். இந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் காக்கப் போராடினார் காந்தியடிகள்; அதற்காகத் தம்முயிரையே அர்ப்பணித்தார். எல்லாத் தலைவர்களும் ஒற்றுமையே உயர்ந்ததென்றும் ஒன்றுபட்டே வாழவேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர். அவர்களது வாழ்வும் வாக்கும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதையே நமக்குணர்த்தி நிற்கின்றன.

நாடும் வீடும் சிறக்க ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையே வெற்றிக்கு வழி. நாம் கற்றறிய வேண்டிய முதல் மொழி அது. சாதி, சமய பேதங்களை மறப்போம். சமத்துவம் நிலைத்திட ஒன்றுபட்டு உழைப்போம். ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் உயர்வு காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளக்கக் கட்டுரை*

# 3

# நான் விரும்பும் தொழில்

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை.
2. விரும்புவதற்கான காரணம்.
3. ஆசிரியத் தொழிலின் மேன்மை.
4. ஆசிரியப்பணி அறப்பணி.
5. முடிவுரை.

இன்றைய உலகில் பல்வேறு தொழில்கள் உள்ளன. அவற்றுள் மனிதனை மனிதனாக்குவது, அறிவுள்ளவனாக்குவது ஆசிரியத் தொழிலேயாகும். அத்தொழிலே நான் விரும்பும் தொழிலாகும். ஒரு சிறந்த ஆசிரியன் தெய்வத்திற்குச் சமனாக மதிக்கப்படுகிறான். ஆசிரியன்தான் சமூகத்தின் அத்திவாரம். மரத்தின் ஆணிவேர் போல் வாழ்வின் அடிப்படையாக அமைபவர் ஆசிரியர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. குருவைத் தெய்வமாக மதிக்கும் பண்பு நமது சமூகத்திற்கு உண்டு. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற கூற்றும் இதனையே உணர்த்துகிறது. ஆசிரியத் தொழில் மனநிறைவைத் தரும் தொழிலாகும். கல்விச் செல்வத்தை மற்றவருக்கு இல்லை என்னாது அள்ளிக் கொடுக்க இத்தொழில் வழிசெய்கிறது. ஏழை, பணக்காரன்,உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் எதுவுமின்றி அனைவருக்கும் உதவி செய்யக்கூடிய தொழில் ஆசிரியத் தொழில். இதன் காரணமாகவே இத்தொழிலை நான் பெரிதும் விரும்புகிறேன்.

நமது அன்னை தரும் அன்னத்தை உண்ட போதிலும் மீண்டும் பசி எடுக்கிறது. அப்பா தரும் பொருட் செல்வமும் நாளடைவில் அழிந்து போகிறது. ஆனால் ஆசிரியர் தரும் அறிவுச் செல்வம் என்றுமே அழியாது நம்மைத் தொடர்கிறது. இத்தகைய புனிதமான தொழிலுக்கு நிகரான தொழில் வேறு எதுவுமே இல்லை எனலாம். படிப்பவர் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறி மருத்துவராகலாம்; பொறியியல் வல்லுனராகலாம்; விஞ்ஞானியாகலாம்; அமைச்சராகலாம். ஆனால் ஆசிரியர் ஏணிபோல் இருந்து எல்லோரையும் ஏற்றிவிடும் ஏணியாகத் திகழ்கிறார். ஆசிரியர் மாணவர்களின் எதிர்கால வாழ்வு மலரக் காரணமாக இருக்கிறார். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் உள்ளங்களிலும் நிலைத்து நிற்கிறார். பாடசாலையோடு அவர் கற்பிப்பது நின்றுவிடலாம். ஆனால் அவர் கற்பித்தது மாணவரின் வாழ்வில் இறுதிவரை நிலைத்து நிற்கிறது. இதுவே இத்தொழிலின் சிறப்பாகும்.

ஆசிரியப்பணி சிறந்த அறப்பணியாகும். அது சம்பளத்தை எதிர்பார்த்து நிகழ்வதில்லை. குருகுலக் கல்விக் காலம் முதல் இன்றுவரை ஆசிரியப்பணி பயன்கருதாப் பணியாக - சேவையாகவே விளங்குகிறது. இதனாலேயே ஆசிரியர்கள் உள்ளங்களில் உயிர் வாழ்பவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

ஆசிரியப்பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது. உயிருள்ள பிள்ளைகளுடன் ஊடாடுவது. ஒவ்வொருவருக்கும் வாழ்வில் உயரும் சந்தர்ப்பங்களை ஆசிரியரால் மட்டுமே வழங்க முடியும். ஆசிரியர் உணர்வுகளின் ஊக்கியாக விளங்குகின்றார். மாணவர்களின் மனங்களில் அறிவுப் பொறிகளைப் புகுத்துபவராகத் திகழ்கிறார். ஆசிரியர் தனது பொறுப்பை, தர்மத்தை மறந்தால் எதிர்காலம் தெருவில் அலையும் என்கிறார் புதுக்கவிதையாளர் ஒருவர். அவரது கவிதை இதுதான்.

'வழக்கறிஞரின் தவறுகள்
தூக்கில் தொங்கும்.
மருத்துவரின் தவறுகள்
மண்ணில் புதையும்
ஆசிரியரின் தவறுகளோ
தெருவில் அலையும்'

இதன் மூலம் ஆசிரியப்பணி எத்தகு பொறுப்பு வாய்ந்தது என்பது நன்கு புலனாகும்.

நான் ஓர் இலட்சிய ஆசிரியனாக வாழவே விரும்புகிறேன். நான் கற்றவற்றைப் பிறர்க்கு வழங்கிட ஆசிரியத்தொழில் பெரிதும் பயன்படும். இதன் மூலம் சமுதாயத்திற்கு என்னாலான பணியினைச் செய்திட முடியும். உலகிலேயே மிகச் சிறந்த தொழிலாக மதிக்கப்படும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு விருப்புடன் சேவையாற்றுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன். இதன் மூலம் நானும் சிறப்படைவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# முயற்சி திருவினையாக்கும்

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. முயற்சி உடையோரே உயர்ச்சியடைவர்.
3. ஊழையும் உப்பக்கம் காணலாம்.
4. முயற்சியால் முன்னேறியோர்.
5. முடிவுரை.

எந்த ஒரு செயலும் வெற்றி பெறவேண்டுமாயின் முயற்சி செய்ய வேண்டும். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. வெற்றியின் நுழைவாயில் முயற்சி என்பர். முயற்சி செய்தால் அதற்குரிய பயன் கட்டாயம் கிடைத்தே தீரும்.

'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சியுடையார் இகழ்ச்சியடை யார்', 'முயலாதவர் வாழ்க்கை திருந்துதல் இல்லை' என்பன போன்ற முதுமொழிகள் முயற்சியின் அவசியத்தை நன்கு விளக்குகின்றன. குறுக்கு வழியில் வெற்றியடைபவர்கள் நினைத்த சுகம் பெறலாம். ஆனால், முயற்சியென்னும் நேர்வழியில் வெற்றியடைபவர்கள் மட்டுமே நிலைத்த சுகம் பெறுவர். முயற்சியுடையோரே வாழ்வில் உயர்ச்சி பெறுவர். இந்த உண்மையை மாணவர்கள் நன்கு மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும்.

பறவையைப் பாருங்கள். அது மேலும் மேலும் உயரத்திற் பறக்க முயற்சி செய்கிறது. மீன்கள் நீரில் இலாவகமாக நீந்த முயலுகின்றன. குயில் பாட, மயில் ஆட முயற்சி செய்கிறது. இவ்வாறு ஒவ்வோர் உயிரினமும் மேன்மேலும் முன்னேற முயலுகின்றது. குழந்தை தன் முதற்பருவத்தில் தவழ்ந்த பின் எழுந்து நடை பயிலத் தொடங்குகிறது. பலமுறை தவறிக் கீழே விழுந்தபோதும் குழந்தை தன் முயற்சியைக் கைவிடுவதில்லை. அது தானே முயன்று நடக்கப் பழகுகிறது. பின்னர் குடுகுடு என்று ஓடவும் செய்கிறது. இது இயற்கையாகவே நடக்கும் ஓர் அற்புதச் செயலாகும்.

சிலந்தி பலமுறை முயன்று தன் வலையைப் பின்னித் தன்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக் கொள்ள எண்ணுகிறது. நாம் மட்டும் ஏன் சோம்பி இருக்க வேண்டும். முயற்சி உயர்ச்சி தரும் என்பது உறுதி. கடலில் மூழ்கி முத்தெடுப்போரையும், கடலில் வலை வீசி மீன் பிடிப்போரையும், வயலில் நெற்றி வியர்வை நிலத்திற் சிந்தப் பாடுபடும் விவசாயிகளையும் எண்ணிப் பாருங்கள். விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீரர்கள், கலைஞர்கள் போன்றோர் ஓயாது முயன்று உன்னத நிலையை அடைகின்றனர்.

நாம் கொண்டுள்ள இலட்சியத்தை - குறிக்கோள்களை எய்த வேண்டுமாயின் தொடர்ந்து சோர்வின்றி முயற்சிக்க வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் சோர்ந்து விடக் கூடாது, பயம் கொள்ளல் ஆகாது. தோல்வியே வெற்றியின் முதற்படி எனக் கருத வேண்டும். உறுதியாக உழைக்க வேண்டும். கருதிய கருமம் கைகூடும் வரை தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

ஓயாத முயற்சியின் மூலம் உலக வரலாற்றில் உன்னத இடம் பெற்றோர் பலரை நாம் அறிவோம். அவர்களது வழிகளைப் பின்பற்றி நாமும் முயற்சி செய்ய வேண்டும். அறிவியல் துறையில் அற்புதம் நிகழ்த்திய விஞ்ஞானிகள், அரசியல் துறையில் அகிலம் போற்றும் வண்ணம் சாதனைகள் பல நிகழ்த்திய தலைவர்கள் எல்லாம் முயற்சியின் மூலமே முன்னணிக்கு வந்தனர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஊழையும் உப்பக்கம் காண்பர் முயற்சியுடையோர் என்கிறார் திருவள்ளுவர். விதி என்று ஒன்றிருந்து அது உனக்குத் தோல்வியைத் தருமானாலும் கடுமையான உழைப்பின் மூலம் அதனையும் வெல்ல முடியும் என்பதை வள்ளுவர் வாக்கு நமக்குணர்த்துகிறது.

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்'

தாமஸ் ஆல்வா எடிசன், ஸ்டீவின்சன் போன்ற விஞ்ஞானிகளும் நெப்போலியன், ஆபிரகாம் லிங்கன் போன்ற அரசியல் தலைவர்களும் முயற்சியின் மூலம் உயர்ச்சி பெற்றோர் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாவர்.

தெய்வம் கொடுக்க முடியாத வெற்றியைக் கூட உடல் வருத்தும் முயற்சி கொடுக்கும். உழைப்பே உயர்வு தரும். இதனையே வள்ளுவரும்

'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்' - என்கிறார்.

எனவே வள்ளுவர் தம் வாக்கை மனதிற் கொண்டு உயர்ச்சி காண முயற்சி செய்வோம். முயன்றால் வெற்றி நிச்சயம் என்ற மன உறுதியுடன் முயற்சி செய்வோம்: முன்னேறுவோம்!! இதுவே நம் தாரக மந்திரமாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# பழமொழிகள்

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. பழமொழிகளின் தோற்றம்.
3. பழமொழிகளின் சிறப்பு.
4. வாழ்க்கைக்கு வழிகாட்டுவன.
5. முடிவுரை.

பழமொழிகளைப் பற்றி நாம் எல்லோரும் அறிவோம். பழமொழி என்றால் என்ன? என்பதற்கு அந்தச் சொல்லிலேயே விளக்கம் இருப்பதை நாம் காணலாம். பழைய மொழி பழமொழி, பழகிப் போன மொழி, பழக்கத்தில் வந்துவிட்ட மொழி பழமொழி எனக் கூறலாம். பழமொழிகள் ஆதிகாலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளன. அவற்றுக்கு இலக்கணமோ, வரையறையோ கிடையாது. நம்முன்னோர் அனுபவ ரீதியாகப் பெற்ற அறிவைக் கொண்டே பழமொழிகளைக் கூறினர். அவை செந்தமிழிலன்றிக் கொச்சை மொழியிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

முன்னோர்கள் தம் வாழ்க்கையில் அனுபவித்தவற்றைப் பின்னோர்கள் அறிந்து கொள்வதற்குப் பேருதவியாக இருப்பவை பழமொழிகள். பழமொழிகளுக்கு 'எழுதா இலக்கியம்' என்ற பெயரும் உண்டு. முன்னோரின் வாழ்க்கை அனுபவங்களே பழமொழிகள். பழமொழிகள் என்பவை கற்பனை சிறிதும் கலவாத வாழ்க்கை நெறி; இலக்கிய வடிவங்கள்.

நீதியைக் கூறி வாழ்க்கையை நேர்மைப்படுத்தும் கருத்துக்களைக் கொண்ட பழமொழிகள் பலவுள. இந்த எளிமையான வாசகங்களைப் பயன்படுத்தாதோர் எவருமிலர் எனலாம். பழமையாகச் சொல்லப்பட்ட தானாலும் காலத்தை வென்று வாழும் சிறப்புடையன பழமொழிகள். எல்லோராலும் என்றும் ஏற்கத்தக்கவையாக அவை திகழ்கின்றன.

உலகில் பல்வேறு இனங்கள், மதங்கள், கலாசாரங்கள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் நீதி போதிக்கும் பழமொழிகள் உள்ளன. பழமொழிகள் தோற்றத்தால் பழையது ஆனாலும், பயன் கருதிப் பார்க்கும் போது அவை புதியனதான். வாழ்க்கைக்குப் பயன்படும் யதார்த்தபூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளை அவை புகட்டுகின்றன. இதன் காரணமாகவே அவை காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியனவாகின்றன. எக்காலத்துக்கும் ஏற்கக்கூடிய உண்மைகளை அவை கூறுவதனாலேயே நிலைத்து நிற்கின்றன.

பழமொழிகள் பல சிறப்புக்குரிய அம்சங்களைக் கொண்டுள்ளன. சிந்திக்கத் தூண்டுகின்ற ஆழமான கருத்துக்களைக் குறுகலான வாக்கிய அமைப்பில் அவை கூறுகின்றன. நமது முன்னோர்கள் அனுபவசாலிகள். தாங்கள் கண்ட உண்மைகளை அழகிய சிறிய வாக்கியங்களில் வெளிப்படுத்தினார்கள். அவை அனைத்தும் பழமொழிகள் ஆகிவிடும் எனச் சொல்லிவிட முடியாது. பொதுவான வாழ்க்கை உண்மைகளை அவை பிரதிபலிக்க வேண்டும். அவை காலம் காலமாகப் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும். அப்போதுதான் அவை நீடித்து நிலைத்து, வழக்கில் கையாளப்பட்டுப் பழமொழிகள் என்கிற அந்தஸ்தைப் பெறும்.

தமிழில் ஏராளமான பழமொழிகள் புழக்கத்தில் உள்ளன. படிப்பறிவற்றவர்கள் கூடத் தாம் பேசும்போது நீதி, நேர்மை, நியாயத்தை வலியுறுத்த இத்தகைய பழமொழிகளைப் பயன்படுத்துவதைக் காணலாம். பழமொழிகள் நம் வாழ்வோடும் பண்பாட்டுடனும் இரண்டறக் கலந்துள்ளன என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. பழமொழிகளில் அனுபவம் பேசுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ விடயங்களைப் பழமொழிகள் மூலம் நாம் புரிந்து கொள்ள முடியும். பழமொழிகள் வாழ்க்கைக்குப் பயன்தரும் பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. பழமொழிகளை மேலோட்டமாகப் பார்த்தால் அவை ஏதோ ஓர் அர்த்தம் தருவனவாகவே தோன்றும். ஆனால் சிந்திக்கச் சிந்திக்கப் பல்வேறு வாழ்க்கை உண்மைகளை அவை புலப்படுத்துவதனைக் காணலாம்.

பழமொழிகள் நாடோடிப் பாடல்கள் போன்று மக்கள் மனதைக் கவருந்தன்மையன. ஒரு விடயத்தை எடுத்துரைக்கும் போது பழமொழியைப் பயன்படுத்துகின்றனர். அப்பழமொழியானது ஆழ்ந்த கருத்துடையதாக விளங்கும். இத்தகைய பழமொழிகள் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வன்மை மிக்கனவாக விளங்குகின்றன. பழமொழிகளை நாம் ஆழ்ந்து கற்றல் வேண்டும். வாழ்க்கையில் வெற்றிகாண இவற்றின் அறிவு நமக்குத் துணை புரியும். இதனாலேயே சிறுவர் முதல் பெரியோர் வரை பழமொழிகளை நன்குஅறிந்துகொள்ள விரும்புகின்றனர்.

சுருங்கக்கூறின் பழமொழிகள் யாவும் நமது முன்னோரின் அனுபவ வார்த்தைகள். அவை நமக்கு நல்வழி காட்ட வல்லன. வையத்து வாழ்வாங்கு வாழத் துணை புரிவன. பழமொழிகள் நமது முன்னோர் அளித்த செல்வங்கள். அவற்றைப் போற்றிப் படிப்பதுடன் பேணிக் காக்கவும் நாம் முற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கட்டுரை

# 6

# சுற்றாடல் பேணிச் சுகம் பெறுவோம்

குறிப்புக்கள்.

1. முன்னுரை.
2. சுத்தம் சுகம் தரும்.
3. சுகம் கெடுக்கும் சூழல்கள்.
4. சூழல் பாதிப்பால் ஏற்படும் விளைவுகள்.
5. சூழல் மாசடைதலைத் தடுக்கும் வழிகள்.
6. முடிவுரை.

மனித வாழ்க்கையில் நாம் சாதிக்க வேண்டியன பல உள. அவற்றைச் சாதிக்க வேண்டுமாயின் நமது உடல் நல்ல ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். பலமான உடல் நலம் மிக்கோரே பல்வேறு சாதனைகளை நிலைநாட்ட வல்லவராவர். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்றார் திருமூலர். 'சுவர் இருந்தாற்றான் சித்திரம் வரையலாம்' என்பது முதுமொழி. உடலைப் பாதுகாத்தாற்றான் உலகில் வாழமுடியும். அதற்குத் துணைபுரிவது சுற்றுச் சூழல் சுத்தமேயாகும். மனிதனது நல்வாழ்வுக்குச் சூழலே முதற் காரணமாயமைகிறது. மனிதனது எல்லாவித தேவைகளுக்கும் சூழலே இருப்பிடமாகும்.

ஆதிகால மனிதன் சூழலோடு ஒன்றி வாழ்ந்தான். சூழலைப் பேணி வாழ்ந்தான். அதனால் அவன் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு நீண்டநாள் வாழ்ந்தான். இன்று மனிதன் சூழலைத் தன் தேவைகளுக்குப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதால் அதன் இயற்கைத் தன்மை பெரிதும் மாற்றமடைகிறது. சூழல் மாசுபடுகிறது.

'சுத்தம் சுகம் தரும்', 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் முதுமொழிகள் சுத்தம் பேணிச் சுகம் பெறும் வழியை நமக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுத்துகின்றன. 'நோய்க்கு இடம்கொடேல்' என்றார் ஔவையார். நோயின்றி வாழ வேண்டுமாயின் சுத்தம் மிக மிக அவசியம் என்பதை அனைவரும் நன்கு உணருதல் வேண்டும். 'சுத்தம் சோறிடும்' என்பது ஆன்றோர் வாக்கு. நாம் சுத்தமாக இருக்க வேண்டும். தினமும் நீராடி உடலைச் சுத்தம் செய்தல் வேண்டும். 'புறத்தூய்மை நீரால் அமையும்' என்ற வள்ளுவர் வாக்கை நாம் நினைவிற் கொண்டு செயற்படல் வேண்டும்.

உடலை மட்டும் சுத்தமாக வைத்திருந்தால் போதாது. நாம் வாழும் வீடு, சுற்றுப்புறம் அனைத்துமே சுத்தமாக இருத்தல் வேண்டும். வீட்டைச் சுற்றிக் கழிவு நீர் தேங்காமல் கவனிக்க வேண்டும். நோய்களைப் பரப்பும் கிருமிகள், நுளம்புகள் உருவாவதைத் தடுத்தல் வேண்டும்.

பெருகி வரும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மக்களின் சுகவாழ்வைப் பெரிதும் பாதிக்கின்றன. இரசாயன உரப் பசளைகள், கிருமிநாசினிகள், அழுகிய நிலையிலுள்ள சேதனப் பொருள்கள் போன்றவை நிலத்திற் படிவதால் நீர் மாசடைகிறது. பிளாஸ்ரிக் பொருள்களும், பொலித்தீன் உறைகளும் நிலத்திற் புதைந்து கிடக்கின்றன. இவற்றால் சூழலுக்குப் பெரும் பாதிப்பேற்படுகிறது. சுற்றாடலில் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாதநிலை ஏற்படுகிறது. வீதிகளில் செல்லும் வாகனங்கள் வெளிவிடும் புகையினால் மக்கள் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு இலக்காகிறார்கள். கொசு, ஈ, நுண்ணுயிரிகள், காற்று, நீர், உணவுப்பொருள்கள் மூலமே நோய் ஏற்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

வீடுகள் அமைப்பதற்காகவும், விவசாயச் செய்கைக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் மழை வளம் குன்றுகிறது. மரங்கள் பெருமளவில் தறிக்கப்படுகின்றன. இதனால் மழை வளம் மட்டுமன்றி மண்வளமும் பாதிக்கப்படுகிறது. மண்ணரிப்பு ஏற்படுகிறது. சுருங்கக் கூறின் நிலம், நீர், வளி அனைத்துமே இன்று மனிதர்களின் நடவடிக்கைகளினால் மாசுறுகின்றன. இந்நிலையினைத் தவிர்த்திட மக்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம் கடமை உணர்ந்து செயற்பட்டால் சுற்றாடல் சுத்தம் பேணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பை கூளங்களைக் கண்ட கண்ட இடங்களில் போடுதலைத் தவிர்த்திடல் வேண்டும். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்களை உயிரினங்களுக்கு ஊறு விளையாவண்ணம் சுத்திகரித்தபின் வெளியேற்ற வேண்டும். சாக்கடைகளில் அசுத்த நீர் தேங்கி நிற்காது உடனுக்குடன் கடலிற் சென்று கலத்தற்குரிய வழிவகைகளைக் கையாளுதல் வேண்டும். மழை வளம் பெருகவும், வளி வளம் சிறக்கவும், மண்வளம் பேணப்படவும் மரங்கள் நாட்டப்படல் வேண்டும். பெருமளவு மரங்களை வளர்ப்பதன் மூலம் தொழிற்சாலைகளில் இருந்து எழும் புகையினை, தூசிப்படலத்தை அவற்றின் இலைகள் மூலம் காற்றிற் கலக்காது தடுக்க முடியும். மேலும் அவை வெளியேற்றும் நீராவியும் காற்று மண்டலத்தைத் தூய்மைப்படுத்தும்.

இன்று நகரங்களில் தொழிற்சாலைகள் பலவும் அமைக்கப்படுகின்றன. இதனால் நகரங்களில் மக்கள் செறிவு அதிகரிக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் நகரங்களில் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கண்ட கண்ட இடங்களில் மலசலம் கழித்தல், குப்பை கூளங்களைப் போடுதல், பொலித்தீன் பாவனை அதிகரிப்பு ஆகியனவற்றால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்நிலையினைத் தவிர்க்கும் பொருட்டு தொழிற்சாலைகளை நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக அமைத்தல் வேண்டும். இவ்விதம் அமைக்கப்படின் நகரங்களில் மக்கள் செறிவதை ஐதாக்கலாம். இதன் மூலம் சூழல் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காணலாம்.

வீடு சிறந்தால் நாடு சிறக்கும். நாடு சிறக்க மக்கள் வாழ்வில் சுகம் நிலைபெற வேண்டும். சுத்தம் பேணப்பட்டாலேயே சுகம் நிலைபெறும். சுகம் நிலைபெறச் சுற்றுச் சூழல் பேணப்பட வேண்டும். 'நீர் இன்றி அமையாது உலகு' என்பார்கள். மரம் இன்றி, மழை இன்றி நீர் அமையாது. மழை வளம் பெருக மரம் நடவேண்டும். மரம் நடுவதோடு சுற்றுச் சூழலையும் பேணிச் சுக வாழ்வு காண முற்படுவோமாக! சுற்றாடல் சுத்தம் பேணிச் சுகம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>விளக்கக் கட்டுரை</u>

# 7

# நான் விரும்பும் நூல்

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை.
2. விரும்பக் காரணம்.
3. ஒப்பற்ற நூல்.
4. உலகப் பொதுமறை.
5. வாழ்வியல் தத்துவம்.
6. முடிவுரை.

'நூல் பல கல்' என்றார் ஔவையார். நூல்களைப் படிப்பது நல்ல பழக்கம். நல்ல நூல்களே நமது நல்ல நண்பர்கள். நான் படிக்கும் நூல்கள் பலவுள. அவற்றுள் சிறப்பாகக் கூறினால் திருக்குறளே நான் பெரிதும் விரும்பும் நூலாகும். இறைவன் மூன்றடிகளால் அளந்த உலகை வள்ளுவர் ஒன்றே முக்கால் அடிகளுக்குள் அளந்து விட்ட உண்மையினை -சிறப்பினைத் திருக்குறளைப் படித்த பின்னர் நான் உணர்ந்து கொண்டேன்.

குறள் என்பது குறுகிய வெண்பாவால் ஆனது. இரு அடிகளைக் கொண்டது. திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என அழைக்கப்படுகிறது. இதில் இல்லாத எப்பொருளும் இல்லை. எல்லாப் பொருள்களையும் எக்காலத்துக்கும் உகந்த உண்மைகளையும் கொண்டதாக ஆக்கப் பெற்றுள்ளது. திருக்குறள் ஒரு வாழ்வியல் வழிகாட்டியாகத் திகழ்கிறது. மனித வாழ்விற்குப் பயன்படும் அத்தனை விடயங்களையும் அழகாக உரைத்திடும் நூல் இது. இதன் காரணாகவே யான் திருக்குறளைப் பெரிதும் விரும்புகிறேன்.

திருக்குறள் ஒப்பற்ற நூல். கருத்துக் கருவூலம். தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகுக்கும் நலம் பயக்கும் கருத்துக்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. மக்கள் வாழ்வாங்கு வாழும் நெறிகளை மனுக்குலத்திற்கு எடுத்துக் கூறுகிறது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்ட இந்நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் உள்ளன. இக்குறட்பாக்கள் ஒவ்வொன்றும் ஒப்பற்ற கருத்துக்களை உரைக்கின்றன. பொறுமை, அன்பு, அறன், இல்வாழ்க்கை, நாடு, சிற்றினம் சேராமை போன்றவற்றைப் புலப்படுத்தும் குறள்கள் நமது வாழ்வியலுக்கு ஏற்ற படிகளாக அமைந்துள்ளன.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் சிறந்த தமிழ்ப் புலவர். 'வள்ளுவர் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்றார் பாரதியார். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்றார் ஔவையார்.

'நாலிரண்டும் சொல்லுக்குறுதி' என்பர் ஆன்றோர். நாலடியாரும் திருக்குறளும் ஒப்பற்ற நூல்கள் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. சங்க இலக்கியங்களுள் பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது திருக்குறள். நூல்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய நூலாகக் கருதப்படுகிறது.

உலகம் இன்று சாதி, மதம், இனம், மொழி என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றில் சிக்கித் தடுமாறுகிறது. உலகனைத்தையும் ஒன்று படுத்தும் ஆற்றல் எதுவென்றறியாது திகைக்கிறது. இந்நிலையில் உலகனைத்திற்கும் பொதுவாக, எம்மதமும், இனமும் சாராது எழுந்த சட்ட நூல் போல் திருக்குறள் திகழ்கிறது. எக்காலத்திற்கும், எவ்வினத்திற்கும் ஏற்ற கருத்துக் குவியலாக, உலகப் பொதுமறையாகத் திருக்குறள் விளங்குகிறது. நூற்றுக்கணக்கான மொழிகளில் பயிலப்படும் சிறப்புடையது. புலவர்கள் பலரும் திருக்குறளைத் தத்தம் கவிதைகளில் எடுத்தாண்டுள்ளனர்.

உலகப் பொதுநூலாகப் போற்றப்படும் திருக்குறள் சிறந்த வாழ்வியல் தத்துவங்களையும் எடுத்துக் கூறுகிறது. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறும் நூலாகவும் திகழ்கிறது. இல்லறமொன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் என்றுரைக்கிறது. அந்த இல்லறத்தை இல்லாள் பேணிக் காக்க வேண்டும். அவையத்து முந்தியிருக்கும் மக்களைப் பெற்றிருக்க வேண்டும்: விருந்தோம்பலில் சிறந்திட வேண்டும் என்றெல்லாம் வாழ்வியல் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறது.

சுருங்கக் கூறின் மனிதனை மனிதனாக, மனிதத் தன்மையுடையவனாக வாழ்வதற்கு வழிகாட்டும் நூல் திருக்குறள் எனலாம். அன்னைத் தமிழில் அமைந்த இந்நூல் தமிழர்கள் அனைவருக்குமே பெருமை சேர்ப்பதாக உள்ளது. இதனாலேயே அமரகவி பாரதியாரும்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு...' எனப் போற்றிப் பாடினார்.

வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழர்களுக்கோ தமிழ் நாட்டிற்கு மட்டுமோ உரியதல்ல. அது உலகனைத்திற்கும் உரியது. அத்தகு சிறப்பு மிக்க நூலை நாம் போற்றிப் படிக்க வேண்டும். படித்தபடி ஒழுக வேண்டும். உலகமெல்லாம் ஒரு குடும்பம் ஆக வேண்டும். அதற்கு வழிகாட்டும் வன்மை திருக்குறளுக்கு உண்டெனில் அது மிகையாகாது. தமிழர்களாகிய நாம் தமிழ்ப்புலவன் வள்ளுவன் தந்த திருக்குறளைத் தினமும் போற்றிக் கற்றிட முன்வருவோமாக!

'வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்த மராகி ஒழுகுவமே.'

- கவிமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# வாய்மையே வெல்லும்

**குறிப்புக்கள்**

1. முன்னுரை.
2. வாய்மை என்றால் என்ன?
3. வாய்மையின் சிறப்புக்கள்.
4. வள்ளுவர் காட்டும் வாய்மை.
5. வாய்மையால் மேன்மையுற்றோர்.
6. வாய்மை வாழ்வு தரும்.
7. முடிவுரை.

---

வாய்மை அழிவற்றது. என்றும் நிலைப்பது. எல்லோராலும் விரும்பப்படுவது; போற்றப்படுவது. வாழ்க்கை என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்டது மட்டுமல்ல, இறப்பிற்குப் பின்பும் உள்ளது. காலம் கடந்தும் ஒருவனால் வாழ முடியும். அவ்வாறு வாழ்வதற்கான வழிகளில் மிகவும் முக்கியமானது வாய்மையாகும். வாய்மையினால் நேர்மை வளரும். பூவுடன் கூடிய நாரும் மணம் பெறுவதைப் போன்று வாய்மையைச் சுமந்தோரும் வாழ்வில் நலம் பெறுவர்; சிறப்புறுவர்.

வாய்மை என்றால் என்ன? உண்மை பேசுதலே வாய்மையாகும். பொய் இன்றி வாழ்தல் வாய்மைக்கு ஊன்று கோலாகும். வாய்மைக்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர்:

'வாய்மை எனப்படுவது யாதெனின்
யாதொன்றும் தீமையிலாத சொலல்' என்கிறார். மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமையுண்டாக்காத குற்றமற்ற வார்த்தைகளைக் கூறுதலே வாய்மை ஆகும் என்றும்

'புறந்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையான் காணப்படும்' என்றும் வள்ளுவர் வாய்மையின் சிறப்பினை உணர்த்துகிறார். உடலைத் தூய்மைப்படுத்தத் தினந்தோறும் குளிக்கிறோம். உள்ளக்குளியல்தான் வாய்மை. இதனையே வள்ளுவர் மேலும் சிறப்புற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்' - என்கிறார். உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது உண்மையேயாகும். உண்மை வழிச்செல்வோன் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இடம்பெறுவான். ஒருவன் மனம் ஒன்றி உண்மை சொல்வான் என்றால் அவன் தவம் செய்வோரின் நிலையை எய்துகின்றான் எனவும் வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை' - என வாய்மையின் சிறப்பினை வள்ளுவர் புலப்படுத்துகின்றார். வாய்மை பேசுவோர் இயல்பாகவே தூய்மையடைகின்றனர். இதனால் அவர்கள் எந்தப் பிற தர்மங்களும் செய்ய வேண்டியதில்லை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பல
செய்யாமை செய்யாமை நன்று' - என்பது அவர் கருத்து. வாய்மை குறித்து அவர் எழுதிய பத்துக் குறட்பாக்களும் வாய்மையின் சிறப்பை நன்கு புலப்படுத்துகின்றன.

வாய்மையால் மேன்மையுற்றோர் பலர். அவர்களுள் அரிச்சந்திர மகாராசாவும், அவர் வழி நடந்த காந்தியடிகளும் குறிப்பிடத்தக்கோர் ஆவர். வாய்மை தவறாது நடக்கும்போது சில துன்பங்கள், வேதனைகள் ஏற்படலாம். ஆனால் ஈற்றில் வாய்மையே வெல்லும் என்பதற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ளோரின் வாழ்வே தக்க சான்றாகும்.

வாய்மை ஒருவனை நல்லவன் ஆக்குகின்றது. பெருமை பெறச் செய்கிறது. அந்தப் பெருமை அவனுக்கு மட்டுமன்றி அவனைச் சார்ந்தோரையும் பெருமையடையச் செய்கிறது. வாய்மை வாழ்வு தரும் என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். வாய்மையும் வாழும் வாய்மை உடையோரும் என்றும் நிலைத்து வாழ்வர்.

வாழ்வின் வெற்றியே புகழ் ஆகும். அந்தப் புகழும் வாய்மை வழியே வரும்போது நிலைத்த புகழாக மாறும். இந்த உண்மையை நன்குணர்வோர் வாய்மையே என்றும் வெல்லும் என்பதை ஏற்றுக் கொள்வர். வாய்மையே மேன்மை தரும் என்பதை நன்குணர்ந்து, என்றும் வாய்மை பேசுபவர்களாக நாம் வாழுதல் வேண்டும்.

'உண்மைபேசி உத்தமனாக வாழ்' என்ற பொன்மொழிக்கேற்ப மாணவர்களாகிய நாம் என்றும் உண்மை பேசுபவர்களாக வாழ வேண்டும். 'வாய்மையே வாழ்வு தரும்' என்ற இலட்சியத்துடன் செயற்பட வேண்டும்.

உண்மை பேசி உத்தமர்களாக வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. பிறப்பும் வளர்ப்பும்.
3. வகித்த பதவிகள்.
4. கலைப்பணிகள்.
5. சமூகப்பணிகள்.
6. முடிவுரை.

உலகம் போற்றும் கலை ஞானிகளில் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியும் ஒருவர். இவர் இலங்கையில் பிறந்து அமெரிக்கா வரை புகழ் பரப்பிய பெரியார் ஆவார். ஈழத்துப் பண்டைய கலைகளின் சிறப்புக்களை மட்டுமன்றித் தென்கிழக்காசியக் கலைகளின் சிறப்புக்களையும் உலகம் அறியச் செய்த பெருமைக்குரியவர்.

இவர் 1871 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள 'ரெய்லண்ட்' இல்லத்தில் பிறந்தார். இவரது தந்தையார் மானிப்பாயைச் சேர்ந்த சேர் முத்துக்குமாரசுவாமி ஆவார். தாயார் இங்கிலாந்தைச் சேர்ந்த எலிசபெத் கிளே பீபீ என்னும் ஆங்கிலேயப் பெண்ணாவார். ஆனந்தக் குமாரசுவாமி இங்கிலாந்தில் உள்ள 'வைக்கவுண்ட்' வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பூகாப்பவியலில் பி.எஸ்.ஸி (B.Sc) பட்டத்தையும் விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

இலங்கை உலோக பரிபாலனத்துறையின் தலைவராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். இக்காலத்தில் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்றார். கனியவளங்கள் பல இலங்கையில் இருப்பதைக் கண்டறிந்தார். பண்டைய கலைச்சிற்பங்கள், சின்னங்கள் பல மண்மூடிக் கிடப்பதைக் கண்டார். குகைகளிலும் சுவர்களிலும் வண்ண ஓவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் மங்காது திகழ்வதைக் கண்டு அதிசயித்தார். இலங்கையில் காணப்படும் இத்தகைய அபூர்வ சிருஷ்டிகள் பற்றிய விபரங்களைச் சேகரித்துக் கொண்டார். அவைகளை எல்லாம் உலகறியச் செய்ய வேண்டுமென விரும்பினார். தாம் சேகரித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 'இடைக்காலச் சிங்களக் கலைகள்' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலின் மூலமே உலக மக்கள் இலங்கையின் பண்டைய கலைச்சிறப்பை அறிந்து கொண்டனர். 'இந்தியச் சிற்பி' என்னும் நூலையும் இந்தியக் கலைகளின் நோக்கம் என்னும் கட்டுரையையும் வெளியிட்டார். இவை உலகக் கலையரங்கில் இந்தியக் கலைகளின் சிறப்பினைப் புலப்படுத்தின.

நடராசப் பெருமானின் அற்புதக் கூத்தின் தத்துவங்களை, கலைச் சிறப்பினை விளக்கும் சிவநடனம் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

1910 ஆம் ஆண்டில் அலகபாத் நகரில் நிகழ்ந்த அகில பாரதக் கண்காட்சியின் கலைப் பிரிவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1919இல் அமெரிக்காவில் உள்ள போஸ்ரன் நகரத்துக் கலைக்கூடத்தில் கீழைத்தேயக் கலைப்பொருட் பகுதியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் சமூக சீர்திருத்தப் பணிகள் பலவற்றில் ஈடுபட்டுப் பெருந் தொண்டாற்றினார். 'இலங்கை சமூக சீர்திருத்தச்சபை' என்னும் பெயரில் கழகம் ஒன்றை நிறுவினார். இச்சபையின் வெளியீடான 'இலங்கைத் தேசிய சஞ்சிகை' யின் ஆசிரியராகவும் விளங்கினார். பேராதனையில் சகல வசதிகளுடனும் கூடிய பல்கலைக் கழகம் ஒன்று அமைதல் வேண்டுமென ஆலோசனை வழங்கினார். இவரது கலைப்பணிகளைப் பாராட்டும் வகையில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 'வித்தியா விநோதன்' என்னும் பட்டம் அளித்துப் பாராட்டியது.

கலைப் பணிக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த இக் கலாயோகி 1947 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். கலாயோகியின் பூதவுடல் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் நிலைபெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# சூழல் பாதுகாப்பு

(கலா பாடசாலைக்கு விரைவாகச் சென்று கொண்டிருக்கிறாள். வழியில் மாலாவைச் சந்திக்கிறாள். இருவரும் உரையாடுகின்றனர்)

கலா : வணக்கம் மாலா.

மாலா : வணக்கம் கலா. என்ன இன்று நேரத்திற்கே புறப்பட்டு விட்டீர்? என்ன அவசரம்.?

கலா : இன்று காலை எமது பாடசாலையில் சூழல் பாதுகாப்பு தொடர்பான கண்காட்சி ஒன்று நிகழவிருக்கிறது. அதுதான் அவசரமாகப் போகிறேன்.

மாலா : அதுசரி, சூழல் பாதுகாப்பு என்கிறீரே! சூழலுக்கு ஏன் பாதுகாப்பு வேண்டும்?

கலா : நல்ல கேள்வி. சூழல் பாதுகாப்பு இன்று மிகமிக முக்கியமாகத் தேவைப்படுகிறது. சூழல் மாசடைதலைத் தடுக்காது விட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனால் நாட்டுக்கே தீமையாகும்.

மாலா : சூழல் எதனால் மாசடைகிறது?

கலா : சூழல் எவ்வாறு மாசடைகின்றது என்பதை நடந்து கொண்டே பேசுவோம். நம்மைச் சூழ உள்ள நிலம், நீர், வளி என்பன யாவும் சூழல்தான்.

மாலா : நிலம், நீர், வளி என்பன எங்ஙனம் மாசடைகின்றன?

கலா : மனிதன் தனது தேவைக்காக மரங்களை வெட்டுகிறான். இதனால் நிலம் தன் வளத்தினை இழக்கிறது. மண்ணரிப்புக்குள்ளாகிறது. மழைவளம் குன்றுகிறது. சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாத நிலை உருவாகிறது.

மாலா : இன்று மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறதே. இதுவும் சூழல் மாசடைதலுக்குக் காரணமாக அமையுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா : ஆமாம். இன்று மக்கள் தொகை பெருகிக் கொண்டே இருக்கிறது. இவர்களுக்குரிய வீடுகளை அமைத்துக் கொள்ளப் பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன. விவசாய நிலங்கள் பல வீடமைப்புக் குரிய இடங்களாக மாறி வருகின்றன. இதனாலும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இவை மட்டுமல்ல, உணவுறபத்தியைப் பெருக்கும் நோக்குடன் விவசாயிகள் பெருமளவு செயற்கை உரங்க ளைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் மண்ணின் வளம் நாளடை வில் பெரிதும் பாதிக்கப்படுகிறது. நிலத்தடி நீர் கூட மாசடைகிறது.

மாலா : அதுசரி கலா. மரங்களை வெட்டக் கூடாது என்கிறீரே. மரங்களை வெட்டா விட்டால் மனிதன் தனது தேவைகளை எவ்வாறு நிறைவு செய்ய முடியும்?

கலா : தேவைக்கு வெட்டலாம். ஒரு மரத்தை வெட்டும் போது அதற்குப் பதிலாக ஒரு மரத்தை நாம் நாட்ட வேண்டும். நம்முன்னோர் நாட்டிய மரங்களை நாம் வெட்டுகிறோம். ஆனால் நமது வருங் காலச் சந்ததியினரின் பயன்பாட்டுக்காக மரம் நாட்டுகிறோமா? நினைத்துப் பாரும். மரங்கள் குறைந்தால் மழை வளம் குறையும். உயிரினங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பிராண வாயுவின் செறிவு வளிமண்டலத்தில் குறைந்து விடும்.

மாலா : வளி மாசடைதலுக்கு இது மட்டும் காரணமல்ல. வேறு பல காரணங்களும் உள்ளனவே!

கலா : உண்மைதான். அதிகரித்துவரும் போக்குவரத்துச் சாதனங்கள் வெளிவிடும் புகை, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, போர்முனைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாலும், விண்வெளி ஆய்வுகளிலீடுபடுத்தப்படும் விண்கலங்கள் போன்றனவற்றாலும் வளி மாசடைகிறது.

மாலா : அதுசரி, விண்வெளி ஆய்வுகளுக்குச் செல்லும் 'ரொக்கற்றுக்கள்', விரைந்து செல்லும் விமானங்கள் பலவும் வளிமண்டலத்து 'ஓசோன்' படைகளைக் குழப்பி உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய சூரியக்கதிர்களைப் பூமிக்கு வரச்செய்து விடுகின்றன என்று கூறுகிறார்களே! அப்படியானால் வளிமண்டலத்தை, வளியை மாசடையாது காப்பது எப்படி?

கலா : இதற்கு மனிதனது மனநிலை மாற வேண்டும். தன் தேவையை நிறைவேற்றும்போது அதனால் சூழலுக்கு எவ்வித தீங்கும் நிகழாது என்பதனை உறுதி செய்தல் வேண்டும். நிலம், வளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல நீரும் மனிதனாலாயே மாசடைகிறது. அவனது செயல்களே இதற்குக் காரணமாக அமைகின்றன.

மாலா : நீர் எவ்விதம் மாசடைகிறது எனக் கூறும்?

கலா : நீர் பலவகையில் மாசடைகிறது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் ஆறுகள், குளங்களில் கலக்கின்றன. இதனால் நீர் மாசடைகிறது. பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் செயற்கை உரங்கள், தெளிக்கப்படும் கிருமிநாசினிகள் என்பன நிலத்தினூடாக நிலத்தடி நீரைச் சென்றடைகின்றன. இதனால் கிணற்று நீர் கூட மாசடைகிறது. மற்றும் குப்பை, கூளங்கள் ஓடும் நீருடன் கலப்பதாலும் நீர் மாசடைகிறது.

மாலா : இத்தகைய தீமைகளைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம்?

கலா : நீர் நிலைகளில் குப்பை கூளங்களை வீசுவதைத் தவிர்க்க வேண்டும். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு களை நீரோடும் வாய்க்கால்களில் (சாக்கடைகளில்) விடுவதற்கு முன்னர் அக்கழிவுகளைச் சுத்திகரித்து, உயிரினங்களுக்கு ஊறு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் இல்லாத வகையில் வெளியேற்ற வேண்டும்.

மாலா : இன்று மக்கள் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அவற்றையும் நீர்நிலைகளில் வீசி விடுகிறார்களே! இவற்றால் பாதிப்பு இல்லையா?

கலா : பாதிப்பு உண்டு. நீர் ஓடும் சாக்கடைகளில் இவற்றை வீசுவதால் பெரும் தீங்கு ஏற்படுகிறது. சாக்கடை நீர் தேங்கி நின்று நோய் காவிகளான நுளம்பு, ஈ, இலையான் போன்றவை பெருக வழி வகுக் கின்றன. மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவுவதற்குக் காரணமாகின்றன.

மாலா : சூழல் பாதுகாப்பின் அவசியத்தை இன்று நான் நன்கு அறிந்து கொண்டேன். உங்களைப் போன்ற அறிவுடைய மாணவிகளின் மூலம் தான் நமது சமுதாயம் விழிப்படைய முடியும். நான் படித்த காலத்தில் இத்தகைய விடயங்களை அறியக்கூடிய வாய்ப்பு இருக்க வில்லை. சூழல் பாதுகாக்கப்பட்டாற்றான் நாம் நலமுடன் வாழ முடியும்.

கலா : எங்கள் சூழல் பாதுகாப்புக் கண்காட்சியைப் பார்த்தீர்களானால் இன்னும் பல உண்மைகளைத் தெரிந்து கொள்வீர்கள்.

மாலா : சரி, நானும் கண்காட்சியைப் பார்க்க வருகிறேன். நடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. வாசிப்பின் அவசியம்.
3. நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்.
4. வாசிப்பினால் ஏற்படும் பயன்கள்.
5. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது.
6. முடிவுரை.

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட் போட்டிகளையும், திரைப்படங்களையும் பார்ப்பதற்காகப் பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. கற்க வேண்டிய நேரம் வீண் விரயமாகிறது. இதன் பேறாக அவர்களது கல்வித் தரமே குன்றுகிறது. மாணவர்கள் தமது பொழுதைப் போக்கத் தொலைக்காட்சியையே நம்பியுள்ளனர். அதேவேளை நல்ல நண்பர்கள் எனக் கருதத்தகும் நூல்களை வாசிக்கத் தவறிவிடுகின்றனர். மிக அருமையாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

'நூல் பல கல்' என்றார் ஒளவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது நம் ஆன்றோர் வாக்கு. ரஸ்கின் என்கிற ஆங்கில அறிஞர், 'புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது' எனக் கூறுகிறார். வேறு செல்வங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாகக் களவாடப் படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்துவிட முடியாது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும், கிரகித்துக் கொள்ளவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகிறது. வாழ்வு வளம்பெற அறிவு தேவை. அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகும். நூல்களை வாசிக்கும் போது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பிய மன நிறைவைப் பெற முடியும். வாசித்தல் சிறந்த ஒரு பொழுதுபோக்கு. மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களேயாகும். மாணவர் இதனை மனதிற் கொள்ளுதல் அவசியமாகும்.

'கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்' - என்கிறார் வள்ளுவர்.

ஊனக் கண்ணினும் ஞானக் கண்ணே - அறிவுக் கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. கல்விப் பெருஞ் செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும்.

நூல்கள் வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமை உணர்வை ஒரு போதும் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களை அவர்கள் நாடிச் சென்றுவிட முடியும். வாழ்வில் சலிப்போ சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் விரும்பிய நூல்களைப் படிப்பதன்மூலம் அவற்றைப் போக்கிக் கொள்ள முடியும். 'என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே' எனக் கூறினான் ஆங்கிலக் கவிஞன் ஒருவன். புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பது அரிது. எமது நண்பர்கள் மனமாற்றமடைந்து நம்மை விட்டுப் பிரிந்துவிடலாம். ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்து உரையாடக் காத்திருப்பவை. நம்மை அவை கோபித்துக் கொள்வதோ, வெறுப்பதோ இல்லை. நமக்கு இன்பம் தர எப்போதும் தயாராகக் காத்திருக்கின்றன. நமக்கு அறிவு புகட்டும் ஆசானாகப் புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு முக்கிய கடமையாக இதனைக் கொள்ளுதல் வேண்டும்.

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமைய நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிடவேண்டும். நாம் இளமை முதல் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும் பண்பும் ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அது வழி காட்டும். வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை நாம் அறிந்திட முடியும்.

நூல்களில் பலவகை உண்டு. வாழ்க்கை வரலாறு, தத்துவம், சமயம், அரசியல், அறிவியல் சார்ந்த நூல்கள் பலவுள. புனைகதை இலக்கியங்கள் பலவுள. நமது விருப்பத்துக்கு ஏற்றபடி நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட நாம் பழகுதல் வேண்டும். வெறும் பொழுது போக்குக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது வாழ்க்கைக்குப் பயன் தரும் நூல்களைக் கற்றிட முற்பட வேண்டும். அன்னப் பறவையானது நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுதல் போன்று மாணவர்கள் தேவையற்ற நூல்களை விலக்கிவிட்டுத் தேவையான, பொருத்தமான, பயன்தரும் நூல்களை மட்டுமே வாசித்தல் வேண்டும்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' - என்றார் வள்ளுவர்.

நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றைப் படித்து அதன் வழி ஒழுக நாம் பழகிக் கொள்ளல் வேண்டும். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக, மனிதத் தன்மையுடையோராக மாண்புடன் வாழ முடியும் என்பதை உளத்திற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

நூல் பல கற்போம்! நுண்ணறிவு பெறுவோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் கட்டுரை

# 12

# நான் விரும்பும் விஞ்ஞானி

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. விளையும் பயிர் முளையில் தெரியும்.
3. சோதனை கடந்த சாதனைகள்.
4. அறிவியல் அற்புதங்கள்.
5. பாரத ரத்தினா.
6. குடியரசுத் தலைவர்.
7. முடிவுரை.

நான் விரும்பும் விஞ்ஞானி நல்லவர்: வல்லவர். அவர் அணு விஞ்ஞானி. உலகம் போற்றும் ஆற்றல் பெற்றவர். அவர் விஞ்ஞானி மட்டுமல்ல மெய்ஞ்ஞானியும் கூட. அவர் மாணவர்களின் நண்பர். இளந்தலைமுறையினரின் வழிகாட்டி. ஏழைகளின் தோழர். சமய சமரசத்தைப் பெரிதும் விரும்புபவர். தமிழின் பெருமையை நன்குணர்ந்தவர். அவர் ஒரு தமிழர். தமிழ் நாட்டில் இராமேசுவரத்தில் பிறந்தவர். 'பாரத ரத்தினா' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். பாரத நாட்டின் குடியரசுத் தலைவராக விளங்குபவர்.

அவர்தான் டாக்டர்.ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்களாவார். அவர் 1931ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதி இராமேசுவரத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் அவுல் பக்கீர் ஜெயினுலாப்தீன். தாயார் பெயர் ஆஷியம்மா. கலாம் தமது ஆரம்பக் கல்வியை இராமேசுவரத்தில் உள்ள பஞ்சாயத்துப் பள்ளியில் கற்றார். பின்னர் இராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும் என்னும் முதுமொழிக்கேற்ப கலாம் இளமையிலேயே சுடர்விட ஆரம்பித்தார். விடாமுயற்சியே வெற்றி எதற்கும் விதையாக உள்ளது. இதற்கேற்ப இளமையிலிருந்தெ கலாம் விடாமுயற்சி உடையவராக, சோதனைகளைச் சாதனைகளாக மாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் மிக்கவராக விளங்கினார். திருச்சி புனித வளனார் கல்லூரியிற் சேர்ந்து உயர்கல்வி பயின்ற கலாம் அங்கு இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் சென்னை தொழில்நுட்பப் பயிலகத்தில் பொறியியல் துறையில் பயிற்சி பெற்றார். பொறியியல் பட்டதாரியானார். 1958இல் இந்திய விமானப் படைத்துறையில் சேருதற்கு விண்ணப்பித்தார். டெஹ்ரானில் இருபத்தைந்து பேர் கலந்து கொண்ட நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டார். விமானப்படைக்கோ எட்டு அதிகாரிகள்தான் தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் கலாம் ஒன்பதாவது நபராயிருந்தார். இது அவருக்குப் பெரும் சோதனையாக அமைந்துவிட்டது. எனினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

மன அமைதிக்காக இமயமலையில் ரிஷிகேஷ் வரை சென்றார். கங்கை நதியில் புனித நீராடி இமயஜோதி சுவாமி சிவானந்தரின் ஆச்சிரமம் நோக்கிச் சென்றார். அந்த ஆச்சிரமத்தில் சுவாமி சிவானந்தர் ஒரு புத்தரைப் போலக் காட்சி அளித்தார். பனிமலையில் வெள்ளை உடை தரித்து, ஒரு பச்சைக் குழந்தையின் புன்சிரிப்புடன், கண்களில் அருள் ஒளிவிட அமர்ந்திருந்த சுவாமிகளிடம் தம்மை ஒரு முஸ்லிம் என அறிமுகப்படுத்திக் கொண்டார் அப்துல் கலாம். சுவாமிகள் முகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கலாமின் கவலை பற்றியே விசாரித்தார் அவர்.

தனக்கு விமானப் படைத்துறை நேர்முகத் தேர்வில் இடம் கிடைக்கவில்லை என்றும் விமானப் படையில் சேர்ந்து வானத்தில் பறக்க வேண்டும் என்பதே தனது நீண்டநாள் ஆசை என்றும் சுவாமிகளிடம் சொன்னார் கலாம். கலாமின் கவலை தோய்ந்த வார்த்தைகளைக் கேட்ட சுவாமி சிவானந்தர், 'ஆசை என்பது இருதயத்திலிருந்தும் ஆன்மாவிலிருந்தும் தூயவடிவில் அடர்த்தியாக முளைவிடும்போது அதில் ஒரு மின்காந்த சக்தி இருக்கிறது. அந்த ஆசையின் ஆற்றல் படிமம் ஒருநாள் நிச்சயம் உருப்பெறும். விமானப்படையில் சேர்வது உனக்கு விதிக்கப்படாமலும் இருக்கலாம். கவலைப்படாதே. உனது உயர்ச்சி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தோல்வியை மற; முயற்சி செய்; முன்னேறு; புதுவழி நாடு; தேங்கிவிடாதே; சோர்ந்து விடாதே; நீ நீயாக இரு; உன் ஆசைகளை ஆண்டவனிடம் விட்டுவிடு; முடிவை ஏற்றுக்கொள்; வாழ்க்கைப் பயணத்தில் தொடர்ந்து செல்' என்று ஆசி வழங்கினார்.

சுவாமிகளின் ஆசி பலித்தது. அவருக்கான புதுப் புதுப்பாதைகள் திறந்தன. விமானப் பராமரிப்புப் பயிற்சி பெற்றார். விமானத்தில் பறக்க ஆசை கொண்ட கலாம் பின்னாளில் விமான வடிவமைப்பில் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிக் காட்டினார். அவரது முதல் கண்டுபிடிப்பு 'நந்தி'. இரட்டை இயந்திரங்கள் கொண்ட ஹோவர் கிராப்ட் விமான வடிவம் இது. கலாமின் உழைப்புக்குரிய அங்கீகாரம் கிடைத்தது. இந்திய தேசிய விண்வெளி ஆய்வுக்குழுவின் அழைப்பை ஏற்று பம்பாய் சென்றார். அங்கே 'டாடா' அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் நேர்முகத்தேர்வொன்று நிகழ்ந்தது. மறுநாளே தேர்வு முடிவு வெளியாயிற்று. விமானவியல் மேதை அன்றுமுதல் ஏவுகணை (ரொக்கட்) ப் பொறியாளர் ஆனார். 1963ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவின் 'நாசா விண்வெளி' நிறுவனத்தில் கலாமிற்கு ஆறுமாத காலப் பயிற்சி வழங்கப்பட்டது. காற்று மண்டலம் பற்றியும் விண்வெளி பற்றியும் ஆராய்ந்தார். புவிசுற்றுப் பாதைகள், விண்வெளியில் இயங்கும் செயற்கைக் கோள்கள், அவற்றின் பயன்பாடுகள் பற்றியெல்லாம் அறிந்து கொண்டார். ஏவூர்திகள் செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

'பிருத்வி', 'அக்னி', 'ஆகாஷ்', 'நாக்', 'திரிசூலம்' போன்ற ஏவுகணைகளை உருவாக்கினார். அணு ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். இவை எல்லாம் அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன. பல்கலைக்கழகங்கள் பல டாக்டர் பட்டங்களை வழங்கித் தம்மைப் பெருமைப்படுத்திக் கொண்டன. இப்பட்டங்களைப் பற்றி எல்லாம் கலாம் பெருமை கொண்டதே இல்லை.

'என்னை டாக்டர் கலாம்னு சொல்றீங்க. ஆனால் நான் வாங்கின தெல்லாம் 'டிப்ளோமா' தான். எனக்குக் கிடைத்த பட்டங்கள் எல்லாம் நான் படித்துப் பெற்றது கிடையாது. என் படிப்பு எம்.ஆ.டி. யோட (சென்னை தொழில் நுட்ப பயிற்றகம்) முடிந்து விட்டது. அதற்கு மேலாக எனக்குக் கிடைத்ததெல்லாம் என்னுடைய உழைப்பை அடிப்படையாகக் கொண்டவையே' என்கிறார் கலாம். அவரது தன்னடக்கத்துக்கும் பணிவுக்கும் இதுவே சான்றாகும்.

1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 15ஆம் நாளில் இந்திய சுதந்திரப் பொன்விழாவின் போது டாக்டர் கலாமிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு கே. ஆர். நாராயணன் 'பாரதரத்னா' விருது வழங்கிக் கௌரவித்தார். எத்தனை பரிசுகளும், விருதுகளும் வாங்கினாலும் இளைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத்தை உருவாக்காமல் கடமை முடிவதில்லை என்று நம்புகிறவர் கலாம். அறிவியல் மீது ஆர்வம் கொள்ள வேண்டும். அதன்மூலமே வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியுமெனக் கருதுபவர் அவர். அதனாற்றான் இன்னும் இளைஞர்களிடையே அறிவியல் விதையினை ஊன்றி வருகின்றார்.

1963 - 1982 வரை இந்திய விண்வெளித்துறையில் மேற்கொண்ட ஆய்வுப்பணிகள் அவருக்கு அழியாப் புகழை நல்கின. 1982 முதல் 1991 வரை இந்திய பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகப் பணிகள். 1991 முதல் 1999 வரை இந்திய பாதுகாப்பு அமைச்சு ஆலோசகர் பொறுப்பு. 1999 முதல் 2001 நவம்பர் இறுதிவரை மத்திய அரசின் அறிவியல் ஆலோசகர் ஆதியாம் பதவிகளை வகித்தார். இக்காலகட்டத்திலேயே கலாமின் சுயசரிதை நூலான 'அக்கினிச் சிறகுகள்' தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாயின. 2001 டிசம்பர் முதல் 2002 ஜுலை வரை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியர் பொறுப்பு வகித்தார். ஈற்றில் (2002இல்) பாரத நாட்டின் குடியரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்தியாவின் முதற்குடிமகன் ஆனார். வளர்ந்த இந்தியாவைக் காண்பதே தனது இலட்சியம் எனக் கூறும் அப்துல் கலாம் இந்நூற்றாண்டின் இணையற்ற மனிதராக விளங்குகிறார். அவர் தமது இலட்சிய நோக்கை இந்தியா 2020 என்னும் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

விஞ்ஞானியாக மட்டுமன்றிச் சிறந்த சிந்தனையாளராகவும், கவிஞராகவும், பாரத நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் அவர் இன்று காட்சி தருகிறார். இராமேசுவரத்து மணற்பரப்பிலும் புதுடில்லி குடியரசுத்தலைவர் மாளிகையின் சலவைக் கல்லிலும் சமநிலை மாறாத ஞானியாக நடைபயிலும் கலாம் அவர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். இன்றைய இளம் சந்ததியினருக்கு அவரே ஏற்ற வழிகாட்டியாகத் திகழ்கிறார். பாரத நாட்டின் எழுச்சிக்கு இளைய சமுதாயமே ஆணிவேராக அமைந்திட வேண்டுமென்னும் ஆவலுடன் செயற்படுகிறார். காட்சிக்கு எளியராய், கருத்துக்கு இனியராய், கவிஞராய், அறிவியல் அறிஞராய், அனைத்து மக்களதும் உள்ளங்களில் இடம்பெற்றுள்ள அறிவியல் அறிஞர் கலாம் அவர்களது வழியில் நாமும் நடப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# செய்யும் தொழிலே தெய்வம்

1. முன்னுரை.
2. தொழில் மகத்துவம்.
3. உழைப்பே தெய்வம்.
4. அறிஞர் தம் கருத்து.
5. வாழ்வு வளம் பெற.
6. முடிவுரை.

அன்புசால் அவைத் தலைவர் அவர்களே!
அறிவுசால் பெரியோர்களே! தாய்மார்களே!
அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் என் பணிவார்ந்த வணக்கம். உங்கள் முன்னிலையில் செய்யும் தொழிலே தெய்வம் என்னும் தலைப்பில் பேசக் கிடைத்த பெரு வாய்ப்புக் குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன்.

'செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்' - என்பது பட்டுக்கோட்டை, கவிஞர் கல்யாணசுந்தரனாரின் பவளவரிகள். நாம் எந்தத் தொழில் செய்கிறோம் என்பது முக்கியமல்ல; எப்படிச் செய்கிறோம் என்பது தான் முக்கியம். நாம் செய்கின்ற தொழிலில் உயர்வு, தாழ்வு என்கின்ற பேதமே இல்லை; இருக்கவும் முடியாது. தொழில்கள் எல்லாம் சிறப்புக்குரியன. அவை நம் வாழ்வுக்கு வழிசெய்வன. எனவே செய்யும் தொழிலே - உழைப்பே தெய்வம் என நாம் கருத வேண்டும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' - என்று பாடினார் பாரதியார். உழைக்காது சோம்பியிருப்போரைக் கண்டிக்கும் அவர் தொழில் செய்வோரை வாழ்த்தி வணங்கிடத் தவறவில்லை. இதன் மூலம் தொழிலின் மகிமையை அவர் உலகுக்கு உணர்த்தினார். தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோரைப் பாரதியார் என்றும் போற்றத் தவறவில்லை. தொழிலாளர்களே நாட்டின் முன்னேற்றத்திற்கு மூல வேர்களாக உள்ளனர் என்பது அவரது கருத்தாகும்.

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
இயந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கி நன்முத் தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!' எனத் தொழிலையும் அத் தொழில் செய்வோரையும் போற்றித் தன் வணக்கத்தையும் தெரிவிக்கின்றார் பாரதியார். உழைக்கும் வர்க்கமே உயர்ந்தது; அவர் தம் உழைப்பே உலகை வாழ்விக்கிறது என்ற உண்மையைப் புலப்படுத்துகிறார்.

'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்று பாரதி வியந்து பாராட்டுகிறார். தொழிலாளர்களைப் பிரம்மனுக்கு நிகராகக் காட்டும் பாரதியார் தொழில் செய்வோரைப் போற்றிப் பாராட்டுவதன் மூலம் மேன்மேலும் தொழில் செய்திடவருமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!' - என்கிறார்.

அன்பர்களே! நன்கு சிந்தித்துப் பாருங்கள்; இந்தப் பூமி யாருக்குச் சொந்தம்? பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகளுக்கே சொந்தம் என்கிறார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

'பாடுபடுபவர்க்கே - இந்தப்
பாரிடம் சொந்தமையா!
காடு திருத்தி நல்ல - நாடு
காண்ப தவரல்லவோ?'

பாரதியார் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனக் குறிப்பிட்டமையை இங்கு நாம் நினைவு கூரவேண்டும். காடு திருத்திக் கழனியாக்கி நாடு முன்னேற நல்லுழவுத் தொழில் செய்யும் உழவர்களே இந்தப் பூமியின் சொந்தக்காரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்புகிறார் கவிமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கும் மேலாகப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறுவதைப் பாருங்கள்.

'சித்திரச் சோலைகளே உமை அன்று
திருத்த இப்பாரினிலே அன்று
எத்தனை தோழர் தம்
இரத்தம் சிந்தினரோ உங்கள் வேரினிலே' எனத் தொழிலாளர் தம் உழைப்பை இமயத்தின் உச்சியில் ஏற்றிப் பாடுகின்றார். எந்த வேலையையும் நாம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். உழைப்பால் உயர்ந்த கோடீஸ்வரர்களின் வாழ்க்கைச் சரிதங்களை வாசித்துப் பாருங்கள். அவர்கள் தங்கள் அந்தஸ்துக்குக் குறைச்சல் என்று எந்த வேலையையும் மதிப்பிடுவதில்லை. எந்த வேலையையும் செய்யத் தயாராக இருந்தார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்வீர்கள். செய்யும் தொழிலே தெய்வமாகக் கருதி உழைத்தவர்களே வாழ்வில் உயர்வு பெற்றனர்.

இத்தகு உண்மையை நாம் எந்நாளும் மனதிற் கொள்ள வேண்டும். தொழில் மகத்துவத்தை, தொழிலாளர்களின் உழைப்பை மதித்துப் போற்றாத சமூகம் ஒருபோதுமே எழுச்சி பெறமுடியாது என்பதை இன்றைய உலகில் நாம் நிதர்சனமாகக் காணமுடிகிறது. எத்தொழிலையும் சமமாகக் கருதும் மனப்பான்மை மேனாட்டாரிடம் பெரிதும் உண்டு. இதனாற்றான் அவர்கள் தொழிற்றுறையில் முன்னணியில் திகழ்கிறார்கள். நம்மவர் எதை விரும்புகிறார்கள்? ஆடம்பரமான உடையணிந்து அலுங்காமல் நலுங்காமல் மேசையடியில் அமர்ந்து வேலை செய்யவே விரும்புகின்றனர். வயலில் இறங்கி வேலை செய்ய விரும்புவதில்லை. எல்லோரும் அரச பதவிகளையே நாடுகின்றனர். உழைப்பே தெய்வம் என்பதை உணர்ந்து கொண்டால் இந்நிலை இருக்காது.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலே வெள்ளிப் பணத்தைக் காட்டிலும் வியர்வைத் துளிகளுக்கே மதிப்பதிகம். ஜப்பான் நாட்டை ஒருகணம் நோக்குங்கள். தொழிற்றுறையில் இன்று உலகுக்கே வழிகாட்டும் நிலையில் திகழ்கிறது. அந்நாட்டு மக்களின் அயரா உழைப்பே அதன் முன்னேற்றத்திற்கு மூல காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு கவிதை எழுதுவதில் உள்ள பெருமை ஒரு நிலத்தை உழுவதில் இருக்கிறது' என்கிறார் ஜோர்ஜ் வாஷிங்டன். உழவுத்தொழில் மட்டுமல்ல அனைத்துத் தொழிலுமே வந்தனைக்குரியன. 'தாழாதே! எவரையும் தாழ்த்தாதே!' என்றார் எமிலி ஜோலா. அதையே நம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். எத்தொழில் செய்பவராயினும் அவர்களும் மனிதர்களே! என்ற எண்ணம் நமக்கு இருத்தல் வேண்டும். உழைப்பின் வாராத உறுதிகள் உளவோ? என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

'வியர்வையைச் சிந்து, நீ நன்கு வாழ்வாய்' என்கிறது ஆபிரிக்கப் பழமொழி. நம் உடலும் வளரும்; தொழிலும் வளரும் உழைப்பாலே என்பதை உணர்தல் வேண்டும்.

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்' என்ற திரைப்படப் பாடலை நன்கு சிந்தித்துப் பாருங்கள். உழவுத் தொழில் மட்டுமல்ல ஒவ்வொரு தொழிலுமே உயர்ந்ததுதான்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்...' என்றார் வள்ளுவர்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை' என்றார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை. எத்தொழிலையும் ஏற்றுச் செய்திடும் மனநிலை உருவாக வேண்டும். செய்யும் தொழிலில் பற்றுக் கொள்ள வேண்டும். தொழிலே தெய்வமெனப் போற்றி வாழ வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இது மிக மிக அவசியம் எனக் கூறி என்னுரையைப் பூர்த்தி செய்கிறேன். அனைவர்க்கும் நன்றி. வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருணனைக் கட்டுரை

# 14

# நான் பார்த்த தேர்த் திருவிழாக்காட்சி

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை.
2. மக்கள் விழாவுக்குச் செல்லும் காட்சி.
3. கோயிற் காட்சி.
4. தேர்த்திருவிழா.
5. முடிவுரை.

ஊருக்கு அழகு தருவது கோயில். திருக்கோயில் இல்லாத திருவிலூரும் என்னும் பெரியோர் வாக்கு இதனை நன்கு புலப்படுத்தும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. கோயிலுக்குச் சிறப்பைத் தருவது திருவிழா. ஆண்டுக்கொருமுறை ஆலயங்களில் நிகழும் திருவிழாக்கள் ஊர் கூடும் பெருவிழாக்களாக அமைகின்றன. தேர்த்திருவிழா எல்லாக் கோயில்களிலும் இறுதி விழாவிற்கு முதல் விழாவாக அல்லது இரண்டொரு விழா முந்தியதாக நடைபெறும். இவ்விழா கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பெருவிழாவாக அமைகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவைக் காண வேண்டும் என்னும் ஆவல் எனக்கு நெடுநாளாயுண்டு. இம்முறை எப்படியும் தேர்த்திருவிழாவைப் பார்த்தே தீருவது எனத் தீர்மானித்துக் கொண்டேன். அதிகாலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டேன். தெருவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். யாழ்ப்பாண நகரின் நாலா பக்கங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நல்லூர்க் கந்தன் ஆலயத்தை நோக்கிச் சென்ற வண்ணமிருந்தனர். காலை ஆறு மணிக்கு ஆலயத்தை வந்து சேர்ந்தேன். உள்ளே நுழைய முயன்றேன். பக்தர்கள் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு நிற்பதைக் கண்டேன். பலத்த சிரமத்தின் பேறாக ஒருவாறு ஆலயத்தினுள் நுழைந்தேன். அலைகடலென அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர் கூட்டம் காட்சியளித்தது. அசையவே முடியவில்லை. ஒருவாறாக யாகசாலையின் ஓரமாக நின்று கொண்டேன்.

வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாவதற்கான அறிகுறி தோன்றியது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ‘அரோகரா’ எனக் கோஷமிட வசந்த மண்டபத் திரை நீங்கியது. ஆறுமுகப் பெருமானின் அழகொளிரும் திருமுகத்தைக் கண்ணாரக் கண்டு களித்தேன். தீபாராதனைகள் யாவும் நிறைவெய்திய பின்னர் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக அழகிய பீடமொன்றில் ஆரோகணித்து உள்வீதி உலா வந்தார். தொடர்ந்து சரியாகக் காலை எட்டு மணிக்கு, மேளவாத்தியங்கள் முழங்க, நாதஸ்வரக் கலைஞர்கள் மல்லாரி இசைக்க ஆறுமுகப்பெருமான் கோபுரவாயிலைக் கடந்து வந்து அழகிய தேரில் எழுந்தருளினார். அவ்வேளை ‘அரோகரா’ கோஷம் விண்ணதிர ஒலித்துக் கொண்டிருந்தது. நாலாபுறமும் திரும்பிப் பார்த்தேன். தலையா? கடல் அலையா? என அதிசயிக்கும் வகையில் எங்கும் பக்தர்களின் தலைகளே தெரிந்தன. இத்தகைய பக்தர் கூட்டத்தை என் வாழ் நாளில் எங்குமே யான் கண்டதே இல்லை. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏன் உலகின் பல பாகங்களிலிருந்தும் கூட இம்முறை பக்தர்கள் நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவைக் காணப் பல இலட்சக்கணக்கில் திரண்டிருந்தனர்.

கற்பூரச்சட்டி ஏந்துவோர் ஒருபுறம். திருமுறைகளை மனமுருகிப் பக்திப் பரவசத்துடன் பாடுவோர் மறுபுறம். நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவோர் தேரின் பின்புறம்.

‘இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்...’

என்னும் மணிவாசகப் பெருமானின் அருட்பாடலுக்கேற்பப் பக்தர் கூட்டம் பல்வேறு வகையில் காட்சி தந்தது.

தேரில் ஆறுமுகப் பெருமான் ஆரோகணித்ததும் குருக்கள் தேர் அர்ச்சனையை நடத்திப் பஞ்சாராத்தி காட்டியபோது கடலெனத் திரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற பக்தர்கள் உச்சிமேற் கைகுவித்து 'அரோகரா' என்று உச்சரித்துப் பக்திப் பரவசத்துடன் வழிபட்டனர். தொடர்ந்து தேரின் முன்னே மலைபோல் குவிக்கப்பட்டிருந்த தேங்காய்களைப் பக்தர்கள் சிதற அடித்தனர். மணி ஒலித்ததும் தேரில் பூட்டப்பட்டிருந்த பெரிய வடத்தைப் பக்தர்கள் கரந்தொட் டிழுத்தனர். 'அரோகரா' கோஷம் விண்ணதிர ஒலிக்க ஆறுமுகப்பெருமானின் தேர்ப்பவனி தொடர்ந்தது. கடலெனத் திரண்ட பக்தர் கூட்டத்தின் நடுவே தேர் அசைந்து சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நல்லைக் கந்தனின் கற்பூர ஒளி காணாக் கண் என்ன கண்ணே! என்று சொல்லும் வகையில் இம்முறை கர்ப்பூரச் சட்டிகளைப் பெருமளவில் அடியார்கள் தாங்கிய வண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

ஆறிரு தடந்தோள் வள்ளலின் தேர்ப்பவனியை ஒட்டி வீதிகளில் குவிக்கப்பட்டிருந்த தேங்காய்களைப் பக்தர்கள் சிதற அடித்ததோடு தம் தலைமேல் அடித்தும் மகிழ்வு கொள்வதைக் காணக்கூடியதாயிருந்தது.

தேரின் பின்னே பன்னூற்றுக் கணக்கான அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் அடியழித்தும் தங்கள் நேர்த்திக் கடனகளை நிறைவு செய்தனர். தெற்கு, மேற்கு, வடக்கு வீதி வழியாகத் தேர் மெல்ல மெல்ல அசைந்து சென்று கோபுர வாயிலின் கிழக்குப் புறமாயுள்ள தேர் முட்டியின் பக்கத்தில் நின்றது. அவ்வேளை குருக்களவர்கள் விசேட அர்ச்சனை நடத்தினார்.

தொடர்ந்து ஆறுமுகப்பெருமானுக்குப் பச்சை சார்த்தும் நிகழ்ச்சி இடம்பெற்றது. தங்க ஒளியுடன் முன்னர் காட்சியளித்த ஆறுமுகப்பெருமான் பச்சை சார்த்திய பின்னர் பச்சை வண்ண ஒளி வீசும் வண்ணத்தில் தோற்றமளித்தார். பின்னர் அழகிய பீடத்தில் ஆரோகணித்து ஆறுமுகப்பெருமான் அடியார்களின் தோள் மீதமர்ந்து அசைந்து அசைந்து ஆலய வசந்த மண்டபத்தைச் சென்று சேர்ந்தார். அங்கு பக்தர்கள் அர்ச்சனை செய்வித்தனர். நானும் அர்ச்சனை செய்வித்துக் குருக்களிடம் விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு பகல் பத்து மணியளவில் வீடு திரும்பினேன். என் வாழ்நாளில் இத்தகைய அருட்காட்சியையும், பக்தர் கூட்டத்தையும் இத் தேர்த் திருவிழாவிற்றான் கண்டேன். நான் பார்த்த இத்தேர்த் திருவிழாக் காட்சியை என்றுமே மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வரலாற்றுக் கட்டுரை*

# 15

# அறிவியல் அறிஞர் லூயிஸ் பாஸ்டர்

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை.
2. பிறப்பு, வளர்ப்பு, கல்வி.
3. மேற்கொண்ட ஆய்வுகள்
4. கண்டுபிடிப்புக்கள்
5. முடிவுரை.

ஒருநாள் வீதியில் ஒரு மனிதன் சென்று கொண்டிருந்தான். அவனை வெறிநாய் ஒன்று துரத்திக் கடித்தது. வேதனையால் கடிபட்டவன் கதறினான். அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் செய்வதறியாது திகைத்தனர். அவன்மீது இரக்கம் கொண்ட சிலர் அவனைக் கொல்லனிடம் அழைத்துச் சென்றனர். நாய் கடித்த இடத்தில் சூடு போடுமாறு கேட்டனர். கொல்லன் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போட்டான். வெறிநாயால் கடியுண்டவன் அதன் வெம்மை தாங்காது அலறினான்.

இதையெல்லாம் ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் பார்த்துப் பரிதாபப்பட்டான். இந்தச் சம்பவம் அவன் மனத்தில் ஆழமாகப் பதிந்து கொண்டது. அச்சிறுவன் வளர்ந்து பெரியவன் ஆனான். அறிவியல் கற்றுத் தேறினான். பேராசிரியன் ஆனான். சிறுவனாக இருந்தபோது கொல்லன் பட்டறையில் கண்ட காட்சி அவன் மனதில் என்றும் நினைவில் நின்றது. அறிவியல் மூலம் அயராது உழைத்தான். அரும்பாடுபட்டு வெறிநாய்க் கடிக்குச் சிகிச்சையளிக்கும் அற்புதமான மருந்தொன்றைக் கண்டுபிடித்தான். உலகம் அவனைப் போற்றிப் புகழ்ந்தது.

அச்சிறுவன்தான் லூயிஸ் பாஸ்டர் (Luis Pasteur) அவர் பிரான்சு நாட்டில் உள்ள டோல் என்னும் சிற்றூரில் 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் ஜோசப் பாஸ்டர். தாயாரின் பெயர் ஜீன் எடினட் ரோக்யீ. லூயிஸ் பாஸ்டர் ஆர்பாய்ஸ் (Arbois) நகரில் உள்ள கல்லூரி ஒன்றில் சேர்ந்தார். அங்கு கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் போக மற்ற நேரங்களில் பல்வேறு நூல்களையும் படித்தார். பின்னர் பாரிசு நகர் சென்று உயர் கல்வி பயின்றார். இரசாயனமும் பௌதிகமும் லூயியினுடைய இரு கண்கள் எனக் கூறலாம். அவ்விரு பாடங்களிலும் அவர் அளவிறந்த ஆர்வம் காட்டினார். உடலியல் தொடர்பாகச் சிறப்பான கல்வி கற்ற லூயிஸ் பாஸ்டர் 'டார்டாரிக்' அமிலம் பற்றிய சிறப்பான ஆய்வினை நடாத்தினார். அந்த அமிலத்தில் இருந்து 'ரேசமிக்' அமிலம் என்னும் அமிலத்தைத் தயாரிப்பது எப்படி என்பதை அறிந்து கொண்டார். அது விஞ்ஞான உலகில் பெரும் சாதனையாகக் கருதப்பட்டது. பொருட்கள் கெட்டுப் போவதற்கான காரணங்கள் குறித்தும் ஆராய்ந்தார். கண்ணுக்குத் தெரியாமல் காற்றில் கலந்துள்ள கிருமிகளே அதற்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தார். ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆராய்ந்து காற்றில் கலந்துள்ள நுண்ணுயிர்களின் செயல்களால்தான் ஒருவிதமான வேதியல் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை அறிந்தார்.

பால் கெட்டுப் போகாமல் பதமாக வைத்திருக்கும் முறையை முதன்முதலாகக் கண்டறிந்தவர் இவரே. பக்ரீரியாவின் (Bacterias) பாதிப்பிலிருந்து பாலைக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் முறைக்கு பாஸ்டரின் பெயராலேயே 'பாஸ்டுரைசேஷன்' (Pasteurization) எனப் பெயரிடப்பட்டுள்ளமை அவரது ஆராய்வுத் திறனுக்கு எடுத்துக் காட்டாகும்.

நோய்களை உண்டாக்கும் கிருமிகளைப் பற்றிய ஆய்விலேயே அவர் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தார். லூயிஸ் பாஸ்டர் விஷக் கிருமிகளைப் பற்றி எடுத்துக் கூறியபோது அக் காலத்திலிருந்தோர் ஆரம்பத்தில் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நாளடைவில் அவரது முடிவுகளை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். வெறிநாய்க்கு ஏற்படும் 'ரபீஸ்' (Rabies) என்ற நோயே அந்நாயால் கடிக்கப்பட்ட மனிதனுக்கு ஆபத்தை விளைவித்துள்ளதெனக் கண்டறிந்தார். இதனைத் தடுத்தற்கான மருந்தையும் அவர் கண்டுபிடித்தார். பன்றிகளையும் ஆடுகளையும் பலி கொள்ளும் ஒரு மோசமான நோய் குறித்து ஆராய்ந்தார். அவ்வாய்வின் பேறாக இறந்துபோன ஒருவகையான வியாதிக் கிருமிகளைக் கொண்டு அம்மைப்பால் தயாரித்தார். அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பாதுகாத்தார்.

பிரான்சில் உள்ள ஒரு செல்வந்தர் உதவிய பணத்தைக் கொண்டு நோய்களைப் பற்றிய ஆய்வுக்கான நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டது. அது பாஸ்டர் நிறுவனம் என அழைக்கப்படுகிறது. 1895 ஆம் ஆண்டு தமது எழுபத்திரண்டாவது வயதில் இவர் இயற்கை எய்தினார்.

மனித சமுதாயத்துக்கு மருத்துவத்துறையில் மாபெரும் சேவை செய்த அறிவியல் மேதை லூயிஸ் பாஸ்டர் மறைந்தாலும் அவரது புகழ் இவ்வுலகம் உள்ளவரை நின்று நிலைக்குமென்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. வாழ்வின் குறிக்கோள்.
3. ஒழுக்கம் உயர்வு தரும்.
4. ஒழுக்கம் உயிரினும் மேலானது.
5. ஒழுக்கத்தால் உயர்ந்தோர்.
6. முடிவுரை.

---

'ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும் என்றாலது மிகையல்ல. இதனாலேயே ஒல்காப் புகழ்மிகு தொல்காப்பியரும்' உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமையவேண்டும். இறந்தும் நாம் வாழவேண்டுமாயின் இருக்கும்போதே மேன்மையான வாழ்வை வாழவேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும் ' ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை' எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயினும் அதன்மூலம் புகழீட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள்வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக நாம் மதித்துப் பேண வேண்டும். ஒழுக்கத்தை உயிர்போற் கருதிக் காப்பாற்ற முனைய வேண்டும். இத்தகையோரையே வள்ளுவர் 'ஒழுக்கத்தின் ஒல்கா உரவோர்' என்கிறார்.

ஒழுக்கமுடையோர் நிச்சயம் உயர்வடைவர். 'நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும்' என்பது முதுமொழி. ஒழுக்கத்தை உயிராக - உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம். 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம். தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்' என்பது வள்ளுவர் வாக்கு. தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒழுக்கம் இல்லாதோர் தலையின் இழிந்த மயிரனையர் ஆகிவிடுவர். எனவே சமூக அந்தஸ்தைப் பெற மனிதனுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர். புத்தர், இயேசு, காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

'நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும் நான் மகிழ்ந்துவிட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும் பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும்' என மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தியடிகள். அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்துப் பேணிக் காப்பாற்றியதன் மூலமே உலகத்தோரால் மகாத்மாவெனப் போற்றப்படுகிறார். ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் உத்தமர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்ப்போமாயின் அவர்களின் உயர்வுக்கு ஒழுக்கமே அடிப்படையாக அமைந்திருந்தமையை நாம் உணரலாம்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர். அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவிற் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## தேசிய வீரர் சேர்.பொன்.இராமநாதன்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. பிறப்பும் படிப்பும்.
3. சட்டத்துறையில்
4. அரசியலரங்கில்.
5. கல்வி, சமயப் பணிகள்.
6. பெற்ற சிறப்புக்கள்.
7. முடிவுரை.

இலங்கை வரலாற்றில் அழியா இடம்பெற்ற பெருந் தலைவர்களுள் சேர்.பொன்.இராமநாதன் குறிப்பிடத்தக்க பெருமைக்குரியவர். இலங்கை மக்களின் விடுதலைக்காக இன,மத பேதமின்றிப் பணியாற்றிய பண்பாளர். இவர் சிறந்த சட்டவாதி: பழுத்த அரசியல்வாதி; சீரிய சமயத் தொண்டர். கல்விக் கூடங்கள் பல நிறுவிக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர். இலங்கை வாழ் மக்கள் அனைவரதும் நலனுக்காக வாழ்நாள் முழுதும் பணியாற்றியவர்.

இராமநாதன் அவர்கள் மானிப்பாயைச் சேர்ந்தவரும் கொழும்பில் வாழ்ந்தவருமான முதலியார் பொன்னம்பலம் அவர்களுக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் புதல்வராக 1851ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்னும் முதுமொழிக்கிணங்க இளமையிலேயே விவேகம் மிக்கவராக விளங்கினார். தற்போது றோயல் கல்லூரி என அழைக்கப்படும் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்னர் சென்னை பிரசிடென்சிக் கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டத்துறையில் ஈடுபட விரும்பினார். சேர்.றிச்சாட் மோர்கன் என்னும் பிரபல சட்டவாதியின் கீழ் சட்டக்கல்வி பயின்று 1873இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். சட்டத்துறையில் பிரபலம் பெற்று விளங்கினார். இதன் காரணமாக இலங்கை மக்களின் பெருமதிப்புக்குரிய தலைவரானார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர்களின் அன்புக்குரியவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911இல் முதலாவது சட்டசபையில் படித்த இலங்கை மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பெற்றார். இலங்கையில் உள்ள அனைத்து மக்களினதும் அன்புக்குரியவராக விளங்கினார். தன் சொல்வன்மையாலும் மதிநுட்பத்தாலும் ஒப்பற்ற தலைவராக மிளிர்ந்தார்.

அரசியல் துறையில் இவர் ஆற்றிய பணிகள் அநேகம். சாதி, மத, இன பேதமின்றிச் சகல மக்களினதும் நன்மைக்காக உழைத்தார். இலங்கை மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் சுதந்திரத்தைப் பெற வேண்டுமென வலியுறுத்தினார். இலங்கையின் சுதந்திரத்துக்காகப் பெரிதும் பாடுபட்டார். இலங்கை அரசியல் வரலாற்றில் 50 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியாகவும் அரசசபை அங்கத்தவராகவும் விளங்கினார்.

கொழும்பு மாநகரில் கொட்டாஞ்சேனையில் தமது தந்தையாரால் அமைக்கப்பெற்ற பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தைப் புனரமைத்துக் கும்பாபிஷேகத்தை (21.11.1912) சிறப்புற நடத்தினார். யாழ்ப்பாணத் தமிழ்ப் பிள்ளைகள் சைவச் சூழலில் தமது கல்வியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெற வேண்டுமென விரும்பினார். இதன்பொருட்டு 1913இல் சுன்னாகம் மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும் 1919இல் திருநெல்வேலியில் பரமேசுவராக் கல்லூரியையும் நிறுவினார். யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் மூலம் சைவப் பாடசாலைகள் பல தோன்றுதற்கு வழிகாட்டினார். சைவசமய வளர்ச்சிக்கான பணிகளுக்கு உதவினார்.

சமூக, சமய, அரசியல் பணிகளில் தீவிர பங்கு கொண்டு உழைத்த இப்பெரியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். இவரது அளப்பரும் சேவைகளை நினைவுகூரும் வகையில் கொழும்பில் உள்ள பழைய பாராளுமன்றக் கட்டட முன்றலில் இவரது உருவச்சிலை இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவராக இலங்கை அரசு இவரைக் கௌரவித்துள்ளது. இவரது நினைவாக முத்திரை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. இவர் தாபித்த கல்லூரிகளும் எழுப்பிய கோவில்களும் ஆற்றிய தொண்டுகளும் இன்றும் இவரை நினைவூட்டிய வண்ணம் உள்ளன. இவரது ஒப்பற்ற சேவைகளைப் பாராட்டி இவருக்குச் 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

இலங்கையின் விடுதலைக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவரதும் நல்வாழ்வுக்காகவும் பேதம் எதுவுமின்றித் தொண்டாற்றிய பெருந்தகை இவரென மக்கள் போற்றுகின்றனர். வாழ்நாள் முழுதும் நாட்டு மக்கள் நலனுக்காகத் தொண்டாற்றிய இப்பெரியார் 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். சேர்.பொன்.இராமநாதனின் பூதவுடல் மறைந்ததேயன்றி அவரது புகழ் என்றும் இலங்கை மக்கள் மனதில் நின்று நிலைபெறும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் கட்டுரை

# 18

# நான் விரும்பும் கவிஞர்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. விரும்புவதற்கான காரணம்.
3. பிறப்பும் கல்வியும்.
4. பாட்டுத் திறத்தாலே பாலித்தவன்.
5. கவிஞர்கள் போற்றும் கவிஞன்.
6. புதுவழி காட்டியவர்.
6. முடிவுரை.

எனக்குக் கவிஞர்களையே மிகவும் பிடிக்கும். ஏனெனில் அவர்கள் தான் உள்ளத்தை ஈர்க்கும் உயர்ந்த கருத்துக்களை உணர்ச்சித்துடிப்புடன் வெளிப்படுத்துபவர்கள். மொழியைச் சரியாகப் பயன்படுத்துபவர்கள் கவிஞர்களே. 'கவிஞனே கடவுளிலும் மேலானவன்' என்றார் மகாகவி தாகூர். 'கடவுள் படைத்தவை அழிந்து போகின்றன; கவிஞன் படைத்தவை அழிவதில்லை'. இதுவே அதற்குக் காரணமெனவும் அவர் கூறினார்.

கவி தாகூரின் கூற்று முற்றும் உண்மையே. திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, காளிதாசன், பாரதி போன்ற கவிஞர்கள் காலத்தை வென்று இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவிதைகள் மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றன. இந்த வகையில் காலத்தால் அழியாத படைப்புக்களை ஆக்கித் தந்த பாரதியே நான் விரும்பும் கவிஞராவார்.

இவர் தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரம் என்னும் ஊரில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி (11.12.1882) பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமிஐயர், தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். இவரது இளமைப்பெயர் சுப்பிரமணியன். பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே அதிக விருப்பம் இருந்தது. தமிழ்மொழி போல் இனிதான மொழி எங்கும் இல்லை என்பது அவரது கருத்தாகும்.

பாரதியார் சிறுவயதிலேயே கவிதை எழுதும் திறமை பெற்றிருந்தார். இவரது கவித்திறமையை மெச்சிய எட்டயபுரம் சமஸ்தானத்தினர் இவருக்குப் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். தமது பதினோராவது வயதிலேயே பாரதி என்னும் பட்டத்தைப் பெற்ற சுப்பிரமணியன் சுப்பிரமணிய பாரதியார் ஆனார். கவிதை மழை பொழியத் தொடங்கினார். புதுமைக்கவி, புரட்சிக்கவி என உலகோர் பாராட்டும் வகையில் கவிதைகளை எழுதினார். 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டுக்குழைத்தல்' என்றார். கவிதை அவரது தொழில் என்றும் அந்தத் தொழில் மூலம் நாட்டுக்கு உழைப்பேன் என்றும் கூறினார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கனல் கக்கும் தேசியப் பாடல்களை எழுதினார். இதன் பொருட்டுப் பல இன்னல்களுக்கு உள்ளானார்.

மொழியால், இனத்தால், மதத்தால் பிரிந்து கிடந்த பாரத நாட்டை ஒன்றுபடுத்தி ஒருமைப் பாட்டு உணர்வை ஊட்டிய பாரதி தமது கவிதைகள் மூலம் தேசத்தின் விடுதலைக்கு உரமூட்டினார். 'உள்ளத்தில் உள்ளது கவிதை, உணர்ச்சி உருவெடுப்பது கவிதை' என்று கவிதைக்கு இலக்கணம் கூறினார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. கவிமணியின் இப்பாடலுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் பாரதி. பாரதியின் கவிதைகளில் உணர்ச்சிப் பெருக்கு விஞ்சி நிற்பதை நாம் காணலாம்.

'தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த
ஜகத்தினை அழித்திடுவோம்'.
'தேடுகல்வி இல்லா ஊரைத் தீக்கிரையாக்குவோம்'
'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'
'சூத்திரனுக் கொருநீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொருநீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்' - என்னும் பாடல்வரிகள் வாசிப்போர் மனதில் உணர்ச்சிப் பெருக்கினை உருவாக்குவனவாகும். காக்கைக்குருவி எங்கள் சாதி எனக் கவிதை சொன்ன பாரதி பாலர்களுக்காகப் பாப்பாப் பாட்டுப் பாடியதோடு பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்னும் அருமையான காவியங்களையும் படைத்துள்ளார்.

தேசீயம், தெய்வீகம், சமூகம், தத்துவம் எனப் பல்வேறு பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களில் அவரது கவிதைகள் அமைந்துள்ளன. பெண் விடுதலையைப் பாரதி பெரிதும் விரும்பினார். புதுமைப் பெண்ணின் குரலாக ஒலித்தார். 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என ஆசை கொண்டவர் பாரதி. வீரம், அறிவு, உணர்ச்சி வேகம் இத்தனையும் பாரதியின் கவிதையில் உண்டு. இதனாலேயே பாரதியின் பாட்டு வையத்தைப் பாலிக்க வைத்து வருகிறது. 'தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான்' என்றொரு கவிஞர் பாரதியினைக் குறிப்பிடுகின்றார். அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண் உரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பன எல்லாம் பாரதியின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன.

இவரது தேசியப் பாடல்கள் கோழைகளையும் வீரம் கொள்ளச் செய்யும் சக்தி மிக்கவை. பாரதியின் தேசியப் பாடல்களில் உளம் நெகிழ்ந்த நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள்

'படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன் மெலிந்த தோளைக் கொட்டித்
துளை மிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத் தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென் றார்த்திங்கு
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வா னென்றால்

அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்' - என்று ஆவேச உணர்வுடன் பாடினார்.

கொஞ்சு மொழிபேசும் மழலைகள் விரும்பும் கனிவொடு கூடிய கவிதை பலபடைத்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும் பாரதியின் பாட்டில் மனதைப் பறிகொடுத்தவராவார். பாரதியின் பாடல்கள் அவரைக் கிறு கிறுக்கச் செய்து விட்டமையை வெகு அழகாகக் கூறுகின்றார்.

'பாட்டுக் கொருபுலவன் பாரதிஅடா - அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினான்அடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன் அடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா - எனத் தமது ஆற்றாமையைக் கூறி அவர்தம் பெருமையைப் புகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாருடன் நெருங்கிப் பழகி அவர்தம் புலமையை நன்கறிந்து, அவரது தாசனாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன். அவர் பாரதி பற்றிக் குறிப்பிடும் போது;

பைந்தமிழ்த் தேர்ப்பாகன்! அவன் ஒரு
செந்தமிழ்த் தேனீ! சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக்குயில்! இந்நாட்டினைக்
கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீங்கப் பாடிவந்த நிலா!
காடுகமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம் பாடவந்த அறிஞன்' - எனப் போற்றுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்ந்த பாரதி பழந்தமிழ் மரபைப் பேணியதோடு, மரபை மறுத்து தெம்மாங்கு, பள்ளு, சிந்து, கண்ணி முதலிய நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலும் கவிதை பாடியுள்ளமை அவரைப் புதுமைக்கவிஞராக உலகுக்கு இனங் காட்டியுள்ளது. புதுக்கவிதையாளர்களின் முன்னோடி அவரேயெனப் புதுக்கவிஞர்கள் போற்றுகின்றனர்.

பாட்டாலே விடுதலை உணர்வை ஊட்டிய கவிஞன் பாரதி. வெள்ளையர்க்கு அஞ்சாது அவன் பாடிய விடுதலைப் பாடல்கள் அடிமையில் வாழ்ந்த மக்களைத் தட்டியெழுப்பின. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று பாடி மக்களிடம் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார்.

பாரதியார் ஒரு தீர்க்கதரிசி. சுதந்திரம் வருவதற்கு முன்னே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று பாடினார். அவரது விடுதலைக் கனவே அதுவாகும்.

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று' கனவு கண்டு பாடினார். அவரது கனவு நனவாயிற்று. அவரது விடுதலை வேட்கையினையே இது எடுத்துக்காட்டுகிறது.

எளிய, இனிய இலகுவான சொற்களைப் பயன்படுத்திப் பாச்செய்த பாரதி இலகு தமிழில் அநேக கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சின்னச் சின்ன வசனங்கள், உயிர்த்துடிப்புள்ள சொற்கள், கற்பனைத் திறன் அனைத்தையும் அவரது கட்டுரைகளில் நன்கு காணலாம். பாரத நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையிலும் பெருமையிலும் பற்றுக் கொண்டிருந்த பாரதியார் வளரும் அறிவியல் புதுமைகளிலும் நாட்டம் கொண்டிருந்தார். இதனையே,

'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி
மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்.'

'சந்திரமண்டலத்தியல்பு கண்டு தெளிவோம்...' என்னும் பாடல் வரிகள் அடையாளம் காட்டுகின்றன. பாரதியின் கவிதைகள் ஒவ்வொன்றும் சொற் சித்திரங்கள். அவை காலம் கடந்து வாழும் பெருமைக்குரியன; புதுவழி காட்டுவன.

'ஒருமழை மாதத்தில் எட்டயபுரத்தின் இளைத்த தெருவொன்றில் பிறந்த அந்தப் பிஞ்சு சூரியன்' 1921 செப்டெம்பர் மாதம் 11 ஆம் நாளில் இவ்வுலகை விட்டு மறைந்தது. ஆம்; 39 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த மகாகவி மறைந்து விட்டாலும் அவரது கவிதைகள் மறையாது ஒளி பரப்பிக் கொண்டே இருக்கின்றன. அவரது அடிச்சுவட்டில் காலந்தோறும் புதுப்புதுக் கவிஞர்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர். தமிழிலக்கிய வானில் சுடர்விட்டொளிரும் விண் மீனாக, நாட்டு விடுதலை என்ற புதிய பாடு பொருளைத் தந்ததோடு, தமிழ்க் கவிதையாகிய பாட்டு விடுதலையையும் தந்தவர் பாரதியார்.

புது வழிகாட்டிய புதுமைக் கவிஞர் பாரதியை நான் பெரிதும் விரும்புகிறேன். அவரது கவிதைகள் உள்ளவரை அவர் புகழ் உலகெலாம் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை. பாரதி நாமம் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. முக அழகு.
3. அக அழகு.
4. பழமொழியின் கருத்து.
5. முடிவுரை.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது முதுமொழி. பல்லாண்டு காலமாக நம்முன்னோர் பயன்படுத்திவரும் பழமொழி இது. இப்பழமொழியின் கருத்து மிக ஆழமானது. மனிதகுலத்துக்குப் பாடம் கற்றுத் தருவது.

முக அழகு என்பது ஒருவருடைய முக அமைப்பைப் பொறுத்த விடயம் மட்டுமல்ல. மூக்கு அழகாக, எடுப்பாக, கண்கள் கவர்ச்சியாக, உதடுகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த, நெற்றி பிறை நிலாத் தோற்றம் கொள்ள இருந்து விட்டால் மட்டும் அந்த முகம் அழகாகி விடும் என்று கூறுவதற்கில்லை.

இயற்கையே முகத்தை உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப் படுத்தும் கண்ணாடியாக ஆக்கி வைத்திருக்கிறது. உள்ளத்தில் நிழலாடும் உணர்வுகளை, கிளர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவது முகமாகும். சிறு குழந்தைகளின் முகங்களை நாம் பார்ப்போமாயின் அவர்களது முகங்களில் அவர்களது அக அழகை நன்கு காணலாம். கள்ளங்கபடமற்ற அவர்களது உள அழகை அவர்களது முகம் நன்கு காட்டும். இத்தோற்றத்தை குழந்தைத்தனம் என்று கூறுவர். மாசுமறுவற்ற அவர்களது உள அழகே அவர்களது முகங்களில் பிரதிபலிக்கின்றது. ஆனால் வயது முதிர்ந்தோரின் முக அழகைக் குழந்தைகளின் முக அழகுடன் ஒப்பிட்டுக் கூறிவிட முடியாது. குழந்தைகள் வஞ்சகம் அற்றவர்கள். அவர்களது உள்ளம் பால் போல் தூய்மையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாற்பது வயதுக்குப் பிறகு ஒருவன் தன்னுடைய முகம் எப்படி இருக்கிறது என்பதற்கு அவனே பொறுப்பாளி ஆகிறான்' என்கிறார் ஆபிரகாம்லிங்கன். ஒருவனது உள்ளத்து உணர்வுகளை அவனுடைய முகமே காட்டிவிடும் என்ற உண்மையை நாம் மறந்து விடக் கூடாது.

உள்ளம் தெளிவாக, உணர்ச்சிபூர்வமாக, எண்ணங்கள் தூய்மையாக இருக்கும்போது முகத்துக்கு ஒரு தனி அழகு - தேஜஸ் ஏற்பட்டுவிடுகிறது. உலகம் போற்றும் பெரியார்களின், மகான்களின் முகங்களைப் பாருங்கள். அவை சாமுத்திரிகா இலட்சணப்படி அழகான முகத்தோற்றம் கொண்டவை என்று சொல்வதற்கு இல்லை. ஆயினும் அவர்களது முகப்பொலிவு அனைவரையும் அவர்கள் பால் ஈர்த்து விடுகிறது. அவர்களது அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலித்ததே இதற்குக் காரணமாகும்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் - நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

தன்னையடுத்த பொருளினையுடைய நிறத்தை தானே கொண்டு காட்டும் பளிங்கு போல ஒருவன் நெஞ்சத்து எழும் உணர்வுகளை அவன் முகம் தானே கொண்டு காட்டும் என்கிறார் வள்ளுவர். அவர் மேலும் கூறுகிறார்;

'முகத்தின் முதுக் குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்'.

ஒருவனை உவந்தாலும் கோபித்தாலும் முகம் முற்பட்டு அவற்றைக் காட்டும். ஆதலால் முகம் போல் அறிவுமிக்கது, பிறிது எதுவும் இல்லை என்பது இதன் கருத்தாகும். எனவே அகத்தின் அழகை முகமே பிரதிபலிக்கும் என்ற உண்மையினை இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஒப்பனையால் ஒருவர் அழகாகி விடமுடியாது. உள்ளத் தூய்மையால் மட்டுமே மற்றவர்கள் நேசிக்கின்ற - விரும்புகின்ற அழகைப் பெற முடியும். இதைத்தான் அகத்தினழகு முகத்தில் தெரியும் என்னும் முதுமொழி நமக்குணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

# நான் கல்வியமைச்சர் ஆனால்...

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பேன்.
3. கலை, பண்பாட்டைக் காப்பேன்.
4. அனைவருக்கும் வேலை வாய்ப்பளிப்பேன்.
5. வாழ்க்கைக் கல்வியை வடிவமைப்பேன்.
6. முடிவுரை.

எப்போதும் நடப்பதையே நினைக்கும் நான் சில வேளைகளில் நடக்காததையும் நினைப்பதுண்டு. நான் கல்வி அமைச்சராவது நடக்க முடியாதது அல்ல. இதனால் நான் கல்வி அமைச்சராகும் நினைவில் மூழ்கிக் கிடக்கிறேன். நாட்டின் கல்வி அமைப்பைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் கவலைப்பட்டதன் விளைவே கல்வி அமைச்சராகும் ஆசை. நான் கல்வியமைச்சரானதும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களையும் எண்ணங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று நமது நாட்டில் இலவசக் கல்வியாலும், கட்டாயக் கல்வியாலும் எல்லோரும் எழுத வாசிக்கத் தெரிந்தவராகிறார்கள். பாடசாலைகளில் பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இதன் மூலம் எல்லோரும் எல்லா விடயங்களிலும் ஓரளவு தேர்ச்சி பெறுகிறார்கள். இக் கல்வி முறையைப் பலரும் பாராட்டுகிறார்கள். ஆனால் இதில் உள்ள குறைபாடு களைப் பலரும் காண்பதில்லை. இக்கால மாணவர்கள் அரச பதவிகளைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டே கல்வி பயில்கிறார்கள். அரசாங்கத்தில் உள்ள எழுதுவினைஞர் பதவிகளுக்கும் மருத்துவர், பொறியியல் முதலிய பிறதொழில்களுக்கும் பயிற்றப்படுகின்றார்களேயன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினால் உண்மைப் பயனைப் பெறுவதாயில்லை. பாடசாலைக் கல்வியைப் படித்து முடித்ததும் தாமாக ஒரு தொழிலைச் செய்யும் திறனற்றவர்களாகவே உள்ளனர். இன்றைய கல்விமுறையானது கிராமப்புறங்களில் உள்ள படித்தவர்களை நகர்களை நோக்கிப் படையெடுக்கத் தூண்டுகிறது.

நான் கல்வி அமைச்சரானதும் இன்றைய கல்வித் திட்டத்தை முற்றும் மாற்றியமைப்பேன். நாட்டில் உள்ள ஒவ்வொரு சிறுவனுக்கும் தொழிற்கல்வியும், நூற்கல்வியும் போதிக்க வழிசெய்வேன். இன்றைய கல்வி முறையானது மாணவர்களது நாட்டத்திற்கேற்ற கல்வியை வழங்குவதாயில்லை. இந்நிலையை மாற்றிட மாணவர்களுடைய நாட்டத்திற்கேற்ப ஒவ்வொரு தொழிலில் அவர்கள் வல்லுநராக வருதற்கு வாய்ப்பளிப்பேன். நாட்டுப்பற்றை மாணவர் மனதில் பதித்திட ஏற்ற வழிசெய்வேன். நம் நாட்டின் வரலாறுகளையும் பெருமைகளையும் மாணவர்கள் கற்றிட ஏற்றன செய்வேன். நம்நாட்டின் இலக்கியங்களைப் படித்திடவும் நமது பண்பாட்டைக் காத்திடவும் கல்வித் திட்டத்தினூடாக வழி வகுப்பேன். கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உதவிகள் வழங்கிட முற்படுவேன். கலை என்ற பெயரில் விலையாகும் இழிந்தனவற்றைத் தடை செய்வேன். தமிழர் பண்பாட்டைக் காப்பதற்குத் தனித்துறை ஒன்றை உருவாக்குவேன். பண்பாட்டுப் படங்கள், பண்பாட்டுப் படைப்புக்கள் யாவற்றையும் ஊக்குவிப்பேன். ஒவ்வொரு மாணவனும் பாடசாலையை விட்டு வெளியேறும்போது தொழிலறிவும் நூலறிவும் உடையவனாக, நாட்டுக்குப் பயன்தரும் பிரசையாக விளங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

நம் நாடு ஒரு விவசாயநாடு. நம்நாட்டின் முன்னேற்றம் உணவுற்பத்தியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இந்த உண்மையை உணர்ந்து நாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் விவசாயக் கல்வி போதிப்பதற்கும், விவசாயத்துறையில் நவீன முறைகளைப் புகுத்துவதற்கும் ஆவன செய்வேன்.

இன்றைய கல்வி முறையில் உள்ள பெரும் குறைபாடு தொழிற்றுறை வல்லமை சார்ந்தோரை உருவாக்காது வெறும் புத்தகப் படிப்பையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமெனக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதாகக் கருதப்படுகிறது. இந்நிலை முற்றாக மாற வேண்டும். பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வெளியேறும் பட்டதாரிகள் தாம் பெற்ற அறிவின் மூலம் சமூகத்தின் தேவைக்கேற்ற தொழில் துறைகளில் பயிற்சியளிக்கும் வல்லமையுள்ளவர்களாக விளங்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திட அவர்களது அறிவு பயன்படவேண்டும். இந்நோக்குடன் பல்கலைக்கழகக் கல்விமுறையில் மாற்றங்களைக் கொண்டுவர முற்படுவேன்.

எனது கல்வித் திட்டத்தின் மூலம் படித்தவர்கள் எல்லோரும் தத்தம் ஊர்களிலேயே தம் கல்வியைப் பயன்படுத்துவர். மருத்துவர்களின் சேவையும் பொறியியலாளர்களின் அறிவும் கலைஞர்களின் பணியும் தொழிலாளர்களது திறனும் அவரவர்களது ஊர்களில் பயன்படும். வெளிநாடுகளுக்கு வேலைதேடி ஓடும் நிலையிலிருக்காது; அதற்கு இடமும் அளிக்கப்படமாட்டாது.

எனது கல்வித்திட்டம் எல்லோர்க்கும் ஒரு தொழிற்கல்வியைக் கட்டாயமாகக் கற்றிடும் வாய்ப்பினை அளிக்கும். இதன் மூலம் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பரிதாபநிலை உருவாகாது. அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிட்டிட வழி செய்யும். அதற்கேற்ற முறையில் வாழ்க்கைக் கல்வியை வடிவமைப்பேன். நகர்ப்புறங்களில் உள்ள மாணவர்கள் பெறக்கூடிய சகல கல்வி வசதிகளையும் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களும் பெற்றிட எனது திட்டம் வழி செய்யும். ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள் அனைவரதும் குறைகளைக் களைந்திட வழிசெய்வேன்.

இன்னும் பற்பல கனவுகள், கற்பனைகள், திட்டங்களைக் கையில் வைத்துள்ளேன். நான் கல்வி அமைச்சரானதும் முதலில் மேற்கண்டவற் றைச் செயற்படுத்துவேன். ஏனையவற்றைக் கல்வியமைச்சரான பின் தொடர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## ஈழத்து அறிஞர் ஒருவர் (அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ்)

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. பிறப்பு, வளர்ப்பு, கல்வி.
3. வகித்த பதவிகள்.
4. தமிழ்ச்சூழல் உருவாக்கிய தமிழறிஞர்
5. ஆற்றிய பணிகள்.
6. எழுதிய நூல்கள்.
7. முடிவுரை.

அமிழ்தினும் இனிய இன்பத்தமிழே முஸ்லிம்களின் தாய்மொழி எனத் துணிந்து உரைத்தவர் அறிஞர் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள். அவர் ஈழநாடு பெற்றெடுத்த பேரறிஞர்களுள் ஒருவர். சிவில் சேவையாளராக, உதவி அரசஅதிபராக, கல்லூரி அதிபராக, செனட் சபை உறுப்பினராக, தமிழ்த் தொண்டராக, நூலாசிரியராக விளங்கிய பெருமைக்குரியவர்.

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் 1911 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆந் திகதி பிறந்த அஸீஸ் அவர்கள் 1973இல் இவ்வுலகைவிட்டுப் பிரியும் வரை தமிழுடன் இணைந்திருந்தார்; தமிழ்த் தொண்டராகவே விளங்கினார். இவர் யாழ்ப்பாணம் அப்துல் காதர் வீதியில் அமைந்துள்ள அல்லாப்பிச்சை பள்ளி எனப்படும் அரசினர் முஸ்லிம் பாடசாலையில் மூன்றாம் வகுப்புவரை கல்விகற்றார். யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சூழல் அவரைப் பெரிதும் ஈர்த்தது. இதன் காரணமாக வண்ணார்பண்ணையில் அமைந்திருந்த இராமகிருஷ்ணமிஷன் வைத்தீசுவர வித்தியாலயத்தில் சேர்ந்து தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். இளமை முதலே இன்பத் தமிழ் மீது ஆர்வம் கொண்டிருந்த அஸீஸ் அவர்களுக்கு வைத்தீஸ்வர வித்தியாலயச் சூழல் தமிழ் உணர்வை மேலும் வளர்த்திடப் பெரிதும் உதவியது. அங்கு தமிழ் மன்றம் ஒன்றை உருவாக்கிட முன்னின்றுழைத்த பெருமையும் இவருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ் அவர்கள் இடைநிலைக் கல்வியைக் கற்பதற்காக 1923இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார். அன்றைய நிலையில் இந்து மாணவர் மட்டும்தான் கற்கும் பாடசாலையாக இக்கல்லூரி விளங்கியது. அஸீஸ் அவர்கள் தான் இக்கல்லூரியில் சேர்ந்த முதலாவது முஸ்லீம் மாணவனாவார். 1929இல் பல்கலைக்கழகக் கல்லூரியில் அனுமதி கிடைக்கும்வரை அவர் இக்கல்லூரியில் பயின்றார். சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் (S.S.C) இந்து சமய பாடத்தில் விசேட சித்தி பெறுமளவுக்கு இக்கல்லூரியின் சூழ்நிலைக்கு அஸீஸ் ஆட்பட்டிருந்தார்.

தமது சின்னப் பெரியப்பா சு.மு.அ.அசனாலெப்பைப் புலவரின் அரவணைப்பில் வாழ்ந்த அஸீஸ் அவர்கள் தமிழ் உணர்வு மிக்கவராகத் தமிழ்த் தொண்டராக இறுதி வரை வாழ்ந்தார். சுவாமி விபுலாநந்தரின் தொடர்பும் இதற்குக் காரணமாக இருந்தது.

சிவில் சேவைப் பரீட்சையில் சித்திபெற்ற அஸீஸ் கல்முனையிலும், கண்டியிலும் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார். இக்கால கட்டத்தில் இவர் சுவாமி விபுலாநந்தருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இயல்பாகவே கல்வித் துறையில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த அஸீஸ் அரசபதவியைத் துறந்து விட்டு முஸ்லிம்களின் உயர்கல்விக் கூடமாக விளங்கிய கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியை 1948இல் ஏற்றார். ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இவர் பணியாற்றிய காலம் அதன் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. கல்கி ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் க. அன்பழகன், பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் போன்ற தமிழ் வல்லுநர்களை எல்லாம் கல்லூரிக்கு அழைத்து உரையாற்றச் செய்தார் அஸீஸ். பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, அமரர் கலாசூரி இ. சிவகுருநாதன் போன்றோர் ஸாஹிராவில் அதிபர் அஸீஸ் அவர்களின் மாணவர்களாக இருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ்மொழிதான் என்று உறுதிபட உரைத்தவர் அஸீஸ். ஸாஹிராவில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மொழிகளையும் கற்கும் வசதியினை ஏற்படுத்தினார். முஸ்லிம்களின் கல்வி மொழியாகத் தமிழ் மொழியே இருக்க வேண்டுமென வலியுறுத்தினார். 'அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்' என்று குரலெழுப்பிய அஸீஸ் அம்மொழியில் எழுந்த இஸ்லாமிய இலக்கிய நூல்களைத் தமது சமூகம் நுகரவேண்டுமென விரும்பினார். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார். தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்றார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும் பல்வேறு மாநாடுகளிலும் கலந்து கொண்டு தமிழ்மொழி யின் சிறப்புக்கள் குறித்து உரையாற்றினார். ஆங்கிலப் பட்டதாரியான அவர் தமிழிலே பேசினார்; தமிழிலே எழுதினார்; தமிழிலே சிந்தித்தார்.

இலங்கையில் இஸ்லாம், அறபுத்தமிழ் எங்கள் அன்புத் தமிழ், மொழிபெயர்ப்புக் கலை, மிஸ்றின் வசியம், கிழக்காபிரிக்கக் காட்சிகள், தமிழ் யாத்திரை, ஆபிரிக்க அனுபவங்கள் ஆதியாம் நூல்களை எழுதி வெளியிட்டார். இலங்கையில் இஸ்லாம் என்னும் நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசை அஸீஸுக்குப் பெற்றுக் கொடுத்தது.

இலங்கை மூதவையில் (செனட்சபை) உறுப்பினராகப் பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்ட வேளையில் அதனை முழு மூச்சாக எதிர்த்ததோடு ஐக்கிய தேசியக் கட்சியுடனான தொடர்பையும் துண்டித்துக் கொண்டார். தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்றினையே இது எடுத்துக் காட்டுகிறது. மூதவையில் (செனட்சபையில்) சிங்களம் மட்டும் மசோதாவுக்கு எதிராகத் தமது வாக்கை அளித்ததன் மூலமும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறியதன் மூலமும் அவரது உள்ளத்துணர்வை உலகுக்கு உணர்த்தினார்.

சிறந்த கல்விமானாக, அரசியல்வாதியாக, சமூக சேவையாளனாக, எழுத்தாளானாக, சொற்பொழிவாளனாக, முஸ்லிம் தமிழறிஞனாக, தமிழபிமானியாக உலகம் அவரைப் போற்றுகிறது. அன்னாரின் புகழ் என்றும் நிலைக்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளக்கக் கட்டுரை*

# 22

# செய்தித்தாளின் பயன்கள்

**குறிப்புக்கள்:**

1. முன்னுரை.
2. செய்தித்தாளின் தோற்றம்.
3. செய்தித்தாளின் வகைகள்
4. காலக் கண்ணாடி
5. உலகத் தொடர்புக்கருவி.
6. முடிவுரை.

அறிவியலின் வளர்ச்சி காரணமாக இன்று உலகெங்கும் பல்வேறு செய்தித்தாள்கள் வெளியாகின்றன. அன்றாடச் செய்திகளைச் சுருக்கமாக வானொலி மூலம் அறிகிறோம். அச்செய்திகளை விரிவாக அறியச் செய்தித்தாள்கள் பயன்படுகின்றன. ஓரிடத்துச் செய்தியை உலகெங்கும் கொண்டு செல்லும் கருவியே செய்தித்தாள். மனித வாழ்க்கையின் மகத்தான சக்தியாக இது திகழ்கிறது; வாழ்க்கையின் அன்றாடத் தேவையாகி விட்டது இது.

உலகில் செய்தித்தாள் முதன் முதலில் ஜெர்மனியிற்றான் வெளியானது. கி.பி. 1815 ஆம் ஆண்டில் வெளிவந்த இச் செய்தித்தாள் வார இதழாகவே வெளிவந்தது. நமது நாட்டிலும் முதன் முதலாக வெளிவந்த செய்தித்தாள் 'உதயதாரகை' ஆகும். இதுவும் 1841ஆம் ஆண்டில் வார இதழாகவே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

செய்தித்தாள் காலையிலும் வருகின்றது; மாலையிலும் வருகின்றது. இன்றைய நிலையில் செய்தித்தாள்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. நாட்டின் பலபகுதிச் செய்திகளையும் திரட்டிக் கொடுப்பது செய்தித்தாள்களே. செய்தித்தாள் வெளிவர ஆசிரியரும் செய்திகள் சேகரிக்கச் செய்தியாளரும் (நிருபர்) தேவை. ஒவ்வொரு இடத்திலிருந்தும் கிடைக்கும் செய்திகளை ஒழுங்குபடுத்தி வடிவமைத்து ஆசிரியர் வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித்தாள்கள் நாளிதழ், வாரஇதழ், மாதம் இருமுறை இதழ், மாத இதழ், காலாண்டு இதழ் எனப் பலவகைகளில் வெளிவருகின்றன. இவற்றில் செய்திகள் மட்டுமன்றி விளம்பரங்கள், வேலைவாய்ப்புச் செய்திகள், வானிலை அறிவிப்புக்கள், விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான விபரங்கள் என்பனவும் வெளியாகின்றன. சிறுகதை, தொடர்கதை, நாடகம், படக்கதை, கவிதை, திரைப்படக் குறிப்புகள் ஆகியனவும் இடம்பெறுகின்றன. சில செய்தித்தாள்கள் வாரம் ஒருமுறை சிறப்பு மலர்களையும் வெளியிடுகின்றன. அரசியல் தலைவர்கள், அறிவியல் அறிஞர்கள், திரைப்பட நடிகர்கள், இலக்கிய அறிஞர்கள் ஆகியோரின் நேர்காணல் (பேட்டி)களும் செய்தித்தாள்களை அழகு செய்கின்றன. செய்தித்தாள்களின் வளர்ச்சியால் காலையும் மாலையும் செய்திகள் படிக்க முடிகிறது.

பத்திரிகைகள் காலக் கண்ணாடி எனக் கருதப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டின் ஒவ்வொரு நாள்களும், ஒவ்வொரு நாட்களின் ஒவ்வொரு மணித்துளிகளும் செய்தித்தாள்களுக்குள் செய்தியாகவோ, கதையாகவோ, கட்டுரையாகவோ, கவிதையாகவோ இடம்பெற்று விடுகின்றன. அதனாற்றான் 'இன்றைய செய்தியே நாளைய வரலாறு' என்கின்றனர்.

செய்தித்தாள் அரசியல், கலை, பண்பாடு போன்றவற்றை மக்களுக்கு எடுத்துச்செல்லும் தலையாய ஊடகமாக விளங்குகிறது. மக்கள் வாழ்க்கையின் மாறுபாடுகளைச் சுமந்தும் மாறுபாட்டுக்குத் தேவையான கருத்துக்களைச் சுமந்தும் செல்வதால் செய்தித் தாள்கள் காலக்கண்ணாடியாகிக் காலத்தை வென்று நிற்கின்றன.

வார, மாத இதழ்கள் பல்வேறு பயன் தரும் அம்சங்களைக் கொண்டு வருகின்றன. அவை வாசகர்களைப் பெரிதும் கவர்கின்றன. எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கின்றன. ஏடுகளின் பெருக்கத்தைப் போலவே எழுத்தாளர்களும் பெருகி வருகின்றனர்.

'வாள்முனையானது சாதிக்காததைப் பேனா முனை சாதிக்கும்' என்பது உலகறிந்த உண்மை. இந்த உண்மையை உலகுக்குக் காட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித்தாள்களே உறுதுணையாக உள்ளன. உலக மக்களை ஒன்றுபடுத்த உதவும் சிறந்த ஊடகமாகச் செய்தித் தாள்கள் விளங்குகின்றன. நாட்டு நடப்பாகவிருப்பினும் சரி, நல்ல கருத்துக்களானாலும் சரி, நம்மை வந்தடைய வைப்பவை செய்தித் தாள்களே. அறிவியல், மருத்துவம், வணிகம், கல்வி போன்றவற்றின் வளர்ச்சிக்கும் செய்தித்தாள்களே துணை செய்கின்றன. செய்தித்தாள்களில் இடம்பெறும் ஆசிரியர் உரைகள் அச் செய்தித் தாள்களின் கொள்கையையும் நாட்டு நடப்பையும் பிரதிபலிப்பனவாக உள்ளன. அவை வாசகர் உள்ளங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்லன.

செய்தித்தாள்கள் வணிக நோக்கத்தோடு, நெறிப்படுத்தப்படாத சில செய்திகளையும் வெளியிடுவதாகக் குறை கூறப்பட்ட போதிலும் அவற்றின் பயன்கள் பலவென்பதை எவருமே மறுக்க மாட்டார்கள். நெல்லோடு களையும் நெருங்கியே வளர்வது போல் செய்தித்தாள்களிலும் களையுண்டு. படிப்போர் அவற்றை ஒதுக்கி விட்டால் போதும். உலகப் புதினங்களையும் உள்ளூர்ச் செய்திகளையும், அறிவூட்டும் கட்டுரைகளையும், அருமையான கவிதைகளையும், கதைகளையும் தரும் செய்தித்தாள்களை நாம் தவறாது படித்தல் வேண்டும். பத்திரிகை வாசிக்காதோர் பண்பாட்டை அறியாதோர் ஆவரெனக் கூறப்படுகிறது. எனவே தான் பாவேந்தர் பாரதிதாசனார் பத்திரிகைப் பெண்ணின் நலம் காணார் ஞாலம் காணார் என்கிறார்.

''அறிஞர்தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணே உன் நலம் காணார் ஞாலம் காணார்''

என்பது அவர் கவிதை.

செய்தித்தாள்களின் சிறப்பினை அறிந்து அவற்றை நாளும் படிப்பது நமது கடமையென உணர்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

# பழந்துணி (சுயசரிதை)

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. தோற்றமும் வளர்ச்சியும்.
3. அனுபவித்த சுய அனுபவங்கள்.
4. இன்றைய நிலை.
5. முடிவுரை.

நான் இப்பொழுது பழந்துணியாகக் குப்பை மேட்டிலே கிடக்கிறேன். என்னைக் கவனிப்பார் யாருமில்லை. இனி என்ன! என் முடிவு காலம் கிட்டிவிட்டதென எண்ணுகிறேன். மழை பெய்து என்னை உக்க வைக்கிறது. வெயில் தகித்து உருக்குலைந்து வருகிறது. என் இதயம் துன்பமிகுதியினாலேயே வெடித்து விடும் போலிருக்கிறது.

என் கவலைகளை, என் அனுபவங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதன் மூலமாகவாவது எனக்கு மனப்பாரம் குறையும். அதன் பின்பு நான் செத்து மடிந்து போகலாம். என் கதையை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? அப்படியானால் சரி; சொல்லுகிறேன். கேளுங்கள்.

இந்தியாவில் கோயம்புத்தூர் என்னுமிடத்தில் பெரும் பருத்தி வயல் இருந்தது. அவ்வயலில் உள்ள ஒரு பருத்திச் செடியில் நான் தோன்றினேன். அப்போது என் நிறத்தைப் பார்த்தாலே கண்கூசும். பால் போன்ற வெண்மை நிறம். சிறிது காலத்தின் பின்பு என்னையும் எனது நண்பர்களையும் பறித்து கூலியாட்கள் பொதிகளாக்கினார்கள். பின்னர் எம் அனைவரையும் இயந்திரசாலைக்கு அனுப்பினார்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரசாலைக்கு வந்த சிறிது நேரத்தில் ஒரு கதை பரவியது. எங்களை இயந்திரங்களினுட் செலுத்தி விதைகளினின்றும் வேறாக்கப் போகிறார்களாம். நான் நடுநடுங்கிப் போய் விட்டேன். என் சந்தோசம் மறைந்தது. பின்பு எங்களை இயந்திரங்களினுட் செலுத்தினார்கள். சிறிது நேரத்தின் பின் விதைகளினின்றும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வழியாக வெளியே வந்தோம். இவ்வாறு பெறப்பட்ட எங்களுக்கு 'பஞ்சு' எனும் பெயர் வைக்கப்பட்டது. பின்பு பல இயந்திரங்களினூடாகச் செலுத்தப்பட்டுத் தூய்மையாக்கப்பட்டோம். பின்னர் எங்களை மூன்றங்குலக் கனமுள்ள பாய்களாக அழுத்தினார்கள். வேறு இயந்திரங்களின் உதவியுடன் எம்மை மெல்லிய இழைகளாக்கிச் சுருணைகளாக்கினர். இழைகளாலாக்கப்பட்ட எங்களைப் பெட்டிகளில் அடைத்து வேறு ஒரு இயந்திரசாலைக்கு அனுப்பினார்கள். அங்கே பல நிறச் சாயங்களில் ஊற வைத்தார்கள். பின்பு பல இயந்திரங்களினுதவியுடன் துணிகளாக நெய்யப்பட்டோம்.

இதுவரை அனுபவித்த கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் வந்ததென்று நினைத்தேன். என்னையும் என் நண்பர்களையும் துணியின் வடிவிலே பார்க்கும் போது மிக அழகாக இருந்தது. எனக்கு என்னை நினைக்கும் போது பெருமையாக இருந்தது. பின்பு துணிகளாக நெய்யப்பட்ட நானும் நண்பர்களில் சிலரும் கப்பல்களில் ஏற்றப்பட்டோம். எங்களுக்கு மிகவும் சந்தோசம். நண்பர்களுடன் பிரயாணம் செய்வதென்றால் கேட்கவும் வேண்டுமா? எங்களுக்கு எங்கே போகிறோம் என்று துறைமுகத்தில் இறங்கும் வரை தெரியாது. துறைமுகத்தில் இறங்கிய பிறகு தான் நாங்கள் இலங்கை வந்துள்ளோம் என்பது தெரிந்தது. எனது மனம் ஆனந்தக் களிப்பில் ஆடியது. இலங்கையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை முன்பு இருந்தது. அது நிறைவேறுவதையிட்டு எனக்குச் சந்தோசம் எல்லை கடந்தது.

பின்பு நாங்கள் கடைகளுக்கு அனுப்பப்பட்டோம். அங்கு அலுமாரியில் வீற்றிருந்தோம். கடைக்கு வருபவர்கள் எல்லோரும் என்னையே பார்த்தார்கள். எனக்குப் பெருமை தாங்க முடியவில்லை. திரும்பி உட்கார்ந்து விட்டேன். அந்நேரத்தில் ஒரு பெண்மணி அங்கு வந்தார். என்னைக் காட்டி ஏதோ கூறினார். விற்பனையாளனும் என்னை எடுத்துக் காட்டினான். அவர் என்னைத் தொட்டுப் பார்த்தார். பின் பணத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து என்னைப் பெற்றுக் கொண்டார்.

நண்பர்களைப் பிரிகின்றேன் என்ற கவலை இருந்தாலும் அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் செல்கின்றேன் என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அங்கு அவரின் சின்ன மகளுக்கு நான் 'சட்டையாக ஆக்கப்பட்டேன். அந்தச் சின்ன மகளின் மேனியை அலங்கரிப்பதில் நான் சொல்லொணாப் பேரின்பம் அடைந்தேன். அவள் பிஞ்சுக் கைகள் என்னைத் தொடும் போது நான் என்னையே மறந்தேன். அவள் என்னை எந்நேரமும் ஆசையுடன் அணிவாள். பாடசாலைக்கு அணிந்து கொண்டு செல்வாள். மாலையில் கடற்கரைக்குப் பெற்றோருடன் செல்லும் போது அணிந்து கொள்வாள். எனக்குப் பெரிய மகிழ்ச்சி. ஆறுமாத காலம் சந்தோஷமாக வாழ்ந்தேன்.

இவ்வாறு பலமுறை அணியப்பட்டுச் சலவை செய்யும் அவர்களது வேலைக்காரனால் கிழியுண்டேன். பின்னர் அவனாலே சிறிது காலத்தின் பின் விளக்குத் துடைக்கப் பயன்பட்டேன். அதன் பின்பு குப்பை மேட்டில் எறியப்பட்டேன். இன்று யாரும் கவனிப்பாரில்லாமல் வாடுகிறேன். உயர்ந்த நிலையில் இருக்கும் போது மாத்திரம் பெட்டியில் பூட்டி வைத்துப் பாதுகாப்பார்கள். நிலை கெட்டு விட்டால் இப்படிக் கேவலப்படுத்துகிறார்கள். இனி என்ன? என் முடிவு நாளும் நெருங்கிவிட்டது. என் வாழ்வு வீழ்ந்து போனாலும் என் எசமானர் குடும்பம் சுகத்தோடு வாழவேண்டும். அதுவே என் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## 'பாட்டுப் பூங்கா': சிறுவர் இலக்கியத்திற்கு ஒரு புதுவரவு.

நூலாசிரியர் : கவிஞர் த. துரைசிங்கம்
வெளியீடு : ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
விலை : ரூபா 100/=

இலங்கையில் பல்கலைக்கழக நிலையில் எவ்வாறு பல்வேறு பாடத்துறைகளில் (பொருளியல், சமூகவியல், புவியியல்) தமிழ் நூல்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனவோ அதுபோன்று பாடசாலை நிலையில் சிறுவர்களுக்கான குழந்தை இலக்கியத்துறையிலும் ஒரு பற்றாக்குறை காணப்படுவது யாவரும் அறிந்ததே. வளர்ந்தோருக்கான படைப்பிலக்கியங்கள் (சிறு கதைகள், கவிதைகள்) சற்று விரிவான முறையில் வெளிவந்த போதிலும் குழந்தை இலக்கியத்தைத் தீண்டுவோர் குறைவு.

இலங்கையில் கவிஞர் த. துரைசிங்கம் குழந்தை இலக்கியத் துறையில் நீண்டகாலமாகப் பாராட்டத்தக்க பணியை ஆற்றி வருபவர். குழந்தை இலக்கியத்துறையில் தமிழ் கூறும் நல்லுலகில் நன்கு பேர் பதித்துக் கொண்டவர். இலங்கை அரசாங்கத்தின் தேசிய சிறுவர் இலக்கிய விருதுகளை நான்கு முறை பெற்ற பெருமைக்குரியவர். இலங்கை இலக்கியப் பேரவை, யாழ் இலக்கிய வட்டம், வடகிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு ஆகிய அமைப்புக்கள் இவருடைய படைப்புத் திறமையைப் பாராட்டி விருதுகள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவித்துவம், படைப்பாற்றல் தவிர ஏனைய சில தகுதிகளும் துரைசிங்கத்திற்கு உண்டு. பாடசாலை ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரி, கல்விப் பணிப்பாளர் எனப் பல மட்டங்களில் பணிபுரிந்த காரணத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பிள்ளைகளின் உளவியல் தேவைகளை அவர் நன்கறிந்தவர். பாடசாலைக் கல்வித்துறையில் பணியாற்றுவதால் மட்டுமே அடையக்கூடிய முக்கிய அனுபவம் இதுவாகும். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் மட்டுமே பழகுபவர்கள். பாடசாலைக் கல்வியாளர்கள் - துரைசிங்கம் போன்றோர் ஆயிரக்கணக்கான சிறுவர்களுடன் பழகியவர். அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைப்பவர். இவ்வகையில் கவித்துவம் நன்கு கைவரப்பெற்ற துரைசிங்கம் சிறார்களின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு சிறுவர் இலக்கியத் துறையில் தடம் பதித்துக் கொண்டதில் ஆச்சரியமில்லை. எனது நோக்கில் அவரது பாடசாலை அனுபவம்தான் அவரை ஒரு சீரிய குழந்தைக் கவிஞனாக்கி உள்ளது என்றால் அது மிகையாகாது.

இன்று பாடசாலைக் கல்விமுறை மீது ஏராளமான குறைகளை எடுத்துக் கூறுவோர் உள்ளனர். சமூகவியலாளர், சமயவாதிகள், பொருளியலாளர்கள், அரசியலாளர்கள் முதலியோர் தத்தம் சிறப்புத்துறை சார்ந்த நோக்கில் பாடசாலைக் கல்வியைத் திசை திருப்பியுள்ளனர். இவர்கள் எவருமே பிள்ளையின் பல்வகை ஆளுமை வளர்ச்சி, உளவளர்ச்சி, அறிவாற்றல் வளர்ச்சி எனப் பிள்ளை வளர்ச்சிக்கும் விருத்திக்கும் முக்கியத்துவம் தராது, பிள்ளை வளர்ச்சியுடன் தொடர்பற்ற வேறு நோக்கங்களுக்காகப் பாடசாலைக் கல்வியைப் பயன்படுத்த முற்பட்டனர். ஆனால் கல்வியியலாளர்களும் உளநூல் அறிஞர்களும் பிள்ளைகளின் - கற்போனின் மேம்பாட்டை மையப்படுத்தி (Focus on the Learner) அதற்கேற்றவாறு பாடசாலைக் கல்வி அமைய வேண்டும் எனச் சிந்தித்தனர். இச்சிந்தனையாளர்களின் கல்விக் கருத்திற்கு இசைவான முறையில் பிள்ளை வளர்ச்சிக்குத் தேவையான நல்ல சிந்தனைகள், கருத்துக்கள், ஒழுக்கங்கள், பண்புகள் முதலியவற்றைப் பிள்ளைகளின் மொழியில் இங்கு தமிழில் கவிதையாகப் பொழிந்து நற்பணியை ஆற்றிவரும் துரைசிங்கத்தை தமிழ்ப் பெற்றோர் உலகம் பெரிதும் பாராட்ட வேண்டும்.

'பாட்டுப் பூங்கா' என்னும் இந்நூலில் 41 பாடல்கள் உள்ளன. இவற்றில் சிறப்பானவை என்று எடுத்துக் கூறத்தக்க பாடல்கள் பல உள்ளன. கருத்து அமைதி, எளிமை, ஓசை நயம் எனப் பல்வேறு சிறப்புக்களைத் தாங்கியதாக அனைத்துப் பாடல்களும் அமைந்துள்ளன.

வணங்கிடுவோம் என்ற பாடலில்;

'அன்னை தந்தை எம்தெய்வம்
அன்பு பொழியும் எம் தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாநிலத்தில் இவர்கள் போல்

இனியவர் யாருளர் எங்களுக்கு' என்று பெற்றோரின் பெருமையைப் போற்றுகின்றார்.

மழையும் புயலும் என்ற பாடலில்

'செந்நெல் தலையைச் சாய்த்திடும்
செல்லும் வழிகள் மறைந்திடும்
மழையும் புயலும் வந்திடில்
மகிழ்ச்சி தானே மறைந்திடும்' எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

அழகு என்ற பாடலில்

'பாட்டுக்கு இசையழகு - நல்ல
பாலுக்குச் சுவை அழகு
பூவுக்கு நிறம் அழகு - தம்பீ
பொறுமையே உனக்கழகு' எனக் கல்வி அழகையும் பொறுமையையும் நற்பண்புகளையும் பாடல் மூலம் வலியுறுத்துகின்றார் கவிஞர்.

பிள்ளைகளின் மனதில் இலகுவாகப் பதியும் முறையில் நல்லுணர்வுகளை ஊட்டுகின்றார். பக்கத்திற்குப் பக்கம் வண்ணப் படங்களுடன் கூடிய பாடல்களைக் கொண்டுள்ள இந்நூல் சிறுவர் இலக்கியத்துறைக்கு ஒரு புது வரவு எனலாம். ஏற்கனவே 14 சிறுவர் பாடல் நூல்களை ஆக்கியுள்ள ஆசிரியரின் முதிர்ச்சி இந்நூலிலும் நன்கு பளிச்சிடுகின்றது. ஆரம்ப வகுப்புக்களில் கல்வி பயிலும் சிறுவர்களைக் கருத்திற் கொண்டு படைக்கப்பட்ட இந்நூல் சிறுவர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும் என்பது திண்ணம்.

கவிஞர் துரைசிங்கத்தின் இப்பணியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெரிதும் பாராட்டும். காலத்தின் தேவைக்கேற்ப நூலாசிரியர் மேன்மேலும் இத்துறையில் ஈடுபட வேண்டும் என்பதே என் விருப்பம். பாட்டுப் பூங்கா பாலர்களின் நாவில் நீடித்து ஒலிக்கும் என்பதில் ஐயமில்லை.

நன்றி: பேராசிரியர் சோ. சந்திரசேகரன்.
('தினகரன்' வார மஞ்சரி, 3.07.2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளக்கக் கட்டுரை*

# 25

# தகவல் பரிமாற்றம்

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. தகவல் பரிமாற்றம் என்றால் என்ன?
3. தகவல் பரிமாற்றத்தின் வளர்ச்சி.
4. பயன்பாடு.
5. முடிவுரை.

தகவல் தொடர்புப் பரிமாற்றம் என்பது ஒரு கலை; வளர்ந்து வரும் கலை. இது நாளுக்கு நாள் புது மெருகு பெற்று வருகின்றது. இதனை ஒரு குறிப்பிட்ட வகையாக வரையறுக்க முடியாது. அன்றாடம் அயல் வீட்டாருடன் பேசும் போதும் தொலைபேசியில் பேசுகையிலும், பொதுக் கூட்டங்களில் பேசும் போதும், தொலைக்காட்சி, வானொலி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துகையிலும், கைத் தொலைபேசி (cell-phone), தொலையழைப்பி (pager), மின்னஞ்சல் (e-mail), உருநகல் (fax), தந்தி, கணனி, இணையம், கையடக்கக் குறுந்தகடு (C.D. Rom), பத்திரிகை, புத்தகம் போன்றவற்றைப் பயன்படுத்துகையிலும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டே இருக்கிறோம்.

இவற்றைவிட நமக்கு மிகவும் பழக்கமான தகவல் பரிமாற்றம் ஒன்றிருக்கிறது. அதுதான் சைகை மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்வது. மனிதர்கள் தங்கள் முக உணர்ச்சிகளாலும் உடலசைவுகளாலும் எத்தனையோ செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். ஏதாவது ஒரு செய்தியை நாம் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்கிற செயலைத்தான் தகவல் தொடர்பு என்பர். இது சொற்களால் ஆனதாகவும் இருக்கலாம். வார்த்தைகளற்ற செயல்களால் ஆனதாகவும் இருக்கலாம்.

இவற்றை விட முக்கியமான, நமக்கு மிகவும் பழக்கமான மற்றொரு தகவல் பரிமாற்றம் உள்ளது. அது நமது மனித உடலமைப்பேயாகும். உடலில் உள்ள நரம்புகள் மூளைக்குத் தகவல்களைச் சரியாக எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதிற்றான் மனித உயிரின் இயக்கமே தங்கியுள்ளது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகையால் தகவல் பரிமாற்றம் என்பது முதலில் மனித உடலிலேயே அமைந்துள்ளது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் அழும் ஓசை கூட ஒருவகைத் தகவல் பரிமாற்றம் தான் என்கிறார்கள் அறிஞர்கள். குழந்தை தன் தாயுடன் முதன் முதலாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுத்தும் ஓசை தான் அழுகை. இது தான் குழந்தை மொழியின் துவக்கம் என்கிறார் மார்த்தா ஹேமன். இந்த இயற்கையான தகவல் பரிமாற்றம் காலத்திற்கேற்ப மாறுபட்டு வந்துள்ளது.

தகவல் பரிமாற்ற வளர்ச்சி குறித்து ஆராய்வோமாயின் முதன் முதலில் தகவல் பரிமாற்றம் எப்படியிருந்திருக்கும் என்பதை எவராலும் வரையறுத்து விளக்க முடியாதுள்ளது. குறிப்பாக மனிதர்களுக்கிடையே யான தகவல் பரிமாற்ற முறைகள் பற்றிய விபரங்கள் கூட இன்றுவரை முழுமையாக கிடைக்கவில்லை. காரணம் அந்தளவிற்கு இது பழமையானதாய் இருப்பதேயாகும்.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி ஆதிமனிதர்கள் மேளம் கொட்டி ஒலி எழுப்புதல் (பறைசாற்றுதல்), கோவில் மணியை ஒலித்தல், சங்கு ஊதுதல், புகை எழுப்புதல், தீப்பந்தம் ஏற்றி வைத்தல் போன்ற சைகைக் குறியீடுகளால் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனத் தெரியவருகிறது.

இவ்வகையில் பரிமாறிக்கொள்ளப்பட்ட தகவல்கள் எல்லோராலும் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்திருந்தன. தொலைதூரச் செய்திப் பரிமாற்றத்திற்கே இவை பயன்பட்டன எனலாம்.

அதேவேளையில் தமது எண்ணங்கள், கற்பனைகள், கதைகள் போன்ற ஆழமான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளப் பாட்டு , கவிதை போன்ற மொழிச் சாதனங்களைப் பயன்படுத்தினர்.

தகவல் பரிமாற்ற வளர்ச்சித் துறையில் 1440 ஆம் ஆண்டில் புதிய திருப்புமுனை ஒன்று ஏற்பட்டது. ஜொகான் கூடன்பேர்க் (Johann Gutenberg) என்பவர் நகர்த்தக்கூடிய எழுத்து அச்சுக்களை உருவாக்கினார். இதன் பேறாக எண்ணங்கள், கருத்துக்கள், செய்திகளைப் பரவலாக மக்களிடம் எளிதாகக் கொண்டு செல்லும் வாய்ப்புக் கிட்டியது. இதன் மூலம் மக்கள் தொடர்பு பெருமளவில் சாத்தியமாயிற்று. அச்சு சாதனம் மக்களுக்கு தகவல்களைப் பகிர்ந்தளிக்கப் பெரிதும் உதவிற்று.. அறிவியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு போன்ற துறைகள் வளர்ந்தன. கல்வி அறிவும் மக்கள் அனைவருக்கும் பொதுவானது.

ஆதிகாலத்தில் குகை ஓவியங்கள், ஓசைகள் மூலம் தகவல்களைப் பரிமாறி வந்த மனிதன் படிப்படியாக முன்னேறி இன்று செயற்கைக் கோள்கள் மூலமாகச் செய்திகளைப் பரிமாறும் நிலைக்கு வந்துள்ளான். முன்னர் அச்சு ஊடகம் மனிதனுக்கு எளிதாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் மனிதனது அவசர வாழ்க்கைக்கு ஏற்பத் துரிதமான தகவல் தொடர்புச் சாதனங்கள் தேவைப்பட்டன. அறிவியல் அறிஞர்கள் தமது பெரு முயற்சியின் பேறாகப் புதுப்புது தகவல் பரிமாற்றச் சாதனங்களைக் கண்டறிந்தனர். தந்தி, வானொலி போன்றவை கண்டறியப்பட்டன. பின்னர் தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டது. தொலைக்காட்சி உலகளாவிய மக்கள் தொடர்பை எளிமைப்படுத்தியது. வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றின் மூலம் தகவல் பரிமாற்றம் தற்போது பன்மடங்கு அதிகரித்துள்ளது. தகவல் தொடர்பு முன்னேற்றம் மனித முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியுள்ளது. தகவல் தொடர்புகள் விருத்தியடைந்ததன் பேறாக உலகின் எந்த மூலையிலும் நிகழும் சம்பவங்களை ஒரு சில நிமிடங்களில் நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

இன்றைய மின்னணுத் தொடர்புச் சாதனங்கள் தகவல்களை மின் வேகத்தில் நம்மை வந்தடையச் செய்கின்றன. இதன் பயனாக உலகமே ஒரு சிறு கிராமமாகச் சுருங்கிவிட்டதெனலாம். அந்தளவுக்கு எங்கு வேண்டுமானாலும் இன்றைய மின்னணுச் சாதனங்கள் மூலமாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. மின்னணுச் சாதனங்களின் மூலம் தகவல் தொடர்பு ஒரு விநாடிக்கு முந்நூறாயிரம் வந்தடையுமென ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வளவு வேகமான தகவல் பரிமாற்றமுறை மனிதகுலம் கண்ட இந்நூற்றாண்டின் மகத்தான சாதனை எனலாம். இதன் மூலம் நேரவிரயத்தையும், பணவிரயத்தையும் பெரிதும் தவிர்க்க முடிகிறது. கணனியும் இணையமும் இத்துறையில் நமக்குப் பெரிதும் உதவுகின்றன. எதிர்காலத்தில் தகவல் பரிமாற்ற முறையில் மேலும் பல புதிய நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படலாம். இதனாலேயே தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் ஒரு கலையாக மதிக்கப்படுகிறது. இத்தகவல் தொடர்பை உலகில் பயன்படுத்தாத துறையே இல்லை என்னும் நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளக்கக் கட்டுரை*

# 26

## சிறுதுளி பெரு வெள்ளம்

குறிப்புக்கள்:

1. முன்னுரை.
2. பழமொழி உணர்த்தும் உண்மை.
3. செலவும் செலவினங்களும்.
4. சேமிப்பின் அவசியம்.
5. சேமிப்பின் வழிகள்.
6. முடிவுரை.

---

வெள்ளம் பெருகியதாக இருக்கலாம். ஆனால் அது திடீரென உருவாகியதல்ல. பல இலட்சக்கணக்கான சிறுதுளிகள் ஒன்றாகச் சேரும் போதுதான் அது வெள்ளமாகப் பெருக்கெடுக்கிறது. மழை பெய்யும் போது வானத்திலிருந்து விழும் நீர் சிறுசிறு துளிகளாகவே காணப்படுகிறது. அந்தத் துளிகள் விரைவில் நீர்த் தாரையாகிப் பூமியில் ஒன்று சேர்ந்து வெள்ளமாகப் பெருக்கெடுக்கின்றன. பல்லாயிரக் கணக்கான சிறுதுளிகள் சேரும் போதே வெள்ளம் உருவாகிறது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்னும் பழமொழி நமக்கு எதை உணர்த்துகிறது? சிறு சிறு முயற்சிகள் பெரிய சாதனைகளுக்குக் காரணமாகின்றன என்ற உண்மையினையே இப்பழமொழி நமக்கு உணர்த்துகிறது. சிறுதுளிகள் பெருவெள்ளமாக மாறுவது போலச் சிறுகச் சிறுகச் சேமித்து வந்தால் அது நாளடைவில் பெரும் செல்வமாகும் என்ற உண்மையையும் இப்பழமொழி நமக்குப் புலப்படுத்துகிறது.

வாழ்க்கை பணத்தை மையமாகக் கொண்டே சுழல்கிறது. நமது அன்றாட வாழ்வில் இதனைக் கண்கூடாகக் காண்கிறோம். அதனால்தான் 'பணம் இல்லாதவன் பிணம்' என்கிறார்கள். பணத்தின் அருமை கருதியே 'பணம் பத்தும் செய்யும்' - 'பணம் பாதாளம் வரை பாயும்' என்றார்கள்.

இன்றைய உலகில் செலவு இல்லாத மனிதரே இல்லை எனலாம். பணம் சேர்ப்பதே செலவு செய்யத்தான். வாழ்வில் பல்வேறு செலவுகள் வரும். இவற்றிற்கெல்லாம் பணம் அவசியமாகின்றது. அன்றாடச் செலவுகளுக்கு அதிக பணம் தேவையில்லாதிருக்கலாம். ஆனால் மருத்துவம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியச் செலவு அதிகமாகவும் ஆகலாம். இது திட்டமிட்ட செலவல்ல. திடீர்ச் செலவு. எனவே இது போன்ற திடீர்ச் செலவுக்கு எப்போதும் பணம் கையில் இருக்க வேண்டும். சேமிப்பு இருந்தால்தான் இது சாத்தியமாகும். திடீர்ச்செலவுகளுக்கு மட்டுமன்றி வீடுகட்டுதல், திருமணம் போன்ற எதிர்காலச் செலவினங்களைச் சமாளிக்கவும் எதிர்கொள்ளவும் சேமிப்பு அவசியமாகின்றது. நாம் சிறுகச் சிறுகச் சேமித்தாற்றான் இது சாத்தியமாகும்.

மலையில் இருந்து ஊற்றெடுத்து வரும் ஆற்று நீரை அணைகட்டித் தேக்காமல் விட்டால் - அவற்றின் போக்கில் விட்டு விட்டால் நீர் மண்ணுக்கும் மரத்துக்கும் பயன்படாமல் வீணாகும். அதுபோலத்தான் பணத்தைச் சேமிக்காமல் வர வரச் செலவிட்டால் அதுவும் பயன்தராது வீணாகி விடும். வெள்ளத்தைத் தடுக்க அணை கட்டியிருந்தால் நீரைத் தேக்கித் தேவைக்கேற்ப அதனைப் பயன்படுத்தலாம். தேவை அறிந்து திறந்து விடலாம். அதேபோல் பணத்தை நாம் சேமித்து வைத்திருந்தால் தேவைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நீரைத் தேக்க - அணை அமைக்கத் திட்டமிடல் அவசியம். அதேபோல் பணம் சேர்க்கத் திட்டமிடல் அவசியமாகிறது. திட்டமிட்டுச் சேர்த்தால் வாழ்வு வளமுறும்.

சேமிப்பின் பயன்கள் எண்ணற்றவை. சேமிப்பு இருக்குமானால் திடீர்ச்செலவுகளை எதிர்கொண்டு தீர்க்க முடியும். பணம் இருந்தால் பயம் இல்லை. வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக நடத்துவதற்குப் பணமே அடிப்படையாக அமைந்துள்ளது. சிறுகச் சிறுகப் பணத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலமே வாழ்க்கையில் எதிர்கொள்ளும் செலவினங்களைச் சமாளிக்க முடியும். சேமிப்பதற்கு இன்று பல வழிகள் உள்ளன. வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பிதற்கு வழியுண்டு. பாடசாலைகளிற் கூட வங்கி நிறுவனங்கள் மாணவர்கள் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிக்கின்றன. வங்கியில் நிலையான வைப்பு நிதியாகப் பெரும் பணம் போட்டுச் சேமிப்பைச் செம்மைப்படுத்தலாம்.

நாம் நாளாந்த செலவுகளைக் குறைக்க வேண்டும். இதன் மூலம் பணத்தைச் சேமிக்கப் பழக வேண்டும். மனமுண்டானால் இடமுண்டு. செலவு செய்யுமுன் சிந்திக்க வேண்டும். சிந்தித்துச் செலவு செய்வோமாயின் செலவினைச் சுருக்கிக் கொள்ள முடியும். சிறுகச் சிறுகச் சேர்க்கும் தேனீக்களைப் போல நாமும் சிறுகச் சிறுகப் பணத்தைச் சேமிக்கப்பழக வேண்டும். இதனால் நமது வாழ்வு வளம்பெறும். சிறிய எறும்புகளைப் பாருங்கள். அவை மழைக்காலத் தேவைக்கான உணவு வகைகளை வெயிற் காலத்திலேயே சேகரித்து விடுகின்றன. அவையும் நமக்குப் பாடம் கற்பிக்கின்றன. எதிர்காலச் சிந்தனையோடு வாழ்ந்தாலே நாம் முன்னேற முடியும் என்ற உண்மையை நமக்குப் புகட்டுகின்றன. சிறுதுளி பெரு வெள்ளம் என்ற சிந்தனையோடு எல்லோரும் சேமிக்க முற்பட்டால் நாமும் நாடும் நலம் பெறுவது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. நாவலரின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி.
3. சமய, தமிழ், கல்விப் பணிகள்.
4. சமூகத்தொண்டு.
5. முடிவுரை.

'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழ் எங்கே? சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை' - எனத் தமிழ் வளர்த்த தாமோதரம் பிள்ளையினால் போற்றப்பட்ட பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அவர் சிறந்த தமிழ் அறிஞர்; சமயத் தொண்டர்; கல்விப் பயிர் வளர்த்த கரும வீரர், தமிழ் வசனநடை கைவந்த வல்லாளர். தமிழும் சைவமும் தழைத்தோங்கத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர்.

நாவலரவர்கள் 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி நல்லூரிற் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமி. பெற்றோர் இவருக்கு ஆறுமுகம் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

ஆறுமுகம் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். இருபாலைச் சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றார். வசனநடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப்பட்டார். சைவச் சிறுவர்கள் சைவச் சூழலில் சைவமும் தமிழும் கற்க வேண்டுமென விரும்பினார். கிறித்தவ சமயப் பிரசாரங்களை எதிர்த்துப் போராடினார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இதனைத் தொடர்ந்து ஊர்தோறும் சைவப்பாடசாலைகள் தோன்றுதற்கு வழிகாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ ஆலயங்களில் சைவப் பிரசங்கம் செய்யும் முறையை ஆரம்பித்து வைத்தார். பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க வழி செய்தார். தமிழ், சமய நூல்கள் பலவற்றைத் தாமே எழுதி வெளியிட்டார். நாவலர் எழுதிய சைவவினா விடைகள், பாலபாடங்கள், பெரிய புராண வசனம் போன்றவை சைவமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

பழந்தமிழ் இலக்கிய, இலக்கண, சமயநூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். இதன் பொருட்டு வித்தியானுபாலன யந்திரசாலை என்ற பெயரில் யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் இரு அச்சுக் கூடங்களை அமைத்தார். தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி மாணவர்கள் சமயச் சூழலில் கல்விபெற வழிகாட்டினார்.

நாவலர் வாழ்ந்த காலத்தில் செய்யுள் நடையே பெரிதும் பேணப்பட்டு வந்தது. இதனால் சமய, தமிழிலக்கிய, இலக்கணநூல்களைச் சாதாரணமக்கள் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. சைவ சமய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்குச் சமய இலக்கிய நூல்களை எளிய வசன நடையில் எழுதுவதன் மூலமே அவை சாதாரண மக்களைச் சென்றடைய முடியுமென நாவலர் கருதினார். இதன் பொருட்டுக் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், முதலியவற்றை வசனநடையில் எழுதி வெளியிட்டார். இதன் மூலம் 'வசனநடை கைவந்த வல்லாளர் எனவும், 'உரைநடையின் தந்தை' எனவும் போற்றப்பட்டார்.

சமயத் தொண்டுகளில் மட்டுமன்றிச் சமூகத் தொண்டுகளிலும் நாவலர் ஈடுபடத் தவறவில்லை. மக்களுக்குத் துன்பம் துயரம் ஏற்பட்டபோதெல்லாம் அவர்தம் துயர் துடைக்க நாவலர் முன்னின்று உழைத்தார். யாழ்ப்பாணத்தில் பஞ்சம் நிலவியபோது கஞ்சித் தொட்டிகளை நிறுவி உணவளித்தார். இதனைக் கஞ்சித் தொட்டித் தர்மம் என அழைத்தனர். இவரது சமய, தமிழ்ப் பணிகளைப் பெரிதும் பாராட்டிய திருவாவடுதுறை ஆதினம் நாவலர் என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தது. ஆறுமுகம் ஆறுமுகநாவலர் ஆனார்.

ஈழத்திலும் தமிழகத்திலும் நாவலர் என்றதும் ஆறுமுகநாவலரது பெயரே மக்கள் நினைவில் வரும். அத்தகுபெருமைக்குரிய நாவலர் தமிழும் சைவமும் தழைத்தோங்கத் தம் வாழ்வையே அர்ப்பணித்தார். பிரமச்சாரியாக இறுதிவரை வாழ்ந்தார். 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி இவர் இறைவனடி சேர்ந்தார். நாவலரை இலங்கை அரசு தேசிய வீரர்களில் ஒருவராகப் பிரகடனம் செய்துள்ளது. அவரது நினைவாக முத்திரை ஒன்றையும் வெளியிட்டுக் கௌரவித்தது.

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? என்று கூறும் அளவுக்கு அவர் புகழ் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது. நாவலர் நாமம் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தனைக் கட்டுரை*

# 28

# பெற்றோரைப் பேணுவோம்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. பெற்றோரின் சிறப்பு.
3. நம்மை அருமையாக வளர்த்தமை.
4. கண்கண்ட கடவுள்கள்.
5. பிள்ளைகளின் கடமைகள்.
6. பெற்றோரைப் பேணுவோம்.
7. முடிவுரை.

நமக்கு என்றும் இனியவர்கள் தாய் தந்தையரே. இவர்களை விடச் சிறந்தவர் எவரும் இவ்வுலகில் எமக்கில்லை. ஆசிரியரும் தெய்வமும் அரசனும் அவர்களுக்குப் பின்னவராவர். இதன் மூலம் பெற்றோரின் பெருமை நன்கு புலப்படுகிறது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'தாயிற் சிறந்தொரு கோவிலும் இல்லை', 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் முதுமொழிகள் பெற்றோர் தம் சிறப்பினைப் பேசுகின்றன. நம் பெற்றோர்கள் நமக்குச் செய்த உதவியும் அவர்கள் காட்டும் அன்பும் அளவிடற்கரியன. அவற்றைச் சொல்லில் வடித்தலும் அரிது.

நம்மைப் பெற்று வளர்த்திட நம் பெற்றோர் பட்ட துன்பங்கள், பலப்பல. இறைவனை வேண்டி விரதமிருந்தனர். ஈ, எறும்பு தீண்டாமல் பேணிவளர்த்தனர். வேளையறிந்து உணவளித்துக் காத்தனர். நமக்கு நோய் ஏற்பட்டால் அவர்கள் அடைந்த கவலையும் துன்பமும் அளவிடத்தக்கனவல்ல. நமது தாய் பத்தியம் காத்து நமது நோயைப் போக்கிடப்பட்ட கஷ்டங்கள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பருவமானதும் நம்மைப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். நமக்கு வேண்டிய சகல உபகரணங்களையும் உடைகளையும் வாங்கித் தந்தனர். நாம் நல்ல கல்வி கற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழவேண்டுமென விருப்பம் கொண்டு செயற்பட்டனர். தங்கள் பசி, பிணி, துன்பம் அனைத்தையும் மறந்து நம்மைக் கண்ணை இமை காப்பது போற் காத்து வளர்த்தனர். அவர்களது அன்பும் தியாக சிந்தையும் என்றும் நம்மால் மறக்க முடியாதவையாகும்.

வாழ்நாள் முழுவதும் நமது நலனுக்காகப் பாடுபட்ட பெற்றோர்களை நாம் என்றும் நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். நமது பெற்றோர்களே நமது கண்கண்ட கடவுளராவர். அவர்கள் சொல்வனவற்றை நாம் கேட்டு நடத்தல் வேண்டும். 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்ற பொன் மொழிப்படி பெற்றோரின் குறிப்பறிந்து நாம் செயற்பட வேண்டும். நமது பணிவையும் அன்பையும் கண்டு அவர்கள் மனம் மகிழும்படி நாம் நடக்க வேண்டும். பிள்ளைகளே பெருஞ் செல்வமெனக் கருதி எம்மை வளர்த்த பெற்றோரை எந்நாளும் நாம் பேணிக் காத்தல் வேண்டும். குறிப்பாக முதுமையடைந்த வேளையில் பெற்றோரின் தேவையறிந்து அவர்களுக்கு வேண்டியவற்றை உதவிடவேண்டும். பெற்றோர் உடலும் உள்ளமும் நோவாமல் காத்திட வேண்டும்.

இன்று நம்மத்தியில் பெற்றோரைப் பேணிக் காப்பதில் பிள்ளைகள் அதிக நாட்டம் கொள்வதாயில்லை எனக் கூறப்படுகிறது. புலப்பெயர்வும் இதற்கு ஒரு காரணமெனக் கருதப்படுகிறது. சிலர் தம் முதிய பெற்றோரைத் தனியாக வாழவிட்டுத் தம் மனைவி மக்களோடு தனித்து வாழ்கின்றனர். பிள்ளைகளை அருகில் வைத்திருக்கப் பெறாத பெற்றோர் பிறர் கையை எதிர்பார்த்து வாழ நேரிடுகிறது; இதனால் மனவாட்டம் உறுகின்றனர். சில இளைஞர்கள் பெற்றோரின் அறிவுரைகளைக் கருத்திற் கொள்ளாது அவர்களை மனம் நோகும்வகையில் கண்டிக்கவும் முற்படுகின்றனர். பாடுபட்டு வளர்த்த பெற்றோர்களது அன்பையும் அருமையையும் நன்றியையும் மறந்து இவ்விதம் நடந்து கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளைகள் தமது கடமைகள் எவையென்பதை நன்கு உணர வேண்டும். தாய் தந்தையரைத் தவிக்க விட்டுவிட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பிள்ளைகள் புண்ணிய தலங்களுக்குச் சென்று தான தருமங்களைச் செய்ய விரும்புகின்றனர். இது மிகவும் கவலைக்குரியதாகும். தாய் தந்தையரினும் மேலான தெய்வம் இல்லை என்பதை இவர்கள் உணரவேண்டும். 'தாய் தெருவில் பிச்சைக்கு அலைய மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானாம்' என நமது நாட்டுப்புறங்களில் கூறுவதுபோன்ற செயல்கள் இடம் பெறக்கூடாது. பெற்றோரைத் தெய்வமாகக் கருதிச் செயற்படுவதே பிள்ளைகளின் கடமையாகும்.

தாய் தந்தையரைப் போற்றி நடந்த பெரியோர் பலருடைய வரலாறுகளைப் படித்திருக்கிறோம். தந்தை சொற்படி காடேகிய இராமனும், தன் தந்தையின் கருத்திற்கு இயையத் தன் இன்ப வாழ்வையே துறந்த பீஷ்மனும் இதற்குச் சிறந்த சான்றுகளாவர். உலகம் போற்றும் மகாத்மா காந்தியடிகள் கூடத் தன் வாழ்வில் இறுதி வரை தாயின் சொல்லை மறவாது வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றமையை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். நமது அறநூல்கள் எல்லாம் தாய் தந்தையரை மதித்துப் பேணிக் காத்திட வேண்டும் என்றே வலியுறுத்துகின்றன.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு' - என்ற வள்ளுவர் வாக்கு இதனையே தெளிவுபடுத்துகிறது.

சுருங்கக் கூறின் பெற்றோரைப் பேணிக் காக்கும் கடமை பிள்ளைகளுக்கு உண்டு. தாய் தந்தையர் செய்த தியாகங்களை, நன்றிகளை மறப்போர் ஒருபோதும் உய்திபெற முடியாது. பெற்றோரைப் பேணி அவர்கள் மனம் நோகாது மகிழ்வுடன் வாழ்தற்கு உதவுதலே பிள்ளைகளின் பெருங் கடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைக் கதை

# 29

## பொன் செய்யும் மருந்து

குறிப்புக்கள்.

1. ஆரம்பம்.
2. நாதனின் சிந்தனை.
3. வயலோரத்தில் கண்ட காட்சி
4. உழவன் உரைத்த உண்மை.
5. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
6. முடிவுரை.

நல்லூரில் நாதன் என்னும் செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவன் பெருமளவு செல்வத்தில் திளைத்திருந்தான். ஆனால் அவன் அச் செல்வத்தைக் கொண்டு திருப்தியுடன் வாழ்ந்தான் இல்லை. பேராசை கொண்ட அவன் மேலும் மேலும் செல்வம் சேர்த்திட விரும்பினான். இரவு பகலாக இதே சிந்தனையில் இருந்தான். நிம்மதியின்றித் தவித்தான். எனினும் அவன் சோம்பியிருக்கவில்லை. வாணிபம் செய்யும் பொருட்டு வளமுள்ள இடங்களைத் தேடி அலைந்தான்.

ஒரு நாள் வயல் சூழ்ந்த கிராமம் ஒன்றிற்குச் சென்றான். செல்லும் வழியில் வயலோரத்தில் ஓர் உழவனைக் கண்டான். அந்த உழவனோ 'பெற்றதே போதும்' என்ற நிறை உள்ளம் படைத்தவன். அவன் நிலத்தைப் பண்படுத்தி உழுது அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழும் பண்புள்ளவன். உழவன் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் வேளையில் நாட்டுப்புறப் பாடல்களை அழகுறப் பாடுவான். அன்றும் வயலோரத்தில் இருந்து நாட்டுப்பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தான். உழவன் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் கண்ட நாதன் சிறிது நேரம் நின்று அவதானித்தான். இவ்வுழவனைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பெருமளவு செல்வம் இருந்தபோதிலும் இவனுக்குள்ள மகிழ்ச்சியில் சிறிதளவு கூட எனக்கு இல்லையே. இதற்குக் காரணம் என்ன? என்று எண்ணினான். மனம் குழம்பினான். அவ்வுழவனை நெருங்கி அன்புடன் உரையாடத் தொடங்கினான்.

'நீ எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாய். நெற்றி வியர்வை நிலத்திற் சிந்தப் பாடுபடுகிறாய். இது பற்றிச் சிறிது கூடக் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் விளங்குகிறாய். இதற்குக் காரணம் என்னவோ?' என வினவினான்.

செல்வந்தனின் கேள்வி உழவனுக்கு வியப்பை அளித்தது. எனினும் அவன் கவலைப்படாமல் பதில் சொன்னான். 'ஐயா! இந்த நிலம் எனக்குச் சொந்தமானதல்ல. கூலிக்குத் தான் உழுகிறேன். எனக்கு இருநூறு ரூபாய் தான் கிடைக்கிறது. அதைக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறேன்; தர்மமும் செய்கிறேன். ஓரளவு சேமித்தும் வைத்திருக்கிறேன். சேமித்து வைப்பது என் மகனுக்கு கல்வி புகட்டுவதற்காகவே. நாள்தோறும் எனக்கு இந்த அளவு ஊதியம் கிடைத்தாலே போதும். நான் குபேரன் ஆக வேண்டியதில்லை. கடன் எதுவும் படாது நிம்மதியாக வாழ்ந்தாலே போதும். நிம்மதியான வாழ்வும் போதும் என்ற மனமுமே எனக்குப் பெருஞ் செல்வம்' என்றான்.

உழவனின் உரையைக் கேட்டதும் செல்வன் யோசித்தான். உள்ளதே போதும் என்ற மனநிறைவு உண்டாகும் வரையில் தனக்கு மகிழ்ச்சி என்பது சிறிதளவும் உண்டாகாது என்பதை உணர்ந்தான். இந்த உழவனுக்கு உள்ள அறிவு கூட எனக்கு இல்லையே என்று மனம் நொந்தான். இதுவரை தேடிய செல்வமே எனக்குப் போதும். இனியாவது மனநிறைவுடன் வாழ்வேன் என்று தனக்குள் கூறிக்கொண்டான். பெருஞ் செல்வம் தேடி அலைவதை விட்டு விட்டு நிம்மதியாக உள்ளதைக் கொண்டு வாழ்வதே சிறந்த வழியெனத் தீர்மானித்தான். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் ஆன்றோர் வாக்கின் அருமையை உணர்ந்தான். மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான். அன்று முதல் அவன் நிம்மதியாக வாழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் கட்டுரை

# 30

# சேவையின் சின்னம் அன்னை தெரேசா

குறிப்புக்கள்

1. ஆரம்பம்.
2. இந்திய வருகை.
3. கொல்கத்தாவில் கண்டவை.
4. அன்பின் தூதுவர்கள் இயக்கம்.
5. தொழுநோயாளர் துயர் துடைத்தார்.
6. சேவையின் சின்னமானார்.
7. 'பாரத ரத்னா'வானார்.
8. முடிவுரை.

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் வடிவம், கர்த்தரின் அருட்கொடை என்றெல்லாம் போற்றப்படும் பெருமை மிக்கவர் அன்னை தெரேசா. ஐரோப்பாக் கண்டத்தில் அல்பேனியாவில் விவசாயக் குடும்பம் ஒன்றில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் (27.08.1910) பிறந்தார் அன்னை தெரேசா. அவ்வூர் அரசினர் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். குழந்தைகள், பெரியோர்கள், நோயாளிகள் போன்ற பலரோடும் இளமையிலேயே அன்பாகவும் மரியாதையாகவும் பழகி வந்தார்.

கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த பற்றும் உறுதியும் கொண்டவர் தெரேசா. இயேசு பெருமானைப் போன்று மக்களுக்குத் தாமும் தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பினார். மக்கள் சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்தார்.

1925 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து அல்லல் படும் மக்களுக்குத் தொண்டாற்ற விரும்பினார். கிறிஸ்தவ மத பொதுநலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை என்னும் அமைப்பில் தன் இளமைப்பருவத்திலேயே அவர் சேர்ந்திருந்தார். இதனால் இந்தியா வந்து தொண்டாற்றுவதற்கு அனுமதி தருமாறு அங்குள்ள தலைமைப் பாதிரியாரைக் கேட்டுக் கொண்டார். ஆனால் இவரது இளவயதைக் காரணம் காட்டி அனுமதி வழங்கப் பாதிரியார் மறுத்து விட்டார்.

1928 ஆம் ஆண்டில் இவர் லோரேட்டா கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பின்னர் இந்தியாவிற்கு வந்து டார்ஜிலிங்கில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சியின் பின் கொல்கத்தாவிற்கு வந்து அங்குள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார்.

கொல்கத்தா வீதிகளில் அம்மையார் கண்ட காட்சிகள் அவரது உள்ளத்தைப் பெரிதும் நெகிழச் செய்தன. பசிக்கொடுமையினாலும் நோயாலும் மக்கள் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தினார். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உணவு அளிப்பதோடு ஏழைக்குழந்தைகள் கல்வி பெற வழிசெய்ய வேண்டுமென அவரது கருணையுள்ளம் விரும்பியது. ஆனால் கன்னிகா மடத்து விதிகள் அவற்றினை மேற்கொள்ள இடம் அளிக்கவில்லை. இது குறித்து ரோமாபுரியில் உள்ள தலைமை மதகுருவிற்கு பலமுறை எழுதினார். அவரது விடாமுயற்சி பலனளித்தது. 1948ஆம் ஆண்டு ரோமாபுரியிலிருந்து அனுமதி கிடைத்ததும் அன்னை மிக்க மகிழ்ச்சி கொண்டார். கன்னியர் மடத்து உடைகளைக் களைந்து விட்டு வங்காளப் பெண்கள் போல உடையணிந்து கொண்டார். சாதாரண சேலையினையே தெரிந்து எடுத்துக் கொண்டார். நீலக்கரையுடன் கூடிய வெள்ளைப் புடைவையை உடுத்தி வெள்ளை முழுக்கைச் சட்டையைப் போட்டுக் கொண்டார். இடது தோளில் உலோகத்தினாலான சிலுவைச் சின்னம் தொங்க, காலுக்குச் சாதாரண செருப்பு அணிந்து கொண்டார்.

சேரியின் மத்தியிலே ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். சேரியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டார். சேரி வாழ் மக்கள் அன்னையுடன் அன்புடனும், மரியாதையுடனும் பழகினர். அவரது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.சேரியில் உள்ள சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட முற்பட்டார். பள்ளிக்கூடம் ஒன்றை அங்கு ஆரம்பித்துப் பாடம் சொல்லிக் கொடுத்தார். சிறுவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து உதவினார்.

1950 ஆம் ஆண்டு 'அன்பின் தூதுவர்கள்' என்று பொருள்படும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இவ்வியக்கம் மக்கள் ஆதரவுடன் வளரத் தொடங்கியது. சாதி, மத வேறுபாடு எதுவுமின்றி இவ்வியக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். பாடசாலைகள் அமைத்தல், மருத்துவ வசதி இல்லாத இடங்களில் மருத்துவ மனைகள் அமைத்தல், குழந்தைகள் காப்பகங்கள், அநாதை இல்லங்கள் அமைத்தல் ஆதியாம் பணிகளை இவ்வியக்கம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது.

அநாதைக் குழந்தைகளை ஆதரித்து வளர்க்கும் பொருட்டு 'நிர்மல் கென்னடி இல்லம்' என்ற இல்லத்தை நிறுவினார். தொழுநோயாளிகளுக் காகத் தொழுநோயாளர் இல்லத்தைத் தொடக்கினார். சாவின் விளிம்பில் தவிக்கும் அநாதைகளுக்கு உதவும் பொருட்டுத் தருமசாலையை ஏற்படுத்தினார். இந்த இல்லங்களை நடத்துவதற்காக அன்னை தாமே வீதிகளில் இறங்கி நிதி திரட்டினார். அவரது வாழ்வில் நிகழ்ந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் பலவுள.

40 ஆண்டுகளின் முன் ஒரு நாள்! கொல்கத்தாவின் அழுக்குத் தெருக்களில் ஒன்றின் ஓரத்தில் அன்னை நின்று கொண்டிருந்தார். அவர் தொடங்கிய நிறுவனத்திற்கு நன்கொடைக்காகக் கையேந்தி நிற்கிறார். கொல்கத்தாவின் பெண் துப்புரவுத் தொழிலாளர்களது சீருடையில் நிற்கும் அன்னையை அருவருப்போடு பார்க்கிறான் நகை வியாபாரி ஒருவன். 'ஐயா! அநாதைக் குழந்தைகளுக்கு ஏதாவது கொடுத்து உதவுங்கள்' ஏந்திய கரங்கள் அவன் முன்பு நீள்கின்றன. தம்முன் நீண்ட உள்ளங்கைகளில் காறி உமிழ்கிறான் அவன். அன்னையின் முகத்தில் புன்னகை மாறவேயில்லை. 'ஐயா! இப்போது நீங்கள் கொடுத்ததை நான் எடுத்துக் கொள்கிறேன். ஆனால் குழந்தைகளுக்கு ஏதாவது நிதி உதவி செய்யுங்கள்' என்கிறார் அன்னை. அதிர்ச்சியில் அவன் தலைகுனிந்து கொள்கிறான்.

இதற்கு நேர்மாறான மற்றோர் காட்சி அன்னையின் வாழ்வில் 1960இல் நிகழ்ந்தது. அப்போது அமெரிக்க நாட்டின் செனட்டர்களில் ஒருவரான றொபேட் கென்னடி அன்னையைக் காண அவரது ஆச்சிரமத்திற்கு வந்தார். அந்தநேரத்தில் அன்னை தொழுநோயாளர் பிரிவில் துணி துவைத்துக் கொண்டிருந்தார். அன்னை வருவதற்குக் காத்திராமலே நேரே அவர் பணி செய்து கொண்டிருக்கும் இடத்திற்கே செல்கிறார். துணி துவைத்துக் கொண்டிருந்த அன்னையிடம் கைகுலுக்கும் பொருட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை நீட்டுகிறார் கென்னடி. பதிலுக்குத் தன் கைகளை நீட்டாமல் ‘என் கைகள் அழுக்காக இருக்கின்றன’ என்கிறார் அன்னை. ‘அன்னையே! சேவையால் அழுக்கடைந்துள்ள இந்தக் கரங்களைத் தொட விரும்புகிறேன். அதை எனது பேறாகக் கருதுகிறேன்’ என்றார் கென்னடி.

அன்னையின் புகழ் உலகெல்லாம் பரவிய நிலையிலும் அவர் நிலை மாறவேயில்லை. வறுமையை விரும்பி வரித்த அன்னையாகவே அவர் விளங்கினார். தன் ஆடை கிழிந்தால் தானே அதைத் தைத்து உடுத்தார். மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கருதினார். ‘சேவைக்கு இறைவன் என்னைப் பணித்துள்ளான். அவன் தன் காரியங்களை என் மூலம் நடத்திக் கொள்கிறான்’ என்று அன்னை அடிக்கடி கூறிக் கொள்வார்.

அன்னையின் அரும்பணிகளை உலகம் போற்றிய வேளையில் அவரை நாடிப் பல பரிசுகள் தேடி வந்தன. பாப்பரசர் விலையுயர்ந்த கார் ஒன்றைப் பரிசாக வழங்கினார். இம்பீரியல் இரசாயனத் தொழில் நிறுவனம் இவருக்கு 13 இலட்சம் பெறுமதியான சொத்தைக் கொடுத்து உதவியது.

1977 ஆம் ஆண்டில் அன்னைக்கு நோபல் பரிசு கிடைத்தது. 1979ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் டாலர் பெறுமதியான ‘பாலசான் சர்வதேச விருது’ வழங்கப்பட்டது. அன்னையின் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் இந்திய அரசு ‘பாரத ரத்னா’ என்னும் அதியுயர் விருதினை வழங்கியது. தபால் தலைகளையும் வெளியிட்டுக் கௌரவித்தது.

அனைத்து உயிர்களிடத்தும் அன்பையும், நம்பிக்கையையும் துளிர்க்கச் செய்த அன்னை தெரேசா தமது 87 ஆம் வயதில் 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி காலமானார். கருணை பொழியும் அத்திருவடிவம் மறைந்து விட்டது. அன்னாரின் திருநாமம் அனைத்துலகிலும் என்றும் நின்று நிலவும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

# என் கதை கேளீர்!

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. எனது தோற்றம்.
3. எனக்கேற்பட்ட அதிர்ச்சி.
4. எனது பயன்கள்.
5. எனக்கேற்பட்ட கொடுமைகள்.
6. எனது எதிர்பார்ப்பு.
7. முடிவுரை.

என் பெயர் மாமரம். என்னை இவ்வூரில் அறியாதார் இல்லை. என்னைப் போன்ற பெரு விருட்சத்தை நீங்கள் எங்கும் கண்டிருக்கமாட்டீர்கள். எனது ஆரம்ப காலத்திலே, நான் சிறு விதையாக இங்கு நடப்பட்டேன். நல்லூரின் நிலமகளின் கருணையுடனும் என்னைச் சுற்றியிருந்த நல் உள்ளம் படைத்தோரின் உதவியுடனும் நான் இன்று பெரு விருட்சமாக வளர்ந்துள்ளேன். வானமகளும் குறைவின்றி என் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் பொருட்டு மழை பொழிந்தாள். என் சுற்றத்தாரும் எனக்கு உரமிட்டு என்னை வலுப்படுத்தினர். இவ்வாறாகப் பல்வேறுபட்ட கருணை உள்ளங்களின் ஆசியுடன் மாங்கன்றாக இருந்த நான் மாமரமாக பெயர் மாற்றம் பெற்றேன்.

அன்றொருநாள்! எனக்கு இன்ப அதிர்ச்சி தரக்கூடியதாக என்னில் சில பூக்கள் பூத்திருந்தன. நான் தாயாகப் போவதை உணர்ந்து அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சில நாட்களில் என் முதல் குழந்தையை நான் ஈன்றேன். அன்று என்னை விட உலகில் பூரிப்பில் களித்திருப்பவர் எவரும் இருக்க முடியாது. என் தாய்மை நிலை கண்டு மகிழ்ந்தவர்களையும், எண்ணிக்கையில் விபரிக்க முடியாது. இவ்வாறாக நான் பல குழந்தைகளுக்குத் தாயானேன்.

என் குழந்தைகளின் அழகிய மஞ்சள் நிறத் தோற்றம் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அண்ணாந்து பார்க்காதோர் எவருமில்லை என்று தான் கூற வேண்டும். என் குழந்தைகள் பார்ப்பதற்கு இனிமையாக இருந்ததால், பலரும் பறித்துச் சுவைக்கத் தொடங்கினர். என் வளர்ச்சியில் பங்கு பற்றிய அனைவருக்குமாக நான் என் வம்சத்தைப் பல்கிப் பெருக்கினேன். இதுமட்டுமா? என் கிளைகள் நாற்புறமும் பரவி நீண்டு வளர்ந்ததினால் மாமரம் 'நிழல் தரும் விருட்சம்' எனவும் பெயர்பெற்றேன். கோடை கால வெயிலில் என்னிடத்தே சரண் புகுந்தோர் பலர். வழி தவறி வருவோரும், என்னிடத்தே இளைப்பாறிச் சென்றனர். ஊர்க்கதை கதைப்போருக்கும் குறைவில்லை. மொத்தத்தில் நான் நல்லூரின் வரவேற்பாளன் ஆனேன்.

நான் நன்றாக வாழ்ந்த காலத்தில் என் அங்கங்கள் எல்லாமே பலன் தருவனவாய் அமைந்தன. மாவிலை என்ற பெயரில் விழாக்காலங் களில் என் இலைகள் வீடுகளில் அலங்கரிக்கப்பட்டன. மாவிலைத் தோரணமிட்டு மகிழ்ந்தனர் மக்கள். எனது கனிகள் மாம்பழம் எனும் பெயரில் பலரது விருந்துக்குச் சுவையாயின. களைப்பாற்றும் நிழலாக இருந்தேன். இன்னும் பல சேவைகள் செய்த பெருமையோடு நான் இருந்த வேளையில் நிகழ்ந்தவற்றை எண்ணவே என் மனம் நடுங்குகிறது.

காலதேவனின் கண்களில் சிக்கினேன். அவன் கொடூரப் பிடியில் விதியின் விளையாட்டு என்னையும் அழைத்தது. கொடூர யுத்தம் ஆரம்பமானது. அதுவரை இருந்து வந்த நல்லூரின் அமைதி வாழ்க்கை அழியத் தொடங்கியது. இராணுவத்தினர் என்னைச் சுற்றி முகாமிட்டனர். மக்கள் தம் உயிர்களைக் காக்க ஊரை விட்டே நகர்ந்தனர். என் இதயத்தின் பாசப் பிணைப்புக்கள் என்னை விட்டு எங்கோ செல்கின்றனர். அன்றுதான் நான் முதல் முதலாக அழுதேன். எறிகணைகள் என் உடலின் பல்வேறு பாகங்களையும் பதம் பார்த்தன. என் கண்களை இறுக மூடிக் கொண்டேன். வெடிச் சத்தங்கள் ஓய்ந்து அமைதியான பின் நான் பார்த்த காட்சிகள் அந்தோ! பரிதாபம். என் தோழர்களில் சிலர் கொடூர யுத்தத்திற்குப் பலியாகி இருந்தனர். எனது ஊரில் ஒருவரையுங் காணேன். நான் தனிமை நிலை அடைந்தேன். நிழல் தரும் பெருவிருட்சமாக இருந்த நான் இன்று அங்கவீனனாகப் பல கிளைகளையும் இழந்து நிற்கிறேன். ஆனாலும் என் மனதின் பலம் குறையவில்லை. நான் கால ஓட்டத்தில் மீண்டும் தளைத்து வருவேன். நல்லூரின் வரவேற்பாளன் என்ற பெயரைப் பெறுவேன். என் மக்களை வரவேற்பேன் என்ற நம்பிக்கையில் உயிரோடிருக்கிறேன். இறைவா! என்னை வேரோடு சாய்த்து விடாது இன்றுவரை வாழ வழிவகுத்த உனக்கு என் நன்றிகள். இதுவரை என்கதையினைக் கேட்ட உங்களுக்கும் என் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விமர்சனக் கட்டுரை*

# 32

# நயம் மிகு நாட்டார் பாடல்கள்

குறிப்புக்கள்

1. முன்னுரை.
2. உணர்ச்சிமிகு கலைப்படைப்புக்கள்.
3. நாட்டார் பாடல்களின் வகைகள்.
4. நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள்.
5. முடிவுரை.

பாமர மக்களின் உள்ளத்து உணர்ச்சிப் பெருக்கினில் உருவானவை நாட்டார் பாடல்கள். அவை எளிமையும் இனிமையும் மிக்கன. இவற்றை நாடோடிப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், கிராமியக் கவிதைகள் எனப் பலபெயர் கொண்டு அழைப்பர். கற்று வல்ல கவிஞர்கள் மொழி யாப்பு மரபிற்கமைய உருவாக்கும் கவிதைகளுக்கும் நாட்டார் பாடல்களுக்கும் வேறுபாடு உண்டு. நாட்டார் பாடல்கள் எழுதாக்கிளவிகள். இவை மக்கள் அவ்வப்போது தம் உள்ளத்து எழும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பாடப்படுவன ஆகும். பரம்பரை பரம்பரை வழியாக வாய்மொழியாகக் கேட்கப்பட்டு மக்கள் மனதில் நிலைபெறுவனவாகும். நாட்டு மக்கள் தம் உள்ளத்திலிருந்து வருபவை ஆதலின் இவற்றை நாட்டார் பாடல்கள் என அழைக்கிறோம்.

'உணர்ச்சிப் பெருக்கே ஒரு பாட்டுக்கு நிலைக்களன்' என்றார் அறிஞர் ஒருவர். உள்ளத்து உதிப்பனவற்றை எவ்வித கட்டுப்பாடுமின்றி உள்ளதை உள்ளவாறே கூறும் உண்மைத் தன்மையானது ஏட்டிலக்கியத்திலும் பார்க்க வாய்மொழி இலக்கியத்திலேயே பெரிதும் காணப்படுகிறது. எனவேதான் நாட்டுப் பாடல்களை உணர்ச்சி மிகு கலைப்படைப்புக்கள் என்கிறோம். நாட்டார் பாடல்கள் குறித்து ஆய்வுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டார் இயல் என்ற பரந்து பட்ட பிரிவின் ஒரு பகுதியாகவே நாட்டார் பாடல்கள் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் பாடல்கள் பலவகைப்படும். அவை பாடப்படும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல வகையினதாகப் பிரிக்கப்படுகின்றன. குழந்தை பிறந்த நாட் தொட்டு அவன் மனிதனாகி மரணமாகும் வரை நிகழ்வன யாவும் சுவை தரும் சம்பவங்களாக நாட்டார் பாடல்களில் இடம்பெறுகின்றன. அழுது அடம் பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைந்திருக்கிறது. விழித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு வேடிக்கை காட்டும் தாய், குழந்தை விழிகளை மூடித் துயில வேண்டும் என்று எண்ணும்போது பாட்டு இசைக்கின்றாள். இப்பாட்டினையே தாலாட்டு என்கிறோம். மகிழ்ச்சி ததும்பும் விழாக்களின் போது ஆனந்தக் களிப்பில் மகளிர் பாடும் பாடல்கள் மற்றொரு வகையினதாகும். தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கோலாட்டம், ஊஞ்சல் போன்ற பாடல் வகைகள் பெண்களுக்கே உரியனவாகும்.

உழவர், மீனவர், குறி சொல்லும் குறத்தியர், வண்டியோட்டுவோர், இடையர் மற்றும் தொழில் புரிவோர் பாடும் பாடல்கள் வேறுவகையினவாகும். ஆலயங்களில் வழிபாடு செய்வோர் பாடும் பாடல்கள் தனிச் சிறப்புக்குரியனவாகும். கரகம், காவடி எடுத்து ஆடுவோரால் பாடப்படும் பாடல்கள் இதற்கு ஏற்ற சான்றாகும். வயல் நிலங்களில் வேலை செய்வோர் - உழவர், உழத்தியர் பாடும் பாடல்கள் வேறு வகையில் அமைவனவாகும். இவற்றில் காதல் சுவை மிக்கிருக்கும். அறுவடை செய்தல், சூடு வைத்தல், சூடு மிதித்தல் போன்ற நிகழ்வுகளின் போது பாடப்படும் பாடல்கள் மற்றொரு வகையினதாகும். வீரர்களின் வீரச்செயல்களை உணர்ச்சி ததும்பக் கூறும் கதைப்பாடல்கள் வேறுவகையினதாகும்.

இவ்வாறு நாட்டார் பாடல்கள் பல்வேறு வகைப்பட்டனவாயினும் அவற்றின் இனிமையான இசையும் தாளக் கட்டும் தனிச்சிறப்பை அளிக்கின்றன. மாணிக்கவாசக சுவாமிகளின் திருக்கோத்தும்பி, திருஅம்மானை, திருப்பொன்னூசல், திருப்பொற்சுண்ணம், திருச்சாழல் போன்றனவும், இளங்கோவடிகளின் ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரியும், பாரதியின் பாஞ்சாலி சபதமும் கூட நாட்டார் இலக்கிய வகை மெட்டுக்களையும் இசைப்பண்பையும் பெரிதும் கொண்டே ஆக்கப்பட்டவையாகும்.

குழந்தையைப் பெற்ற தாய் ஒருத்தி உலகில் மற்றெவரும் பெறாத பெரும் பாக்கியத்தைத் தான் அடைந்து விட்டதாக மகிழ்வு கொள்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உள்ளத்தில் எழும் ஆனந்தத்தை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்து கிறாள். அதுவே தாலாட்டாக உருப்பெறுகிறது. இதோ! தாய் ஒருத்தி தன் குழந்தையைத் தாலாட்டுகிறாள். அவளது வேண்டுதல்கள், உள்ளத்து உணர்வுகள் யாவும் பாட்டாக வெளிப்படுகிறது.

ஆயிரம் காலம்நான்
அரசுக்கு நீர் வார்த்தேன்
தொண்ணூறு காலம் நான்
துளசிக்கு நீர் வார்த்தேன்
எண்ணூறு காலம் நான்
எருக்குக்கு நீர் வார்த்தேன்
என் அரசு கண்வளர - நான்
என்ன தவம் செய்தேனோ?

நல்லை நகர் தனிலே
நல்முருகன் கோயிலிலே
சன்னதிக்குத் திண்ணையிலே
சுவாமி இரண்டு கையாலே
சுவாமி இரண்டு கையாலே - எனக்குத்
தந்த திரவியமோ?

இவ்வாறு பெறலரும் பேறாகக் கிடைத்த தன் மகவைத் தாலாட்டும் தாயானவள் அவன் அழகைப் பார்த்துப் பார்த்து வியக்கிறாள்.

தேனோ திரவியமோ
தெவிட்டாத தெள்ளமுதோ?
கோடைப் பலாச்சுளையோ?
கொஞ்ச வந்த ரஞ்சிதமோ?

செம்பொன்னோ எப்பொருளோ
தெவிட்டாத தெள்ளமுதோ
பசும்பொன்னோ பாலகரோ?
பஞ்சவர்கள் பாற்குடமோ?

பாலகனின் அழகில் மனதைப் பறிகொடுக்கும் தாயின் உணர்ச்சிப் பெருக்கே இங்கு பாடலாக மலர்வதைக் காண்கிறோம். குழந்தை வளர்ந்து சிறுவனாகின்றான். அவன் விளையாட விரும்புகின்றான். ஓடிக் குதித்து ஆடுகின்றான். கிட்டியடித்து, கிளிக்கோடு மறித்து விளையாடுகிறான். இவற்றுக்கெல்லாம் ஏற்ற பாடல்களை அவனே ஆக்கிக் கொள்கிறான். கிட்டிப்புள்ளு அடிக்கும் போது பாடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவடியடிக்கக் கவடியடிக்கக்
கைகால் முறியக் கைகால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக்கட்டு ... தேடிக்கட்டு

இப்பாடலைப் படிக்கும் போது கிட்டிப் புள் அடிக்கும் ஓசை நம் காதில் ஒலிப்பதை உணர்கிறோம்.

சிறுவன் வளர்ந்து குமரன் ஆகின்றான். அவனிடத்தே காதல் உணர்வுகள் அரும்புகின்றன. தன் உள்ளத்து ஆசைகளைப் பாடல்களாக வெளிப்படுத்துகிறான். அத்தகைய பாடல்கள் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் உணர்ச்சிப்பெருக்காக அமைகின்றன. உள்ளத்து ஆசைகளை உவமைகள், உருவகங்கள் மூலம் அவன் வெளிப்படுத்தும் போது அவை நம் உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகின்றன.

நாள் முழுதும் உடல் வருந்தப் பாடுபடும் தொழிலாளர்கள், கப்பல் ஓட்டிகள், மீனவர்கள் தம் உடல் அலுப்பைப் போக்கப் பாடும் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தன. 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது...' என்பதற்கமைய அவர்கள் பாடும் பாடல்கள் சுவைமிக்கனவாகத் திகழ்கின்றன. தங்கள் உற்றார், உறவினர்களை இழந்து தவிக்கும் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாடல்கள் கல்மனதையும் கரையச் செய்வன. ஓசை இன்பமும் இசைநயமும் பல்வேறு இலக்கியச் சுவைகளும் கொண்ட நாட்டார் பாடல்கள் நெஞ்சை நெகிழச் செய்கின்றன. இதனாலேயே அமரகவி பாரதியாரும்

ஏற்ற நீர்ப் பாட்டின் இனிமையிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப் பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத் திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

நெஞ்சைப் பறி கொடுத்துப் பாடுவது நாட்டார் பாடல்களின் நயத்தகு பெருமையினைப் பறை சாற்றுவதாக அமைகிறது.

சுருங்கக் கூறின் நாட்டார் பாடல்கள் நாட்டு மக்களது உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடு. அவை படிப்போர் உள்ளங்களைப் பற்றியிழுக்கும் பண்பின. இசையின்பமும் ஓசைநயமும் கொண்டவை. அவை வாய்மொழி இலக்கியமாக என்றும் வாழும் தன்மை மிக்கன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

## கடிதம் எழுதுவோம்.

கடிதம் எழுதுவதும் ஒரு கலையாகக் கருதப்படுகிறது. செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு மக்கள் கடிதம் எழுதும் முறையை நீண்டகாலமாகக் கைக்கொண்டு வருகின்றனர். மேனாட்டு மொழிகளில் கடிதம் எழுதும் கலை நன்கு வளம் பெற்றுள்ளது. ஒருவர் ஒருகாலத்து எழுதிய கடிதங்கள் அவர் மறைந்த பின்னர் - பிற்காலத்தில் பெரிய இலக்கியங்களாகக் கூடப் போற்றப்படுகின்றன. கற்று வல்ல பெரியார்கள், தலைவர்கள் எழுதிய கடிதங்கள் பல நூல்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

ஒரு கடிதமானது செய்தியை மாத்திரம் கூறுவதோடு அமையாது. எழுதியவரின் அறிவுத்திறன், பண்பாடு என்பனவற்றையும் பிரதிபலிப்பதாக அமையும். கடிதங்கள் பல பிரிவுடையன. உறவினர்க்கு எழுதப்படும் கடிதம் உறவாடற் கடிதம் எனப்படும். நண்பர் ஒருவருக்குப் பாராட்டுத் தெரிவித்து எழுதப்படும் கடிதம் நட்புக் கடிதமாகும். நண்பர் ஒருவரைத் தனது பிறந்த நாட் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கும் வகையில் எழுதப்படும் கடிதம் அழைப்புக்கடிதம் எனப்படும். ஒருவன் தன் நண்பனது பிறந்தநாளன்று அவனை வாழ்த்தி எழுதப்படும் கடிதம் வாழ்த்துக் கடிதம் எனப்படும்.

அலுவல் தொடர்பாக ஒரு வர்த்தக நிறுவனம் தனது கிளை நிலையத்திற்கு அனுப்பும் கடிதம் அலுவற் கடிதம் எனப்படும். வணிக விடயமாக எழுதப்படும் கடிதம் வணிகக் கடிதம் என்றழைக்கப்படும். வேலை பெறும் பொருட்டு ஒருவர் விண்ணப்பிக்கும் கடிதம் விண்ணப்பக் கடிதம் எனப்படும். மாணவன் ஒருவன் ஈவு (லீவு) கோரித் தனது பாடசாலை அதிபருக்கு எழுதும் கடிதம் ஈவுக்கடிதம் என்றழைக்கப்படும்.

செய்தித்தாள் ஒன்றுக்குப் பொதுமகன் ஒருவர் எழுதும் கடிதம் செய்தித்தாட் கடிதம் எனப்படும். இவ்வாறு ஒவ்வொரு கடிதமும் எழுதும் விடயத்துடன் தொடர்பு கொண்டதாக அழைக்கப்படும். கடிதம் எழுதுவோர் கடிதம் எழுதும் முறைகளைச் சரியாகப் பின்பற்ற வேண்டும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தியைக் கையாள வேண்டும். கடிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் போது எழுதுபவர் முதலில் கடிதத்தின் மேலே வலது புற ஓரத்தில் தமது முகவரியை (வீட்டு இலக்கம், வீதி, ஊர்) யும் திகதியையும் ஒன்றின் கீழ் ஒன்றாக முறைப்படி எழுதுதல் வேண்டும். பின்னர் யாருக்குக் கடிதம் எழுதுகிறாரோ அவரை விளித்துத் தொடங்க வேண்டும். அதன் கீழே எழுத விரும்பும் செய்தியை எழுதுதல் வேண்டும். கடிதத்தை முடிக்கும் போது யார் யாருக்கு எழுதுகின்றோமோ, அவரவர் உறவு முறைக்கேற்ப எழுதிக் கையொப்பமிடவேண்டும். பெற்றோர்க்கு எழுதும் போது உங்கள் அன்பு மகன் / மகள் என்று எழுதலாம். உடன் பிறந்த மூத்தவர்களுக்கு எழுதும் போது உங்கள் அன்புத்தம்பி / தங்கை என்றெழுதலாம். இளையவர்களுக்கு எழுதும்போது உன் அன்பு அண்ணா/ அக்கா என்று எழுதலாம். இதேபோன்று யார் யாருக்கு எழுதுகின்றோமோ அதற்கேற்ற வகையில் கடிதத்தின் முடிப்பு அமைதல் அவசியமாகும்.

ஒரு கடிதத்தில் பின்வரும் பொதுப் பண்புகள் காணப்படும்.

i) அனுப்புபவரின் முகவரியும் திகதியும்.
ii) விளிப்பு
iii) செய்தி (கடிதத்தின் உடல் - தெரிவிக்கப்படும் செய்தி)
iv) உறவுத்தொடர் மொழி (முடிப்பு)
v) கையெழுத்து (கையொப்பம்)
vi) முகவரி (இது கடித உறையின் அல்லது மடித்த கடிதத்தின் பின்பக்கத்தில் எழுதப்படுவது)

உதாரணம்:

அஞ்சல்
தலை

திரு. க. நாகலிங்கம் அவர்கள்
ஆசிரியர்
248, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1) உறவுக்கடிதம்

(கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் மாணவன் தன் பெற்றோருக்கு எழுதுவது)

விபுலாநந்தர் விடுதி,
வைத்தீஸ்வராக் கல்லூரி,
மகிழூர்.
28-09-2003

என் அருமைப் பெற்றோருக்கு,

வணக்கம். யான் இவ்விடம் இறையருளால் நலமுடையேன். தங்கள் அனைவரதும் நலமறிய ஆவலுடையேன்.

எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் வருட இறுதிப் பரீட்சை நடைபெறவிருக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டு பாடங்களை ஒழுங்காகப் படித்து வருகிறேன். இம்முறை பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவேன் எனத் திடமாக நம்புகின்றேன். செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக வாழப் பழகிக் கொண்டேன்.

தம்பி சிவகுமாரன் ஒழுங்காகப் பாடசாலை செல்கிறானா? தங்கை கமலாவுக்குத் தேவையான பாடநூல்கள் இரண்டு கடந்தவாரம் அஞ்சற் பொதி மூலம் அனுப்பியிருந்தேன். கிடைத்ததா? எல்லோருக்கும் சுகம் கூறவும்.

பதில் எழுதுங்கள்.
வணக்கம்.

தங்கள் அருமை மகன்
சி. அருணோதயன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) நட்புக்கடிதம்

(ஒருவன் தன் நண்பனுக்கு எழுதுவது)

'அயோத்தியா'
12, அண்ணா வீதி,
மல்லாகம்.
10-10-2003.

அன்பு நண்ப,

இவண் நலம். அவண் நலமறிய அவா. மேலும் நீங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்று விபரம் யாவும் அறிந்தேன். நீங்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு பெற்றுள்ள செய்தி அறிந்து மிக்க மகிழ்வடைந்தேன். உங்கள் கல்வித்திறன்கள் மேன் மேலும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன்.

இவ்வாண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழா மேற்பிரிவுப் பேச்சுப் போட்டியில் யானும் கலந்து கொண்டேன். இப்போட்டியில் எனக்கு முதலிடம் கிடைத்ததோடு தங்கப்பதக்கப் பரிசிலும் கிடைத்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உமக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாண்டு இருவரும் மகிழ்ச்சிகரமான செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமை இறையருள் என்றே நினைக்கின்றேன். எப்போ பல்கலைக்கழகம் செல்லவுள்ளீர்கள்?

இவ்விடம் எனது குடும்பத்தினர் அனைவரும் நலமாக உள்ளனர். உன்னுடைய குடும்பத்தினர் நலன்கள் குறித்தும் எழுதுக.

உன் அருமை நண்பன்
த. அழகேசன்.

## 3) அழைப்புக்கடிதம்

50, பிரதான வீதி,
கல்முனை,
15-10-2003.

அன்பு நண்பன் சுரேசுக்கு,

இவ்விடம் நலமுடையேன். அவ்விடம் நலமறிய அவாவுடையேன். மேலும் எனது பிறந்த நாள் எதிர்வரும் 20 ஆம் திகதி (20-10-2003) வருகிறது. எனது பிறந்த நாளை இம்முறை சிறப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுதற்கான ஒழுங்குகளைப் பெற்றோர் மேற்கொண்டு வருகின்றனர். எனது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் நீங்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென விரும்புகின்றேன். நமது நட்புத் தொடரவும் தங்கள் நல்வாழ்த்தினைப் பெறவும் இவ் வைபவம் பெரிதும் உதவுமெனக் கருதுகிறேன். போக்குவரத்துச் சிரமங்களைப் பொருட்படுத்தாது எனது அன்பான இவ் அழைப்பை ஏற்றுத் தவறாது வருவீர்களென எதிர்பார்த்திருக்கிறேன். நன்றி.

உன் அன்பு நண்பன்
மு. மயூரன்.

## 4) வணிகக் கடிதம்

'பாரதி இல்லம்',
புங்குடுதீவு.
30-09-2003

அதிபர்,
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஐயா,

தாங்கள் அண்மையில் வெளியிட்டுள்ள கீழ்க்காணும் நூல்களை மேற்குறித்த முகவரிக்கு கட்டிப் பேற்றஞ்சலில் (V.P.P) அனுப்பியுதவுமாறு வேண்டுகின்றேன்.

ஒரு முறையில் பல நூல்களைக் கொள்வனவு செய்வோர்க்கு எவ்வளவு கழிவு கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்குக.

| | |
|---|---|
| 1. தமிழ் இலக்கண வினா - விடை | - 3 பிரதிகள் |
| 2. கட்டுரைமலர் | - 2 பிரதிகள் |
| 3. சைவ நெறி வினா - விடை (தரம் 9) | - 1 பிரதி |
| 4. சம்பந்தன் கவிதைகள் | - 1 பிரதி |

இங்ஙனம்,
தங்களுண்மையுள்ள,
சி. அருள்வேலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34

# அழைப்பிதழ் எழுதுதல்

அழைப்பிதழ் எழுதுவோர் பின்வருவன குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

அ) அழைப்பிதழ்கள் பல வகைப்படும். அவையாவன: கூட்ட அழைப்பிதழ், திருமண அழைப்பிதழ், குடிபுகல் விழா அழைப்பிதழ், பல்வேறு விழாக்கள் தொடர்பான அழைப்பிதழ்கள்.

ஆ) எழுதப்படும் அழைப்பிதழ் சுருக்கமாகவும் கவர்ச்சிகரமாகவும் அமைதல் வேண்டும்.

இ) நிகழ்ச்சிகள் இடம்பெறும் இடம், காலம், பெயர் என்பன தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.

ஈ) அழைப்பிதழில் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுமிடத்து முதல் எழுத்து, அவரின் பட்டம், பதவி, திரு, திருவாட்டி, செல்வி முதலிய மரியாதை அடைமொழிகள் இடப்படுதல் அவசியமாகும்.

உ) அழைப்பிதழை வாசிப்போர் நிகழ்ச்சியினை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் அது எழுதப்படல் வேண்டும்.

## 1) கூட்ட அழைப்பிதழ்

### நல்லூர் பாரதி கழகம்

பத்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்.

காலம் : 11.09.2003 வியாழக்கிழமை மாலை 4.00 மணி.
இடம் : பாரதி கழக மண்டபம்.
தலைவர் : புலவர் த. இளங்கோவன்.

### நிகழ்வுகள்

1. கடவுள் வணக்கம்.
2. வரவேற்புரை : திரு. த. சிவானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தலைவர் உரை.
4. கடந்த ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை : செயலாளர்
5. கணக்கறிக்கை : பொருளாளர்.
6. சிறப்புரை : 'பாரதி காட்டிய பாதை': வித்துவான் சி. ஆறுமுகம்.
7. நடப்பாண்டு நிருவாகிகள் தெரிவு.
8. பிற.
9. நன்றியுரை.
10. கடவுள் வணக்கம்.

**கழக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

நல்லூர்
1-09-2003.

சி. அன்பழகன்.
செயலாளர்

## 2) திருமண அழைப்பிதழ்

உ

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு ஆண்டு ஆவணித்திங்கள் 24 ஆம் நாள் (10.09.2003) புதன்கிழமை காலை 10.30 மணிமுதல் 11.30 மணி வரையுள்ள நல்லோரையில்

| | |
|---|---|
| எங்கள் சிரேட்ட புதல்வன்<br>திருவளர் செல்வன்<br>**பூங்குன்றனுக்கும்** | நல்லூர் வடக்கு<br>திரு.க. செல்வநாதன் அவர்களின் புதல்வி<br>திருவளர் செல்வி<br>**புவனேஸ்வரிக்கும்** |

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் திருவருள் துணைக்கொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயத்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் சுற்றம் சூழச் சமூகந் தந்து திருமண விழாவைச் சிறப்பித்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

16, புலவர் வீதி,
மானிப்பாய்.
01-09-2003.

த. சிவநாதனும் பாரியாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3** <u>குடிபுகல் விழா அழைப்பு</u>

அன்புடையீர்,

நிகழும் சுபானு ஆண்டு ஆவணித்திங்கள் 10 ஆம் நாள் (10.9.2003) புதன்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரையுமுள்ள நல்வேளையில் நல்லூர் கோவில் வீதியில் கம்பன் கோட்டத்துக்கு அயலில் புதிதாகக் கட்டிய எனது மனையில் யான் குடிபுக இருப்பதால், அந்நிகழ்ச்சியில் கலந்து மகிழ்விக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

நல்லூர்
09.09.2003.

தங்கள் அன்புள்ள,
த. இளங்கோவன்.

**4) <u>நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்</u>**

## இமயஜோதி சுவாமி சிவானந்தர்
## <u>நூல் வெளியீட்டு விழா</u>

| | |
|---|---|
| காலம் | : 19.08.2003 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணி |
| இடம் | : நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம். |
| தலைவர் | : திருமதி. க. சூரசங்காரன் அவர்கள் (உபதலைவர், நல்லூர் திவ்ய ஜீவனசங்கம்) |
| நூல் அறிமுகவுரை | : செல்வி புஷ்பா செல்வநாயகம் |
| நூல் ஆய்வுரை | : திரு. வி. ரி. எஸ். சிவோதயன் |
| சிறப்புரை | : புலவர் த. இளங்கோவன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூரண யோக சமாசம்,
நல்லூர்.
10.8.2003.

சி. உதயன்
செயலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) பரிசளிப்பு விழா அழைப்பிதழ்

**கண்டி ஸாஹிராக் கல்லூரி**

**பரிசளிப்பு விழா**

ஜனாப் / ஜனாபா / செல்வி ........................................ அவர்கள்

2003 - 10 - 04 சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கல்லூரியின் ஜாயா மண்டபத்தில் நிகழவிருக்கும் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முதன்மை விருந்தினர்:
மாண்புமிகு கல்வி அமைச்சர்
**கலாநிதி கருணசேனா கொடித்துவக்கு அவர்கள்**
திருவாட்டி எம். கருணசேனா கொடித்துவக்கு அவர்கள்
பரிசில்களை வழங்குவார்.

கண்டி - அதிபர், ஆசிரியர், மாணவர்
25.9.2003

6) கல்லூரி பாரதி விழாவிற் கலந்துகொள்ளுமாறு அறிஞர் ஒருவருக்கு அழைப்புக் கடிதம்.

புலவர் சி. வேல்முருகன்
50, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ் மன்றம்
யா/பரமேசுவராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
03.09.2003

சிறப்புச் சொற்பொழிவு அழைப்பு

அன்புசால் ஐயா,

எமது கல்லூரித் தமிழ் மன்றம் எதிர்வரும் 11-9-2003ஆம் தேதி பி.ப 4.00 மணிக்கு கல்லூரிப் பிரதான மண்டபத்தில் மகாகவி பாரதியார் விழாவைச் சிறப்பாக நடாத்தவுள்ளது. இவ்விழாவில் கலந்துகொண்டு 'பாரதி காட்டிய பாதை' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். கல்லாரித் தமிழ் மன்றம் தங்கள் பிரயாண வசதியை ஒழுங்கு செய்யும். தங்கள் ஒப்புதலை உடன் தெரிவித்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். வாழ்க தமிழ்.

இங்ஙனம்
க. சிவலிங்கம்
(செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35

# அறிக்கைகள்

## 1) ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை.

### ஆம்பலூர் அண்ணா சனசமூக நிலையம்

#### நான்காவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

ஆம்பலூர் அண்ணா சனசமூக நிலையத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 28.09.2003 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. சி. பத்மநாதன் அவர்கள் தலைமையில் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமானது.

தலைவர் தமது தலைமையுரையில் நிலையத்தினால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து விபரமாக எடுத்துரைத்தார். நிலைய உறுப்பினர்களின் ஒன்றுபட்ட உழைப்பின் பேறாக நிரந்தரக் கட்டடம் உருவாக்கப்பட்டதையும், விளையாட்டு மைதானம் ஒன்றைக் கொள்வனவு செய்தமையையும் மகத்தான சாதனைகளென அவர் சுட்டிக் காட்டினார். இப்பணிகள் நிறைவெய்த உதவியோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

செயலாளரினால் சென்ற வருடாந்தப் பொதுக் கூட்ட வரலாறு வாசிக்கப் பெற்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொருளாளரினால் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது அதுகுறித்து உறுப்பினர் சிலர் வினாக்கள் எழுப்பினர். அவற்றிற்குப் பொருளாளரும் கணக்குப் பரிசோதகரும் தக்க விளக்கமளித்தனர். ஈற்றில் பொருளாளரின் கணக்கறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.வி.சி.சண்முகம் சனசமூக நிலையங்களின் பணிகள் குறித்து எடுத்தரைத்தார். அவரது உரையைத் தொடர்ந்து நிலையத்தின் நடப்பு வருட நிருவாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைவர் | : திரு. சி. பத்மநாதன். |
| உபதலைவர் | : திரு. ந. சண்முகநாதன். |
| செயலாளர் | : திரு. க. குமாரவேல் |
| உபசெயலாளர் | : திரு. பொ. ஸ்ரீரங்கநாதன். |
| பொருளாளர் | : திரு. த. சிவானந்தன். |
| செயற்குழு உறுப்பினர்கள் | : திருவாளர்கள் வே. சுப்பிரமணியம், ச. சதீஸ், மு. மயூரன், திருமதி. செ. மலர்மணி. |

இவர்களது பெயர்களைத் திரு. சி. துரையப்பா முன்மொழியச் சபையோர் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். கணக்காளராக திரு. க. அன்பழகன் அவர்களின் பெயரைத் திரு. சி. நல்லையா முன்மொழிந்தார். சபை அதனை ஏற்றுக் கொண்டது. ஈற்றில் செயலாளரின் நன்றியுரையுடனும் தலைவரின் நிறைவுரையுடனும் கடவுள் வணக்கத்துடனும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

த. பூங்குன்றன்
செயலாளர்.

2)

## மகிழூர் மகாவித்தியாலயம் தமிழ் மன்றத்தின் ஆண்டறிக்கை

மகிழூர் மகாவித்தியாலயத் தமிழ் மன்றத்தின் கடந்த ஆண்டறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்வுறுகிறேன். கடந்த ஓராண்டு காலத்தில் இம்மன்றம் ஆற்றியுள்ள பணிகள் என்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்க வகையில் உள்ளன.

மன்றத்தின் சார்பில் 10.06.2002 இல் தமிழ்மொழித் தின விழா சிறப்புற நடைபெற்றது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்விப்பணிப்பாளர் திரு. த. இளஞ்செழியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். தமிழ்த்தின விழாப் போட்டியில் வெற்றி பெற்றோர் அனைவருக்கும் நூற்பரிசில்கள் வழங்கப்பட்டன.

11.09.2002 இல் பாரதி விழாவைச் சிறப்புற நடத்தினோம். இவ்விழாவில் கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள் ஆதியன இடம்பெற்றன. தமிழ்மன்றத் தலைவர் செல்வன் சி. அருணோதயன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புலவர் பூங்குன்றன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மாணவர்களிடையே எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்குடன் 15.10.2002 இல் கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற இப்போட்டிகளில் 120 பேர் பங்கு கொண்டனர். போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர்க்கு இன்று நிகழும் ஆண்டு விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தமிழுக்கும், சைவத்துக்கும் அருந் தொண்டாற்றிய நல்லை நகர் தவத்திரு. ஆறுமுகநாவலரின் நினைவுத் தினத்தை வழமைபோல் இம்முறையும் சிறப்பாகக் கொண்டாடினோம். அன்றையதினம் சங்கீதபூஷணம் கா. சந்திரபாலன் அளித்த இன்னிசைக் கச்சேரி அனைவரதும் பாராட்டைப் பெற்றது.

மன்றத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சிறப்புற நிகழ்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், உறுப்பினர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியை இவ்வறிக்கை மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாகப் பரிசில்கள் தந்துதவிய பெருமக்களுக்கும் நிதி உதவி வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் எம் நன்றி என்றுமுரியது. எதிர்காலத்திலும் இம்மன்றத்தின் பணிகள் மேன் மேலும் சிறந்தோங்க உங்களனைவரதும் ஒத்துழைப்பை நாடி இவ்வறிக்கையினை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

செயலாளர்.
தமிழ் மன்றம்.

3) பாடசாலைத் தமிழ்மொழித் தின விழா பற்றிப் பத்திரிகைக்கான செய்தி

ஸ்ரீகணேச மகாவித்தியாலயம்,
புங்குடுதீவு.
10.08.2003.

ஆசிரியர் அவர்கள்,
'வீரகேசரி',
கொழும்பு.

ஐயா,

பின்வருஞ் செய்தியினைத் தங்கள் மேலான பத்திரிகையில் பிரசுரித்து உதவுமாறு வேண்டுகின்றேன். நன்றி.

இங்ஙனம்,
மா. பிரகலாதன்.
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று வாழும் சக்தி மிக்கது தமிழ் மொழி

## தமிழ்த்தின விழாவில் புலவர் மணிவண்ணனார்

- புங்குடுதீவு ஆக. 8

'தமிழ்மொழி காலத்திற்கு ஏற்பத் தனது இலக்கிய வடிவங்களில் பல மாற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. மாற்றங்களை ஏற்றுக் கொண்டு மாண்புடன் விளங்க முடியாத ஒரு மொழி காலத்தால் மறைந்து விடும். உலகில் பல மொழிகள் இவ்வாறு மறைந்தும், குறைந்தும் போயுள்ளன. ஆனால் என்றுமுளதென்றமிழாகத் தமிழ் வாழுகின்றது என்றால் அதன் சிறப்பியல்புகள் வலிமையானவை என்பதுடன், அவ்வலிமை காட்டும் இலக்கியங்களை நாம் தேடிக் கற்றல் வேண்டும்!' இவ்வாறு புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத் தமிழ்த்தின விழாவில் சிறப்புரையாற்றிய புலவர். பொன். மணிவண்ணனார் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தமிழ் மன்றத் தலைவர் திரு. செ. செங்கமலன் தலைமை வகித்தார். 'தமிழர் காப்பியம்' சிலப்பதிகாரமா? கம்பராமாயணமா? என்ற தலைப்பில் சுவையான பட்டிமன்றம் பாவலர். பா. மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் பொ. பெருமையினார், இ. சிங்காரவேல், மு. தவஞானம், சி. மாதவனார் ஆகியோர் இதிற் கலந்து கொண்டு வாதிட்டனர்.

'வலிமை சேர்ப்பது...!' என்ற தலைப்பில் நடந்த கவியரங்கில், கவிஞர்கள் பொன்கையூர்ப்புலவர், தீனதயாளன், அருணகிரிதாசர், அடலேறு, ஆனந்த வாசகர் ஆகியோர் கலந்து கொண்டு கவிமழை சொரிந்தனர். 'மறத்தமிழ் மன்னன் சங்கிலியன்' என்ற வீரமிகு நாடகம் நடிக்கப் பெற்றது. இந்நாடகத்தில் தமிழ்மன்ற மாணவ, மாணவியர் கலந்து கொண்டு சிறப்பாக நடித்தனர். தமிழ்த்தின விழாவின் வரவேற்புரையை தமிழ்மன்றக் காப்பாளர் ஆசிரியர் செல்வி. சிவசாந்தி பீ.ஏ.யும் நன்றியுரையை தமிழ் மன்றச் செயலாளர் செல்வி. மு. கலாதேவியும் நிகழ்த்தினர். இத்தமிழ்த்தின விழா நிகழ்ச்சிகள் அனைவர் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று நிலைத்து விட்டது!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
3. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
4. அச்சாணி இல்லாததேர் முச்சாணும் ஓடாது.
5. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
7. அடாது செய்தவன் படாது படுவான்.
8. அடிசெய்கிறது அண்ணன் தம்பி செய்யார்.
9. அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமும்.
10. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
11. அடியாத மாடு படியாது.
12. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
13. அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
14. அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
15. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
16. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
17. அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்.
18. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
19. அரைக்காசுக்குக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.
20. அரைக்காசுக்குக் குதிரையும் வேண்டும் ஆறுகடக்கப் பாயவும் வேண்டும்.
21. அலை எப்போது ஒழியும், தலை எப்போது முழுகுவது?
22. அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.
23. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு.
24. அவப்பொழுதிலும் தவப்பொழுது நல்லது.
25. அவள்பேர் கூந்தலழகி அவள் தலை மொட்டை.
26. அழகிருந்தென்ன அதிட்டம் இருக்க வேண்டும்
 அழச் சொல்வார் தமர்; சிரிக்கச் சொல்வார் பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன கழுதை மேய்ந்தாலென்ன.
28. அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்.
29. அழகேசன் ஆனாலும் அளவறிந்து செலவு செய்ய வேண்டும்.
30. அளக்கிற நாழி அகவிலையறியுமா?
31. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
32. அறப் படித்தவன் அங்காடி போனால் விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
33. அறிந்தறிந்து செய்யும் பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.
34. அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும் அடியிலிறங்கித்தான் காசு வாங்க வேண்டும்.
35. அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
36. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.
37. அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.
38. அவனன்றி ஓரணுவும் அசையாது.
39. அழுதபிள்ளை பால் குடிக்கும்.
40. ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.
41. ஆசை இருக்கிறது அரசன் ஆக; அதிட்டம் இருக்கிறது கழுதை மேய்க்க.
42. ஆசை வெட்கம் அறியாது.
43. ஆடத் தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம்.
44. ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்கிற மாட்டைக் பாடிக் கறக்க வேண்டும்
45. ஆடிக்காற்றிலே அம்மி பறக்கும்போது இலவம் பஞ்சுக்கு எங்கே கதி.
46. ஆடு கொழுக்கிறது இடையனுக்கு லாபம்.
47. ஆரால் கேடு வாயால் கேடு.
48. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இருக்க வேண்டும்.
49. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை.
50. ஆழமறியாமல் காலை விடாதே.
51. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
52. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
53. ஆறுகடக்கிறவரை அண்ணன் தம்பி.
54. ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு.
55. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
56. ஆனைக்கும் அடி சறுக்கும்.
57. ஆனைவரும் பின்னே மணிஓசைவரும் முன்னே
58. இஞ்சி லாபம் மஞ்சளிலே
59. இடுகிறவள் தன்னவளானால் அடிப்பந்தியிலிருந்தாலென்ன கடைப்பந்தியிலிருந்தாலென்ன.
60. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
61. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை.
62. இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும்.
63. இரவற் சீலையை நம்பி இடுப்பிற் கந்தையை எறியாதே.
64. இராச மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதான்.
65. இருந்தால் மூதேவி நடந்தால் சீதேவி.
66. இல்லாது பிறவாது அள்ளாது குறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. இழவுக்கு வந்தவள் தாலியறுப்பாளா?
68. இறுகினால் களி இளகினால் கூழ்.
69. இக்கரைக்கு அக்கரை பச்சை.
70. இறைக்கின்ற கிணறு ஊறும்.
71. இளங்கன்று பயமறியாது.
72. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
73. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
74. ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.
75. உடும்பு போனால் போகிறது கைவந்தால் போதும்.
76. உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இராது.
77. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
78. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ?
79. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
80. உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
81. உழுகிற மாடானால் உள்ளூரில் விலையாகாதா?
82. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதா?
83. உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது.
84. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
85. ஊர்வாயை மூட உலை மூடியில்லை.
86. எண்ணெய் முந்துமோ திரி முந்துமோ?
87. எதிர்த்தவன் ஏழையென்றால் கோபம் சண்டாளன்.
88. எரிகிறது விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
89. எளியாரை வலியார்கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்.
90. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
91. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
92. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
93. ஏருழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான்முறை கொண்டாடும்.
94. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
95. ஐயர் வருகின்றவரையில் அமாவாசை நிற்குமா?
96. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
97. ஐந்து காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வராது.
98. ஓதிய மரம் தூணாமோ ஒட்டாங்கிளிஞ்சில் காசாமோ?
99. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை.
100. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
101. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமோ?
102. கடல் மீனுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா?
103. கடவுளை நம்பினார் கைவிடப்படார்.
104. கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும்.
105. கடன் வாங்கியும் பட்டினி கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
106. கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குநீர் குடித்தால் தீருமோ?
107. கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாமோ?
109. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
110. கழுதை கெட்டால் குட்டிச் சுவர்.
111. கனவிலே கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
112. கண்ணாடி நிழலில் கண்ட பணம் கடனுக்கு உதவாது.
113. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
114. காப்புச் சொல்லும் கை மெலிவை.
115. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.
116. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
117. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு.
118. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
119. குயவனுக்கு ஆறுமாதம் தடியடிகாரனுக்கு அரை நாழி.
120. குந்தித்தின்றால் குன்றும் மாளும்.
121. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.
122. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?
123. குரைக்கிற நாய் கடியாது.
124. குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர்.
125. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி நிறம் மாறாது.
126. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
127. கொல்லன் தெருவில் ஊசி விலைபோகுமா?
128. கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா?
129. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
130. கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை.
131. சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்.
132. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
133. சிறிய பாம்பானாலும் பெரியதடி கொண்டடி.
134. சுட்டசட்டி அறியுமோ அப்பத்தின் சுவையை.
135. சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுதலாம்.
136. சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால்பணம்.
137. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை சேராது.
138. செருப்புக்காகக் காலைத் தறிப்பதா?
139. சேற்றில் புதைந்த யானையைக் காக்கையும் கொத்தும்.
140. தங்கையின் பிள்ளை தன் பிள்ளையானால் - தவத்துக்குப் போவானேன்.
141. தம்பியுடையான் சண்டைக் கஞ்சான்.
142. தன்வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா?
143. தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சேலை.
144. தாலியறுத்தவளுக்கு மருத்துவிச்சி தயவு ஏன்?
145. தாய் முகம் காணாத பிள்ளையும் மழைமுகம் காணாத பயிரும்.
146. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
147. துணை போனாலும் பிணை போகாதே.
148. தென்றல் முற்றிப் பெருங் காற்றாகும்.
149. தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்துவிட்டவனுக்கே கொட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
151. நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
152. நாய் விற்ற காசு குரைக்குமா?
153. நித்தம் போனால் முத்தம் சலிக்கும்.
154. நீர் உள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளும்.
155. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
156. நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
157. பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
158. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
159. பணம் இல்லாதவன் பிணம்.
160. பலதுளி பெருவெள்ளம்.
161. பதறாத காரியம் சிதறாது.
162. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
163. பார்த்தால் பசு பாய்ந்தால் புலி.
164. பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.
165. புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.
166. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
167. பெண் என்றால் பேயும் இரங்கும்.
168. பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டுமா?
169. போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து.
170. மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினாற் போதும்.
171. மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி.
172. மனம் போல மாங்கல்யம்.
173. மருந்தேயானாலும் விருந்தோடு உண்.
174. மாமியார் உடைத்தால் மண்கலம்: மருமகள் உடைத்தால் பொன்கலம்.
175. முள்ளின் மேல் சீலை போட்டால் மெள்ள மெள்ள வாங்க வேண்டும்.
176. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
177. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
178. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
179. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
180. மேழி பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்.
181. யதார்த்தவாதி வெகுசன விரோதி.
182. யானை அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும்.
183. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
184. யானை படுத்தால் குதிரை மட்டம்.
185. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
186. வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்.
187. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை.
188. வெறும் கை முழம் போடுமா?
189. வேண்டாற் பெண்டில் கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்.
190. வேலைக்கள்ளிக்கு பிள்ளைப் பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37

## உவமைகள்

1. அமிர்தம் போலும் அடிசில்
2. அன்னம் போலும் நடை
3. அன்னை போலும் ஆதரவு
4. அரம் போலும் கூர்மை
5. அன்றலர்ந்த மலர் போல
6. அடுத்தது காட்டும் பளிங்கு போல
7. அழகுக்கு அழகு செய்வது போல
8. ஆனை போலத் தீமையை மறவாமை
9. ஆற்றொழுக்குப் போலும் உரைநடை
10. இடியேறு போலும் முழக்கம்
11. இரத்தினச் சுருக்கம் போன்ற பேச்சு
12. இராசோபசாரம் போன்ற உபசாரம்
13. இருள் போலும் கருமை
14. இஞ்சி தின்ற குரங்கு போல
15. உடும்பு போலப் பிடித்தது விடாமை
16. உவர்க் கடலனைய செல்வன் (ஈயாதவன்)
17. எள்ளினுள் எண்ணெய் போல
18. எட்பூப் போலும் மூக்கு
19. ஏறு போன்ற நடை
20. கங்கை போலும் புனிதம்
21. கடல் போன்ற கல்வி (பரந்த கல்வி)
22. கடல் போல முழங்குதல் (இரைதல்)
23. கமலம் போலும் கை - முகம் - கண்
24. கயல் போலும் கண்
25. கற்றாப் போலக் கதறலும் பதறலும்
26. கன்று போலத் துள்ளும்
27. காந்தல் போலும் கைவிரல்
28. காகம் போலும் கருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. கிளி போலும் மொழி
30. கிணற்றுத் தவளை போல
31. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
32. குடத்துள் விளக்குப் போலும் (அடக்கமான புகழ்)
33. குதிரை போலத் தாவுதல்
34. குமிழ் போலும் நாசி
35. குயில் போலும் குரல்
36. குரங்கு போலும் மனம்
37. குவளை போலும் விழி
38. சிங்கம் போலக் கர்ச்சித்தல்
39. சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை போல
40. சிறகிழந்த பறவை போல
41. சூறாவளி போலும் வேகம்
42. சூரியனைக் கண்ட பனி போல
43. செந்தமிழும் சுவையும் போல
44. தராசு போலும் நடுவு நிலைமை
45. தாமரை போலும் பாதம் - முகம்
46. தழலில் இட்ட மெழுகு போல
47. திங்கள் போலும் வதனம்
48. தினை போலும் சிறுமை
49. தீப் போலும் வெம்மை, கொடுமை
50. துரும்பு போலும் மெலிவு
51. துடி போலும் இடை
52. தூண் போலும் தோள்
53. தென்றல் போலும் மொழி
54. நரி போலும் தந்திரம்
55. நாய் போலும் நன்றி மறவாமை
56. நகமும் சதையும் போல
57. நவில்தொறும் நூல்நயம் போல
58. நாய் வாலை நிமிர்த்தியதைப் போல
59. நீர்க்குமிழி போலும் நிலையாமை
60. நெருப்புப் போலும் கோபம்
61. பஞ்சு போலும் நரை
62. பசுப் போலும் சாந்தம்
63. பருந்தும் நிழலும் போலப் பிரியாமை
64. பவளம் போலும் உதடு
65. பளிங்கு போன்ற நெஞ்சு
66. பறையடித்தாற் போலப் பலருமறியச் செய்தல்
67. பனை போலும் நெடுமை
68. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
69. பள்ளத்துள் பாயும் வெள்ளம் போல
70. பழமரம் நாடிய பறவை போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பாம்பு போலச் சீறுதல்
72. பாலும் நீரும் போலும் ஒற்றுமை
73. பாம்பின் வாய்த் தேரை போல
74. பாலும் பழமும் போல
75. பால் நினைந்தூட்டும் தாய் போல
76. பிடி போலும் நடை
77. பிள்ளைபோல் கள்ளமில் சிந்தை
78. பிறை போலும் நுதல்
79. பூனை போலப் பதுங்குதல்
80. பூனையைக் கண்ட எலி போல
81. மயில் போலும் சாயல்
82. மலைபோலும் தோள்
83. மலைபோலும் அசையாமல்
84. மல்லிகைப் பூப்போலும் சோறு
85. மழை போலும் கொடை
86. மழை முகம் காணாப் பயிர் போல
87. மலரும் மணமும் போல
88. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல
89. மலடிவயிற்று மகன் போல
90. மணியும் ஒலியும் போல
91. மான் போலும் மருண்ட நோக்கு
92. மின்னல் போலும் இடை
93. மீன் போல பிறழுதல்
94. முத்துப் போலும் பல்
95. முல்லைப் பூப்போலும் பல்
96. முசுப் போல முன்காந்திருத்தல் (உட்கார்ந்திருத்தல்)
97. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
98. முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல
99. வலம்புரி முத்துப் போலும் குலம்புரி பிறப்பு
100. வடுவகிர் போலும் கண்
101. வறியவன் வாய்ச்சொல் போல
102. வாயு போலும் வேகம்
103. வாள் போலும் கண்
104. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியதைப் போல
105. வில் போலும் வளைவு
106. விஷவேகம் போலும் விலையேற்றம்
107. விழலுக்கிறைத்த நீர் போல
108. வெண்கலக்கடையில் யானை புகுந்தது போல
109. வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல
110. வெறுங்கையால் முழம் போடுவது போல
111. வெயிலில் பட்ட புழுப் போல
112. வேல் போலும் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38

## உவமைச் சொற்றொடர்

அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
அக்கினியிற் பட்ட மெழுகு போல
அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல
அச்சில்லா வண்டி போல
அடுத்தது காட்டும் பளிங்கு போல
அடியற்ற மரம் போல
அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டினாற் போல
அடைகாக்கும் கோழி போல
அத்தி பூத்தாற் போல
அம்பட்டன் குப்பையைக் கிளறினால் ஆவது போல
அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
அரிசி கிள்ளிய காகம் போல
அழகுக்கு அழகு செய்வது போல
அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல
அனலிடைப்பட்ட மெழுகு போல
அன்னநடை நடக்கப்போய் தன்னடையும் கெட்ட காகம் போல
ஆடி ஓய்ந்த பம்பரம் போல
ஆகாயத்திற் கோட்டை கட்டுவது போல
ஆண்டிகள் கூடி மடம் கட்டியமை போல
ஆந்தை விழிப்பது போல
ஆப்பிழுத்த குரங்கின் நிலை போல
ஆலையில் அகப்பட்ட கரும்பு போல
ஆறிடு மேடும் மடுவும் போல
ஆனைவாயிற் கரும்பு போல
ஆற்றங்கரை மரம் போல
ஆற்றிற் கரைத்த புளி போல
ஆனை கட்டச் சங்கிலிதான் கொடுத்தவாறு போல
ஆனை தன் தலையில் மண் வாரி இட்டது போல
இடியொலி கேட்ட நாகம் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிந்தவை விரும்பும் ஈயைப் போல
இலவு காத்த கிளி போல
இருதலைக் கொள்ளியுள் எறும்பு போல
இலைமறை காய் போல
இணை பிரிந்த அன்றில் போல
இரண்டு தோணியிற் கால் வைத்தது போல
இரும்பும் காந்தமும் போல
இனம் பிரிந்த மான் போல
ஈருடலும் ஓருயிரும் போல
உட்சுவரிருக்கப் புறச்சுவர் கோலஞ் செய்வது போல
உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
உடுக்கை இழந்தவன் கை போல
உமி குற்றிக் கை சலித்தது போல
உயிரும் உடம்பும் போல
உள்ளங்கை நெல்லிக்கனி போல
ஊமை கண்ட கனவு போல
ஊருணி நீர் நிறைந்தமை போல
ஊழித் தீப் போல
ஊசியின் வழியே செல்லும் நூல் போல
எட்டி பழுத்தாற் போல
எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல
எய்தவன் இருக்க அம்பை நோவது போல
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டது போல
எடுப்பார் கைப் பிள்ளை போல
எலியும் பூனையும் போல
ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாமை போல
ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல
ஏழை சொல் அம்பலம் ஏறாமை போல
ஏறாமடைக்கு நீர்ப் பாய்ச்சினாற் போல
ஏறவிட்டு ஏணியை எடுத்தாற் போல
ஒருநாட் கூத்துக்குத் தன் மீசையைச் சிரைத்தாற் போல
ஒளியைக் கண்ட இருள் போல
ஒருதாய் வயிற்றுப் பிள்ளை போல
ஓருயிரும் ஈருடலும் போல
ஓடும் புளியம்பழமும் போல
ஓர் ஆ வானது இரண்டு கன்றுக்கு இரங்குவது போல
ஓட்டைக் குடத்துக்கு வார்த்த நீர் போல
கடலைக் கையால் நீந்திக் கடக்க முயன்றாற் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் பட்டார் நெஞ்சம் போல
கட்டுக்கடங்காக் காளை போல
கண்ணாடி வீட்டிலிருப்பவன் கல் வீட்டில் கல்லெறிந்தாற் போல
கண்ணிலான் பெற்று இழந்தாற் போல
கருடனைக் கண்ட பாம்பு போல
கரும்பு தின்னக் கைக்கூலி கேட்டாற் போல
கலங்கரை விளக்கம் போல
கல்லின் மேல் எழுதிய எழுத்துப் போல
கல்லில் நார் உரிப்பது போல
கரடி பிறை கண்டது போல
கரை காணாக் கப்பல் போல
கனியிருக்கக் காய் கவர்ந்தாற் போல
கன்றைப் பிரிந்து கதறும் பசு போல
கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போல
கண் கெட்டபின் சூரிய வணக்கம் செய்வது போல
கரும்பிருக்க இரும்பு கடித்து எய்த்தாற் போல
காகம் உறவு கலந்துண்பது போல
காகம் உட்காரப் பனம்பழம் விழுந்தது போல
காட்டில் எறித்த நிலவு போல
காந்தம் இரும்பை இழுப்பது போல
காய்த்த மரத்தில் கல்லெறி விழுவது போல
காலத்திற் பெய்த மழை போல
காலுக்கிட வேண்டியதைத் தலைக்கிட்டாற் போல
காற்றுடன் சேர்ந்த நெருப்புப் போல
கார்த்திகைப் பிறை கண்டது போல
கிளியை வளர்த்துப் பூனை வாயில் கொடுத்தது போல
கீரியும் பாம்பும் போல
குங்குமஞ் சுமந்த கழுதை போல
குடத்துள் வைத்த விளக்குப் போல
குடியிருந்த வீட்டிற் கொள்ளி சொருகினாற் போல
குரங்கின் கைப் பூமாலை போல
குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல
குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போல
குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டினாற் போல
குளிக்கப் போய்ச் சேறு பூசியது போல
குன்று முட்டிய குருவி போல
குன்றின் மேலிட்ட தீபம் போல
கொல்லர் தெருவிலே ஊசி விற்றல் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுகொம்பற்ற கொடி போல
சந்திரனில்லா வானம் போல
சமன் செய்து சீர்தூக்கும் தராசு போல
சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்தாற் போல
சாடிக்கு மூடி வாய்த்தாற் போல
சிவபூஜை வேளையில் கரடி புகுந்தது போல
சுடச்சுட ஒளிரும் பொன் போல
சூரியன் முன் மின்மினி போல
சூரியனைக் கண்ட இருள் போல
செவிடன் காதிற் சங்கு ஊதியது போல
சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல
தங்கக் கம்பி போல
தரித்திரனுக்குப் புதையல் அகப்பட்டது போல
தாமரை இலையில் நீர் போல
தானே வரும் சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளியது போல
திங்களைக் கண்டு பொங்கும் கடல் போல
திரிசங்கு சுவர்க்கம் போல
தீட்டிய மரத்திற் கூர்மை பார்ப்பது போல
துரும்பு பெருத்துத் தூணானது போல
தூண்டு சுடர் போல
தூண்டிலில் அகப்பட்ட மீன் போல
தேடிய பூண்டு காலிலே சிக்கியது போல
தொட்டனைத்தூறும் மணற்கேணி போல
தோளில் இருந்து செவியைக் கடிப்பது போல
நடுவூரில் நல்ல மரம் பழுத்தமை போல
நவில் தொறும் நாணயம் போல
நகமும் சதையும் போல
நல்ல மரத்தில் புல்லுருவி போல
நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தாற் போல
நரி வால் கொண்டு கடல் ஆழம் பார்த்தல் போல
நாய் வாலைச் சீர்ப்படுத்த முயன்றவாறு போல
நாய்க்குத் தவிசிட்டது போல
நீர்மேல் எழுத்துப் போல, நீர்க்குமிழி போல
நீறு பூத்த நெருப்புப் போல
நுனிப்புல் மேய்ந்தது போல
நெருப்பில் விழுந்த நண்டு தணலைக் கவ்வுவது போல
பசுமரத்து ஆணி போல
பசுத்தோல் போர்த்த புலி போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தி புடவையாய்க் காய்த்தது போல
பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
பழமரம் நாடிய பறவை போல
பாலுந் தேனும் கலந்தாற் போல
பாம்புக்கு பால் வார்த்தாற் போல
பாவிடை ஆடு குழல் போல
பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தமை போல
புதையல் காத்த பூதம் போல
புளியம்பழமும் ஓடும் போல,
புறக்குடத்தில் வார்த்த நீர் போல
பூவோடு சேர்ந்த நாரும் புனிதர் முடியேறுவது போல
பெட்டிப் பாம்பு போல
பேய்க்கு வேப்பிலை போல
பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டது போல
போன சுரத்தைப் புளி விட்டழைத்தது போல
மதில் மேற் பூனை போல
மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல
மழைமுகம் கண்ட பயிர் போல
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
முயற் கொம்பு போல
முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது போல
மீகாமன் இல்லாத மரக்கலம் போல
மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி என்றாற் போல
வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போல
வலையிற் சிக்கிய மான் போல
வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தமை போல
வாடும் பயிருக்கு வான் மழை போல
வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல
விளக்கொடு விளையாடும் விட்டில் போல
விரிவெயிலில் விளக்கொளி போல
விழலுக்கிறைத்த நீர் போல
விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போல
வெங்கலக் கடையில் யானை புகுந்தது போல
வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தது போல
வெந்த புண்ணில் வேல் பாய்ந்தாற் போல
வெயிலிற் பட்ட புழுப்போல
வெள்ளிடை மலை போல
வேலிபயிரை மேய்ந்தாற் போல
வைக்கோல் போரில் நாய் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகின்றன!

## 9 ஆந் தர மாணவர்களுக்கான நூல்கள்.

- தமிழ் மொழியும் இலக்கியமும் (செயல் நூல்)
  ஆக்கம்: கவிஞர் த. துரைசிங்கம்.
- சைவநெறி வினா – விடை
  ஆக்கம்: கவிஞர் த. துரைசிங்கம்.
- தமிழிலக்கணம் வினா – விடை (தரம் 9,10,11)
  ஆக்கம்: கவிஞர் த. துரைசிங்கம்.
- கர்நாடக சங்கீதம் (தரம் 9,10,11வரை)
  ஆக்கம்: செல்வி அநேகா இளங்கோவன்.
- **MODEL ESSAYS (Grade 9,10,11)**
  by: T. Thuraisingham.
- பரத நாட்டியக்கலை (தரம் 9,10,11)
  ஆக்கம்: செல்வி நிலா இளங்கோவன்.
- விடுகதை விருந்து
  ஆக்கம்: திருமதி யசோதா பாஸ்கரன்.
- இலக்கண வினா – விடை
  ஆக்கம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.
- **MINI ESSAYS**
  by: T. Thuraisingham.

விற்பனையாளர்:

**லங்கா புத்தகசாலை,**

**F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,**

**கொழும்பு - 12.**

**T.P: 2341942**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org